REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மார்ச் 8 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 57 | Tuesday 08, March, 2022 | 32 பக்கங்கள் | 30/-



நீங்கள் விரும்பும் 9 App வேண்டியளவு data 398 ரூபா
செயற்படுத்திட பிரவேசியுங்கள் SELFCARE APP
SLTMOBITEL


## வீதி விளக்குகளை அணைத்து வைக்குமாறு வேண்டுகோள்

### உள்ளூராட்சி தலைவர்களிடம் பசில் கோரிக்கை



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியை கவனத்திற்கொண்டு எதிர்வரும் 31ம் திகதி வரை அனைத்து வீதி விளக்குகளையும் அணைத்துவிட நடவடிக்கையெடுக்குமாறு நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அனைத்து உள்ளூராட்சி சபை தலைவர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். அதேவேளை, மின்சாரத்தை

06

### தாயாக, மகளாக, சகோதரியாக, பாட்டியாக

## சமூகத்தை வழி நடத்தும் துணிச்சல் மிக்க பெண்களின் அர்ப்பணிப்பு

### மகளிர் தினத்தில் பிரதமர் மஹிந்த வாழ்த்து



கொவிட் தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் ஏற்பட்ட பல்வேறு சிரமங்களை சமாளிப்பதற்கு தொலைநோக்கு சிந்தனையுடன், சிக்கனமாகவும் பொறுமையாகவும் செயற்படும் பெண்கள் நாட்டில் காணப்படும் சவால்களை வெற்றி கொள்வதற்கு பெற்றுக் கொடுக்கும் சிறந்த பங்களிப்பு நம் அனைவருக்குமான தைரியமாகும் என பிரதமர்

06

### நிலையான, நம்பிக்கை தரும் எதிர்காலத்திற்கு

## பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னேறும் பெண்கள்

### மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த



பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவது தொடர்பான தேசிய அளவிலான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் கண்காணிக்க விசேட கவனம் செலுத்தியுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் மேம்பாட்டு முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உள்கட்டமைப்பு

06

### மசகு எண்ணெய் விலை அதிகரிப்பால் லீற்றருக்கு ரூ. 80 நஷ்டம்

# வியாழக்கிழமைக்கு முன்னர் எரிபொருள் கியூவிற்கு முற்று

- வழமை நிலைக்கு கொண்டுவரப்படும் என அரசு உறுதி
- எரிசக்தி அமைச்சராக பதவியேற்ற பின்னர் காமினி லொக்குகே நேற்று தெரிவிப்பு



ஷம்ஸ் பாஹிம்

எண்ணெய் கப்பலுக்காக 35 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த தயாராக இருந்த போதும் உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 130 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதால் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டிய நிலை தோன்றியுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இதனால் லீற்றருக்கு 80 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்,

06


இன்னும் 09 தினகரன்




ஹம்பாந்தோட்டை மாகம்புர மிரிஜ்ஜவிலை கைத்தொழில் வலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய சீமெந்து உற்பத்தி தொழிற்சாலையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தனர். அமைச்சர் சமல் ராஜபக்ஷவும் காணப்படுகிறார்.

### 2016இல் ஐ.நா அலுவலக முன் ஆர்ப்பாட்டம்;

## விமல் வீரவங்சவுக்கு எதிரான வழக்கு மே 30 இல் விசாரணை



03

## ஒட்டுமொத்த மக்களையும் சோகத்தில் ஆழ்த்திய ராஜா



இலங்கையில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த யானையொன்று தனது 69 ஆவது வயதில் நேற்று உயிரிழந்துள்ளது.

தலதா மாளிகையில் நீண்டகாலமாக பணியாற்றிய யானை, வயது மூர்ப்பு காரணமாக உயிரிழந்துள்ளது.

கண்டி

06

## நாடெங்கும் பாடசாலைகள் நேற்று முதல் மீள ஆரம்பம்

### மாணவர்களது வருகையில் திருப்தி நிலை




லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் கொரோனா சூழ்நிலை மற்றும் கல்வி பொதுத் தராதர

06

## உக்ரைன் சரணடையாவிடின் படையெடுப்பு தொடரும்

### ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அறிவிப்பு



03

## அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு குறித்து ஆராய்வு

### கண்காணிக்க விசேட வேலைத்திட்டம்



சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு நிலவுகின்றதா என்பது தொடர்பில், கண்காணிப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை

06

## ஐ.ம.ச அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்!

03

## அமைதியாக இருக்க ஐ.தே.க தயாரில்லை

### பாலித ரங்கே பண்டார அறிவிப்பு



பொது மக்களுக்கான அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்த முடியாவிட்டால், பதவி விலகுமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார விடுத்துள்ள அறிக்கையில், தற்போதைய நிர்வாகம்

06

## மசகு எண்ணெய் விலை சர்வதேச சந்தையில் உச்சம்

### 14 வருடங்களின் பின் 130 டொலராக உயர்வு



சர்வதேச சந்தையில் ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 14 வருடங்களுக்குப் பின்னர் 130 டொலராக உயர்வடைந்துள்ளது.

ரஷ்யா – உக்ரைன் போர் காரணமாக மசகு எண்ணெய் விலை நாளுக்கு நாள் உயர்வடைந்து வருகின்ற நிலையில் இறக்குமதியாளர்களும் கடும் நெருக்கடியை சந்தித்து வருகின்றனர்.

06

## வாகன விபத்துகளில் ஒரே நாளில் 13 பேர் பலி



நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் (06) இடம்பெற்ற வாகன விபத்துகளில் 12 வயது சிறுவன் மற்றும் இரு பெண்கள் உள்ளிட்ட 13 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இவற்றில் பெரும்பாலான

06

## ஐ.ம.ச, ஜே.வி.பியுடன் கூட்டணிக்கு இடமில்லை

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. என்பன அழைப்பு விடுத்தால் கூட அக்கட்சிகளில் இணையும் எண்ணம் எமக்கு இல்லை என்றும் அவர்களுடன் பேச வேண்டிய தேவை கிடையாது எனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். இது தொடர்பில்

06

## நாடெங்கும் தொடரும் காஸ் தட்டுப்பாடு நிலை

### 06 நாட்களாக 03 கப்பல்கள் கடலில்




நாடளாவிய ரீதியில் மீண்டும் பாரிய சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகிறது.

கடந்த 6 நாட்களாக எந்தவொரு சமயல் எரிவாயு சிலிண்டரையும் சந்தைக்கு விநியோகிக்கவில்லை என பிரதான சமையல் எரிவாயு விநியோக நிறுவனமான ' லிட்ரோ ' நிறுவனத்தின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கும் நிலையில், பல

06

### விக்கல் வீராச்சாமி



மலையக மக்களது பிரச்சினைக்கு விரைவில தீர்வு கண்டு தருவோம் எண்டு தமிழ் கூட்டமைப்பு தலைவர்கள் மலையகத்தில வச்சு உறுதியளிச்சுருக்கினம்....

அப்ப இனி அந்த மக்களின்ர பிரச்சனைகள் எல்லாம் தீர்ந்த மாதிரிதான், எப்படி எண்டால் வடக்கு – கிழக்கில பிரச்சினைகள் தீர்ந்த மாதிரி...!!!


TRIPLE BLASTER இப்போது புதுப்பொழிவுடன்!
Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு
எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS
Anytime Data 1.5GB
மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)
செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்
*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே ! நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09
Dialog எதிர்காலம் இன்றே.

# ஹம்பாந்தோட்டையில் சீமெந்து உற்பத்தி தொழிற்சாலை ஜனாதிபதியால் திறப்பு

































## நெதுன்கமுவே ராஜா யானை தேசிய பொக்கிஷமாக பிரகடனம்

### ஜனாதிபதி பணிப்புரை

ஸ்ரீ தலதா புண்ணிய கரடுவவை ஏந்திச் சென்ற இறந்த, நெதுன்கமுவே ராஜா யானையை தேசிய பொக்கிஷமாக பிரகடனப்படுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்கால சந்ததியினரின் பார்வைக்காக நெதுன்கமுவே ஹஸ்திராஜயாவின் உடலைப் பாதுகாக்குமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

தேசிய அருங்காட்சியக அதிகாரிகள் குழுவொன்று அதற்காக ஹஸ்திராஜயா இருந்த கம்பஹா வெலிவேரிய நெதுன்கமுவ பகுதிக்குச் சென்றுள்ளனர்.

பாராளுமன்றத்தில்

# பெரும்பான்மையை காட்டுமாறு உதய கம்மன்பிலவுக்கு சவால்

முடிந்தால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை காண்பிக்குமாறு முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன சவால்விடுத்துள்ளார். ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு எதிராக செயற்பட்ட அநுர பண்டாரநாயக்க,மங்கள மற்றும் ஸ்ரீபதி போன்றோர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் நீக்கப்பட்டார்கள். அத்தகைய விடயமே இப்பொழுதும் இடம்பெற்றுள்ளது.

2015 தேர்தலில் பெசில் ராஜபக்ஷவின தவறினாலே தோல்வி ஏற்பட்டதாக இந்தக் குழு பிரசாரம் செய்தது. எமது அரசாங்கமொன்றை உருவாக்கிக் காட்டுவேன் என்ற உறுதியுடன் செயற்பட்ட அவர் அதனை சாதித்துக் காட்டினார். கோட்டாபய எமது வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என்று அவர் உறுதியாக இருந்தார். இவர்கள் குற்றஞ்சாட்டுவது போன்று அவர் ஜனாதிபதியாக வர கனவு காணவில்லை. அந்த நோக்கம் அவருக்கு கொஞ்சமும் இருக்கவில்லை.



பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை காட்டுவதாக கம்மன்பில தெரிவித்துள்ளார். முடிந்தால் பெரும்பான்மையை காண்பித்து பிரதமராகும் படி அவருக்கு சவால் விடுகிறேன். ஒரு எம்.பி மட்டும் உள்ள கட்சியால் 225 எம்.பிகளிடையே பெரும்பான்மையை காட்ட முடியுமா?

எரிசக்தி அமைச்சராக அவர் பலமாதங்கள் பணியாற்றினார். இல்லை, முடியாது என்று சொல்லி அமைச்சர் ஒருவரால் தப்பிக்க முடியாது. அவர் தனது அமைச்சு பொறுப்பை தவிர ஏனைய அனைத்தையும் செய்வார் என்றார். (பா)

# தவக்கால சிந்தனை



## இறைவேண்டலின் மகத்துவம்

இன்றைய நற்செய்தியில் இயேசுகிறிஸ்து இறைவேண்டல் என்றால் என்ன? எப்படி இறைவேண்டல் செய்வது என்பதனைக் குறித்து கற்பிக்கின்றார். நீங்கள் இறைவேண்டல் செய்வதற்கு முன்னதாக உங்களது தேவைகளை அறிந்து அன்புடன் அத்தேவைகளை நிறைவு செய்கின்ற இறைவனிடத்தில் உள்ளத்திலிருந்து உண்மையாக எழும் வண்ணம் எளிமையாக இறைவேண்டல் செய்யுமாறு இயேசு தம் திருத்தூதர்களுக்கு போதிக்கின்றார்.

நான் கடவுளுக்கருகிலும் அவரது மக்களுக்கருகிலும் எனது உள்மன ஆழத்திற்குள்ளும் செல்ல தாழ்ச்சியுடனும் நேர்மையுடனும் நான் யார் என்பதையும் கடவுளுக்கு முன்பாக நான் என்ன என்பதையும் இறைவேண்டலிலே கொண்டு வருகிறேன். நாம் அடிக்கடி ‘விண்ணகத்திலிருக்கிற தந்தையே’ என்கிற இறைவேண்டலை மன்றாடுகின்றோம். அதனால் சில தருணங்களில் எமது உள்ளங்களையும் வாழ்வினையும் உலகினையும் வடிவமைக்கக்கூடிய அதனது வல்லமையினைத் தவறவிட்டு விடலாம்.

‘விண்ணகத்திலிருக்கிற தந்தையே’ என்கிற இறைவேண்டலினை எவ்வாறு செபிக்க வேண்டுமென்று இயேசு கற்பிக்கின்றபோது கிறிஸ்தவ இறைவேண்டலானது கடவுளே அனைத்து உயிர்களையும் படைத்தவராகவும், அவரது சாயலிலேயே அனைவரும் படைக்கப்பட்டுள்ளோம் எனவும் காணக் கற்றுத் தருகின்றது. கடவுள் ‘நமது’ தந்தை,‘எனது’ தந்தை மட்டுமல்ல, அதனால் அடுத்த மனிதர்கள் அனைவரும் எனது சகோதர சகோதரிகளாவர் என்று இயேசு பறைசாற்றுகின்றார். இறைவேண்டல் என்பது கடவுளிடம் எமது திருவுளத்தினை நிறைவேற்றும் படியாக கேட்பதில்லை. மாறாக, கடவுளின் திருவுளத்தினை அறிந்து நிறைவேற்றுவதே என்று இயேசு நினைவு படுத்துகின்றார். நாம் பாவமன்னிப்பு கேட்கின்றபோது, பாவமன்னிப்பினை பகிர்கின்றபோது, அடுத்தவர்களின் வாழ்வில் நம்பிக்கை மற்றும் வாழ்வு என்கிற நாளாந்த உணவாக நாம் மாறுகின்ற போது இறைவேண்டலானது நம்மை கடவுளின் அரசின் மக்களாக மாற்றுகின்றது. நாம் இறைவேண்டல் புரிகின்ற இத் தவக்காலமானது நம்மை இறையரசின் ஆழ்ந்த அனுபவத்திற்கு இட்டுச் செல்வதுடன் கடவுளின் அன்பர்கள் என்கிற ரீதியில் ஒருவர் ஒருவருடன் உறவிலும் வாழச் செய்யட்டும்.

அருட்தந்தை நவாஜி...



கைத்தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.பி.திசாநாயக்க நேற்று தமது அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்ற போது...

# ஐ.ம.ச அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்!

கோட்டேயிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று காலை ஒரு குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த அரசாங்கம் தாங்கள் ஆட்சியில் இருந்த போது பொருளாதாரம் மற்றும் மின்சார நெருக்கடிக்கு என்ன செய்தது என தெரிவிக்கும் பதாகைகளை ஆர்ப்பாட்டக் காரர்கள் ஏந்தியிருந்தனர்.

06

2016இல் ஐ.நா அலுவலக முன் ஆர்ப்பாட்டம்;

# விமல் வீரவங்சவுக்கு எதிரான வழக்கு மே 30 இல் விசாரணை

### கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் மே மாதம்


06



போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம நேற்று (07) போக்குவரத்து அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்ற போது ...

# உக்ரைன் சரணடையாவிடின் படையெடுப்பு தொடரும்

### ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அறிவிப்பு



உக்ரைன் அரசு சரணடையாவிட்டால் படையெடுப்பு தொடரும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் படைகளின் ஆக்கிரமிப்புகளை எதிர்கொண்டு உக்ரைனின் பிரதான நகரங்களில் இருந்து 1.5 மில்லியனுக்கும் அதிகமான பொதுமக்கள் வெளியேறி வருவதாக புட்டின் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறுதல் காரணமாக மரியுபோல் நகரில் உள்ள பொதுமக்களை வெளியேற்றும் முயற்சி இன்று இரண்டாவது தடவையாகவும் தோல்வியடைந்துள்ளது.

அந்நகரம் இன்னும் மின்சாரம் மற்றும் நீரின்றி உள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனிடையே, மத்திய உக்ரைனில் உள்ள வின்னிட்சா விமான நிலையம் ரஷ்ய ஏவுகணை தாக்குதலுக்கு உள்ளாகி அழிக்கப்பட்டதை உக்ரைன் ஜனாதிபதி உறுதி செய்துள்ளார்.

# மகளிர் தின நிகழ்வில் புரவலர் சிறப்பதிதி



சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு, அஹஸ ஊடகவியலாளர் குழு இன்று (08) விஷேட நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பு (07) மேல்மாகாண அழகியல் நிலையத்தில், பி.ப 02 மணியளவில் நடைபெறும் இந்நிகழ்வில், பல்துறை ஆளுமையுள்ள பெண்கள் பலர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் சிறப்பதிதியாக இதில் கலந்து கொள்கிறார்.

பெண் படைப்பாளிகள் பலரின் கலை நிகழ்ச்சிகள் இந்நிகழ்வை சிறப்பிக்கவுள்ளதோடு ஆளுமைகளால் உயரும் இலங்கை என்ற தொனிப் பொருளில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளமை விசேட அம்சமாகும்.



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 24ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 04

## குறள் தரும் சிந்தனை

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல்

ஏதோ காரணம் கற்பித்துப் பிரிந்து போய், மீண்டும் தலைவனிடம் தக்க காரணத்தினால் வந்தவரை, நன்கு ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

# தடுப்பூசி பெற்றுக் கொள்வதில் தொடரும் ஆபத்தான அலட்சியம்!

சீனாவின் வூஹான் நகரில் 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியின் தோற்றம் பெற்ற கொவிட் 19 தொற்று உலகுக்கு பெரும் சவாலானது. குறுகிய காலப்பகுதியில் உலகம் முழுவதும் பரவிய இத்தொற்று, 45 கோடிக்கும் மேற்பட்டோரைப் பாதித்துள்ளதோடு, 60 இலட்சத்துக்கும் மேற்பட்டோரின் உயிர்களையும் காவு கொண்டுள்ளது. இலங்கையிலும் கூட 06 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைப் பாதித்துள்ள இவ்வைரஸ், 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் உயிரிழப்புக்கும் காரணமாக அமைந்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் வரையும் உலகிற்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்த இத்தொற்று, மக்களின் இயல்பு வாழ்வையும் நாடுகளின் வழமையான செயற்பாடுகளையும் பெரிதும் பாதித்தது. இத்தொற்றின் அச்சுறுத்தல் காரணமாக மக்கள் வீடுகளுக்குள் முடங்கினர். அவர்களது அன்றாட வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இத்தொற்றின் அச்சுறுத்தல் காரணமாக ஒவ்வொரு நாட்டினதும் வழமையான செயற்பாடுகளும் செயலிழந்தன. அண்மைக் கால வரலாற்றில் உலகம் முகம்கொடுத்த மிக மோசமான அச்சுறுத்தலாகவே இத்தொற்று விளங்கியது. அதனால் மக்கள் நம்பிக்கை இழந்து செய்வதறியாது திகைத்து நின்றனர்.

இவ்வாறான சூழலில்தான் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி பயன்பாட்டுக்கு வந்தது. 2020 டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி பிரித்தானியா தம் பிரஜைகளுக்கு அவசரத் தேவையின் நிமித்தம் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்கத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து உலகின் ஏனைய நாடுகளும் இத்தடுப்பூசியைத் தத்தம் பிரஜைககளுக்கும் பெற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டத் தொடங்கின. இதன் விளைவாக இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் பெரும் போட்டி நிலை உருவானது.

இந்தச் சூழலில் 2021 ஜனவரி 29 ஆம் திகதி முதல் இலங்கை தம் பிரஜைகளுக்கு இத்தடுப்பூசியைப் பெறறுக் கொடுக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தது.

என்றாலும் ஒரே தடுப்பூசியைத் தொடர்ந்தும் பெற்றுக் கொள்வது பெரும் சவாலானது. அதன் காரணத்தினால் உலகில் முன்னணியில் விளங்கும் அஸ்ட்ரா செனகா தடுப்பூசியின் இந்திய உற்பத்தியான கொவிஷீல்ட்டுக்கு அப்பால் பைஸர், சினோபார்ம், ஸ்புட்னிக் வி, மொடர்னா, அஸ்ட்ரா செனகா ஆகிய தடுப்பூசிகளையும் இந்நாட்டில் பயன்படுத்துவதற்கான அங்கீகாரத்தை இலங்கை வழங்கியது. இதன் பயனாக குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டின் பெரும் பகுதியினருக்கு இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது.

அந்த வகையில் 'இந்நாட்டில் இற்றை வரையும் 169 இலட்சம் பேர் இத்தடுப்பூசியின் முதலாம் டோஸைப் பெற்றுள்ளனர். அத்தோடு இதன் பூஸ்டர் டோஸ் 72 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு பெற்று கொடுக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத், 'நாட்டில் சுமார் 07 இலட்சம் பேர் இத்தடுப்பூசியின் எந்தவொரு டோஸையும் பெற்றுக் கொள்ளாதவர்களாக இருக்கின்றனர்' என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஏழு இலட்சம் பேர் என்பது சாதாரணமாக நோக்கக் கூடிய எண்ணிக்கை அல்ல. இவ்வளவு தொகையினர் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாது இருப்பது இத்தொற்றின் பரவுதல் அச்சுறுத்தலுக்கு துணை புரிவதாகவே அமையும்.

உலகம் முகம் கொடுத்திருந்த கொவிட் 19 தொற்றின் அச்சுறுத்தலை முறியடித்து மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்திய பெருமை இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிக்கு உள்ளது. இத்தடுப்பூசியின் பயனாக இலங்கை மாத்திரமல்லாமல் உலகின் பல நாடுகளும் கட்டம் கட்டமாக இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்கும் தடுப்பூசியை பெருந்தொகையானோர் பெற்றுக் கொள்ளாதிருப்பது ஆரோக்கியமானதல்ல.

ஆகவே கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் முக்கியத்துவத்தையும் அதன் தேவையையும் உணர்ந்து அதனைப் பெற்றுக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக தாம் மாத்திரமல்லாமல் தம் குடும்பத்தினரும் தாம் வாழும் சமூகத்தினரும் நன்மை பெறுவர் என்பதைப் புரிந்து கொள்வது அவசியம். அது கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அளிக்கும் பாரிய பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# பெண்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பது எமது கடமை

பெண் என்பவள் ஈரெழுத்து தாங்கி நிற்கும் இமயம் ஆவாள். கருவறை இருளில் தொடங்கி கல்லறைக்கு செல்லும் வரை பல்வேறு இன்னல்களையும் சவால்களையும் சந்தித்து அவற்றில் வெற்றியும் கண்டு தனது சாதனைகள் மூலம் சரித்திரம் படைக்கிறாள் பெண். இவ்வாறான மங்கையர்களுக்கு மகுடம் சூட்டுவதற்காக உலக நாடுகள் தோறும் வருடாவருடம் வெவ்வேறு தொனிப் பொருளில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தில் பெண்கள் தமது உயிரையும் தியாகம் செய்து தமது உரிமைகளை பெற்றெடுத்த வரலாறுகள் ஞாபகமூட்டப்பட்டு, பெண்ணுரிமை சமத்துவம் மற்றும் அனைத்துவித வன்முறை, துஷ்பிரயோகம் என்பவைகளில் இருந்து பெண்களைப் பாதுகாத்தல் தொடர்பாகப் பேசப்படுகின்றது. அவ்வாறிருந்த போதும் பெண்களுக்கு வழங்கப்படும் சுதந்திரம் என்பது தற்காலத்தில் கேள்விக்குறியாகவே காணப்படுகிறது.

பெண் என்பதற்கு அப்பால் மனிதன் என்ற அடிப்படையில் மனித உரிமைப் பிரகடனத்தில் சொல்லப்பட்ட அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவிப்பதற்கு பெண் உரித்துடையவள் ஆவாள். இதனையே 1948 ஆம் ஆண்டு மனித உரிமை பிரகடனத்தின் முகவுரையில் 'மானிட குடும்பத்தைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தினையும் சமமான உரிமைகளையும் அங்கீகரித்தல் உலகின் சுதந்திரம் சமாதானம் நீதி என்பவற்றுக்கு அடிப்படையாகவுள்ளது' என கூறப்பட்டுள்ளது.




இதன் அடிப்படையிலேயே உறுப்புரை 13 இல் சகல மக்களும் பாராபட்சமின்றி சகல உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் உரித்துடையவரா வார் எனவும் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உணருவதற்குமான உரித்துடையவர்கள் எனவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதே போன்று மனித உரிமைப் பிரகடனத்தில் உறுப்புரை 22, 27 ஆகியவைகளில் சமூக பாதுகாப்பு மற்றும் பொருளாதார சமூக கலாசார உரிமைகளை தெளிவாக அறிந்து கொள்ளும் உரிமையும் கொண்டுள்ளனர்.

தமது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராடி பெற்ற மகளிர் தினத்தை கொண்டாடும் இவ்வேளையில் தற்கால மகளிர் அனைவரும் தமது சுதந்திரம் உரிமை என்பன பறிபோகாமல் காத்திட வேண்டும். மதங்களுக்கு அப்பால் மனிதம் என்ற ஒரு எண்ணத்தில் தமது உரிமைகளை சுதந்திரமாக அனுபவிக்க வேண்டும். சுதந்திரம் மீறும் போது அது வன்முறையாகவும் அடக்குமுறையாகவும் மாறக் கூடும். எனவே சிந்தித்து செயற்படல் காலத்தின் தேவையாகும்

இதனை அடிப்படையாக வைத்தே இவ்வருட மகளிர்தின தொனிப்பொருள் அமைந்துள்ளது. அதாவது 'பாலின சமத்துவம் மூலம் நிலையான நிலைபேறான நாளை' எனும் தொனிப்பொருளில் அமைந்துள்ளது. பால் என்பது இயற்கையாக பிறப்பு அடிப்படையில் ஆண், பெண் என வேறுபடுவதாகும். இதேபோல் பால்நிலை என்பது சமூகத்தாலும் சமூகமயமாக்கல் செயற்பாடுகளாலும் பிரிக்கப்படுவதாகும்.



ஆனாலும் பால்நிலை சமத்துவம் என்பது இயற்கை பிறப்பிற்கு அப்பால் சமமானவர்கள் என்பதை சுட்டி நிற்கிறது. இந்த சமத்துவத்தையே இன்று பெண்கள் விரும்பி நிற்கின்றனர். சாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பால் தமது சாதனைப் பயணங்கள் மூலம் சமமானவர்களாக இருக்கின்றார்கள். இருப்பினும் வன்முறைகளும் துஷ்பிரயோகமும் இழிவுபடுத்தல்களும் அந்த நிலையிலேய இருப்பது பெண்களுக்கு வேதனை அழிக்கும் செயற்பாடாக இருக்கிறது. இதற்கு காரணம் பெண் என்ற தன்மையே என்பது உறுதியாகும். சமூக வரையறைகள் கலாசார பாரம்பரியங்களை மீறாத வகையில் இன்று பல்வேறு துறைகளிலும் பெண்கள் கால்தடம் பதித்துள்ளனர். இவர்களின் சாதனைப் பயணம் உச்சம் தொட்ட அதவேளை உரிமை மீறல்களும் குறைந்தபாடில்லை. பெண்ணானவள் முழுமையான மனித உரிமையை அனுபவிக்கும் அளவிற்கு உரித்துடையவள் ஆவாள். எனவே பெண்களை மதித்து அவர்களின் முன்னேற்றத்திற்கு கரம் கொடுப்போம்.



ஏ.எம்.கஸ்பியா வீவி
(சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்)
பிரதேச செயலகம், கல்முனை

# பால்நிலை சமத்துவம் உறுதி செய்யப்பட்டாலேயே பெண்கள் சுதந்திரமாக வாழும் உலகம் உருவாகும்

ஆண், பெண் இரு சாராரும் மானிட வாழ்வின் அரும்பெரும் தூண்களாவர். மானிட வாழ்வின் முன்னேற்றம் இவ்விரு சாராரினதும் சமவாய்ப்பிலும், சமசந்தர்ப்பத்திலும் தங்கியிருப்பதாக அனைத்து சமயங்களும், தத்துவங்களும் ஏற்றுக் கொள்கின்றன.

பொதுமறை நூலான திருக்குறளில் திருவள்ளுவர் "மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை எனை மாட்சித்து ஆயினும் இல்" என்கிறார். அதாவது மனைவி இல்லத்தரசியாக ஒரு குடும்பத்தில் அமையாவிட்டால் அக்குடும்பம் சிதைந்து விடும்" என்ற முக்கிய கருத்தை வலியுறுத்துகிறார்.

இஸ்லாமிய சமயத்தைப் பொறுத்தவரை அதன் முதல் மூலாதாரம் "ஆண்கள் சம்பாதித்தவை ஆண்களுக்கு உரித்துடையதாகும்; பெண்கள் சம்பாதித்தவை பெண்களுக்கு உரியதாகும்" என்ற வழிகாட்டல் மூலம் சமவாய்ப்பையும், சம சந்தர்ப்பங்களையும் இருபாலாருக்கும் வழங்குகிறது.

கிறிஸ்தவ சமயத்தைப் பொறுத்தவரை புனித மரியாள் (மேரி) எனும் தெய்வீகத் தாய்க்கும், தனயன் ஈஸா (இயேசு) இற்கும் இடையில் இடம் பெற்ற வாழ்வியல் அம்சங்களில் மேரியின் உன்னத வகிபாகம், அவளது தூய்மை என்பனவற்றை விவிலியம் வலியுறுத்துகிறது.

பௌத்த சமயத்தைப் பொறுத்தவரை கௌதம புத்தரின் 'தம்ம' போதனைகளில் "மகளிர் மானிடப் படைப்பில் சிறப்புப் பெற்றவள்" என்ற அடிப்படையில் உயரிய இடம் வழங்கப்படுகிறது.


ஆண்களைப் போன்று பெண்களும் தத்தம் சமய வரையறைகளைப் பேணி கற்றுத் தேர்ந்த ஆசிரியைகளாக, வைத்தியர்களாக, தாதிகளாக, வியாபாரிகளாக, ஆலோசகர்களாக, அவசியமேற்பட்டால் தலைமை வகிப்பவர்களாக பல்வேறு வகிபாகங்களை ஏற்று சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யலாம்.

ஒரு பெண்ணுக்கு முதற் பொறுப்பு குடும்பப் பொறுப்பாகும். இரண்டாம் பொறுப்பாக சமூகப் பொறுப்பினை ஆளுமையுள்ள பெண்கள் ஏற்கலாம் என பல்வேறு அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

1. 1998 பொருளாதாரத் துறையில் நோபல் பரிவு பெற்ற பேராசிரியர் முஹம்மத் யூனூஸ் அவர்கள் "சின்னச் சின்ன விடயங்கள் பல்லாயிரம் தடவைகள் நடைபெறுகின்ற போது அவை பாரிய விடயங்களாக மாறுகின்றன. அவை பலமான பொருளாதார அடிப்படைக்கு அத்திவாரமாக அமைகின்றன. பெண்களின் பங்களிப்போடு மேற்படி பொருளாதார அடிப்படைகள் கட்டியெழுப்பப்படுகின்ற போது அது சிறந்த சமூக பொருளாதார எதிர்காலத்திற்கு அத்திவாரமாக அமைகின்றது" என்கிறார்.

2. அரசியல் மற்றும் சமூக விடயங்களில் பெண்களின் பங்குபற்றுதல் தொடர்பில் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் 1325 ஷரத்துக்கு இணங்க சமாதான செயல்முறைகளிலும் அதனோடு தொடர்புடைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரச மட்டத்திலும் குறிப்பாக முடிவெடுக்கும் மட்டங்களிலும் நிறுவனங்களிலும் மற்றும் கள நடவடிக்கைகளில் பொருத்தமான பெண்களின் பங்குபற்றுதலை அதிகரிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஐ. நா. முன்னாள் செயலாளர் கொபி அனான் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி 1325 ஷரத்து பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள், பாலியல் வல்லுறவு, துஷ்பிரயோகங்கள் போன்ற வன்முறைகளிலிருந்து பெண்கள், பெண்பிள்ளைகள் பாதுகாக்கப்படக் கூடிய விஷேட செயல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஐ நா. பிரகடனம் வலியுறுத்துகின்றது.

**பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதன் மூலம், அவர்கள் சமஉரிமையுடன் வாழ்வதற்கான வழிவகை ஏற்படுத்தப்பட வேண்டும்**






பால்நிலை சமத்துவம் (Gender Balance) என்ற கருத்தியல் நீண்ட காலமாக ஒரு விவாதப் பொருளாக இருந்து வருகின்றது. இங்கு ஆணின் வகிபாகங்களுக்குச் சமாந்தரமாக பெண்ணின் வகிபாகங்கள் சமூகத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகளை நாம் அவதானிக்கின்றோம். ஆண்_ பெண், மகன்_ மகள், சிறுவன் _ சிறுமி, இளைஞன்_ யுவதி, கணவன்_ மனைவி, தந்தை_ தாய், தலைவன்_ தலைவி என்ற மேற்படி வரிசை ஒழுங்கே இங்கு பால்நிலை சமத்துவமாகக் கருதப்படுகிறது.

மறுவார்த்தையில் கூறுவதாயின் உலக நியதியின்படி ஆணும், பெண்ணும் இறைவனால் படைக்கப்பட்ட படைப்புகள். உலக வாழ்வின் இயக்கத்துக்கு ஆணும் வேண்டும், பெண்ணும் வேண்டும்; ஒவ்வொரு பாலாருக்கும் பிறப்புறுப்புக்களையும், உடலமைப்புகளையும், உணர்வுகளில் வித்தியாசத்தையும் வைத்திருப்பது இயற்கை நியதியாகும். அதுதான் மனித வாழ்வின் சமநிலைக்கும், பரஸ்பர ஒத்துழைப்புக்கும், நடுநிலைமைத்தன்மைக்கும் வழிவகுக்கின்றது.

உலக மகளிர் பற்றிய ஐ. நா.வின் 30 வருட உழைப்பின் பெறுபேறாகவே CEDAW 'சீடோ' என்ற பெண்கள் நலன்கள் சார் பிரகடனம் 1981ல் ஐ. நா. இனால் வெளியிடப்பட்டது. :

"பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிக்கின்ற பட்டயம்" என சமூகவியலாளர்களால் அழைக்கப்படுகின்றது. இது தவிர, பல் சர்வதேச மாநாடுகள், ஆய்வரங்குகள் மூலம் பெண்களின் அனைத்து உரிமைகளும், கடமைகளும் உறுதி செய்யப் பட்டுள்ளன. பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதன் மூலமே உலகில் பெண்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த முடியும். எனவே, எமது இலங்கை வாழ் பெண்களை கல்வி, கலாசார, சமய, பண்பாட்டு அம்சங்களால் அறிவூட்டி, நெறிப்படுத்தி, அவர்களை சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாற்றுவதற்கு இன்றைய சர்வதேச மகளிர் தினத்தில் குரல் கொடுத்து, விழிப்பூட்ட சகல சமூக ஸ்தாபனங்களும் முன்வர வேண்டும்.



அஷ்ஷெய்க் அன்ஸார்
பழீல் மௌலானா (நழீமி) எம். ஏ.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சம்மாந்துறை வலய ஆசிரிய வாண்மை விருத்தி நிலையம்

# நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாக குறைவு



(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

மத்திய மலைநாட்டில் கடந்த சில வாரங்களாக கடும் வரட்சி நிலவுவதால் நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது.

கடந்த சில மாதங்களாக நீர் ஏந்தும் பகுதிகளான மவுசாகல, விமலசுரேந்திர, கென்யோன், லகஸ்சபான, பொல்பிட்டிய, காசல்ரீ, மேல்கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களுக்கு நீரை வழங்கும் சகல ஆறுகளும் வரண்ட நிலையில் உள்ளன. இதனால் நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது.

மவுசாகல நீர் தேக்கத்தின் நீர் மட்டம் 32.6 அடி குறைந்துள்ளது. காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 50 சதவீதம் குறைந்துள்ளது. இதே போல் ஏனைய நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளதாக நீர் மின் நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்நிலையில் மலையக பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

ஒரு சில தோட்டங்களில் தற்போது சுத்தமான குடிநீர் பெற பல மைல் தூரம் வரை சென்று ஊற்று நீரை பெற்று வரும் அவல நிலை தோன்றியுள்ளது. தொடந்தும் வரட்சி நிலவும் பட்சத்தில் மின் உற்பத்தி பெரிதும் பாதிக்கபடலாம் என நீர் மின் நிலைய அதிகாரி தெரிவித்தார். மவுசாகலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் குறைந்து வருவதால் நீரில் மூழ்கியிருந்த சண்முகநாத சுவாமி கோயில், புத்த பெருமானின் சிலை, இஸ்லாமிய மசூதி, கங்குவத்தை நகரில் உள்ள விநாயகர் கோயில், சாமிமலை கருங்கல் பாலம் என்பன தற்போது வெளியில் காணக்கூடியதாக உள்ளன.


சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு RDB வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கு முடிசூட்டும் லியசவிய plus திறி அபிமானி போட்டி 2022

RDB லியசவிய plus திறி அபிமானி

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

விண்ணப்பப்படிவம்

நாம் தேடுவது உங்களைத்தான்
தைரியமிக்க பெண்களுக்கு மகுடம் சூட

RDB லியசவிய plus
திறி அபிமானி

சிறந்த பெண் தொழில்முயற்சியாளரை தெரிவு செய்வதற்கான 'திறி அபிமானி 2022' போட்டிக்கு ஜூன் 30 ஆம் திகதிக்கு முன் உங்களுக்கு அருகாமையில் உள்ள RDB கிளைக்கு வருகை தந்து அல்லது www.rdb.lk இணையத்தளம் / RDB Facebook முகநூல் பக்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவும்.

வாழ்வை வெல்ல துணிந்த பெண்களுக்கு



RDB லியசவிய plus

* நிபந்தனைகளுக்குட்பட்டது

HOTLINE 0112 425 262
www.rdb.lk

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதேச அபிவிருத்தி வங்கி - இலங்கையின் முதன்மை அரச அபிவிருத்தி வங்கி





ஆயிரங்கள் இலவசம்

சுபீட்சத்தின் நோக்கின்
தேசிய பாடசாலைகள்
1000



## தேசிய பாடசாலை கட்டமைப்புக்கு மேலும் பத்து பாடசாலைகள்

அதிமேதகு ஜனாதிபதி
கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின்
நாட்டை கட்டியெழுப்பும் "சுபீட்சத்தின் நோக்கை" முன்னிறுத்தி ஆயிரம் தேசிய பாடசாலைகள் கருத்திட்டத்தின் கீழ்
கல்வி அமைச்சர்
இலங்கை பாராளுமன்ற சபை முதல்வர்
கௌரவ தினேஷ் குணவர்தன அவர்களின்
அழைப்பில்
இலங்கை பிரதமர்
கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களின்
தலைமையில்
சர்வதேச மகளிர் தினத்திற்கு இணையாக
பத்து பாடசாலைகள்
தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படவுள்ளன

### ஆயிரம் தேசிய பாடசாலைகள் கருத்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் உரித்தாகும் கல்விப் பங்களிப்புகள்

- தேசிய பாடசாலை ஒன்று கூட இல்லாத 125 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்காக நூற்று இருபது தேசிய பாடசாலைகள்
- 2022 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன் தேசிய பாடசாலை கட்டமைப்புக்கு 400 தேசிய பாடசாலைகள்
- நாட்டில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் முழுமையான தரம் கொண்ட தேசிய பாடசாலைகள் நிறுவப்படுவது மற்றும் அதன்மூலம் உயர் தரமான கல்வி வாய்ப்பு விரிவுபடுத்தப்படல்.
- தரமான ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்விக்காக அனைவருக்கும் சமமான கற்றல் வாய்ப்பு உறுதி செய்யப்படுதல்.
- பிரதேச பல்வகைமை, சமூக பொருளாதார நிலை கருத்தில் கொள்ளப்படாது தரமான பாடசாலை கட்டமைப்பு ஒன்றை செயற்படுத்தல்
- சர்வதேச தரத்திற்கு அமைய மாணவர் கல்வி முன்னேற்ற அளவை உயர்த்தல்.
- வலையமைக்கப்பட்ட பாடசாலை கட்டமைப்பு ஊடாக நடத்தப்படும் பாடசாலை கட்டமைப்பு ஒன்றை மேம்படுத்தல்.
- பாடசாலை வலையமைப்பு நிறுவப்படுவதன் மூலம் செயல்திறன் மிக்க வளப் பயன்பாடு மற்றும் கல்வி முதலீட்டை பயன்தரும் வகையில் பயன்படுத்தல்.
- பசுமை பாடசாலை சூழல் ஒன்றை உருவாக்குதல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய உணர்வுபூர்வமான எதிர்கால சந்ததி ஒன்றுக்கு அடித்தளம் இடுதல்.
- செயல்திறன் கொண்ட கல்வியை வழங்கும் முகாமைத்துவ நிலையங்களாக பாடசாலைகள் செயற்படல்.
- விளையாட்டு, ஒழுக்கம், குழு செயற்பாடு மற்றும் பாடநெறிக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தல்.
- ஆரோக்கியமான, அறிவுமிக்க படைப்பாற்றல் கொண்ட எதிர்கால சந்ததி ஒன்றுக்கு அடித்தளம் அமைத்தல்.

### இன்றைய தினம் இடம்பெறும் தேசத்திற்கு கையளிக்கப்படவுள்ள தேசிய பாடசாலைகள்

பிபில, யசோதரா பாலிகா வித்தியாலயம் / பெலிஅத்த, புவக்தண்டாவ தம்மபால பாலிகா வித்தியாலயம் / பருத்தித்துறை, மெதடிஸ்ட் பெண்கள் உயர் நிலைப் பாடசாலை / கல்முனை, மஹ்மூத் மகளிர் கல்லூரி / கெகிராவை, வித்தியார்த்த மகா வித்தியாலயம் / கேகாலை, சுவர்ணஜயந்தி மகா வித்தியாலயம்
ஹட்டன், புனித கெப்ரியல் மகளிர் கல்லூரி
வலஹன்துவ, ஜனாதிபதி மகளிர் கல்லூரி / தங்கொட்டுவ, பௌத்த பாலிகா வித்தியாலயம் / தொம்பே, தேவி பாலிகா வித்தியாலயம்

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION
ඉසුරුපාය, බත්තරමුල්ල. | www.moe.gov.lk

# பாராளுமன்றம் இன்று கூடும்



பாராளுமன்றம் இன்று முதல் 4 தினங்கள் கூட உள்ளது. இன்று மு.ப 10.00 மணிக்கு பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகவிருப்பதுடன், மு.ப 11.00 மணி முதல் பி.ப 4.30 மணிவரை புலமைச் சொத்து (திருத்தச்) சட்டமூலத்தை (இரண்டாவது மதிப்பீடு) விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத்தீர்மானிக்கப்பட்டது.அத்துடன், மார்ச் 09ஆம் திகதி மு.ப 11.00 மணி முதல் பி.ப 4.30 மணி வரை தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. மார்ச் 10ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் பி.ப 12.30 மணி வரை வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதன் பின்னர் மதிய போசன இடைவேளை இன்றி பி.ப 12.30 முதல் பி.ப 5.30 மணிவரை நாட்டில் நிலவும் எரிசக்திப் பிரச்சினை தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்துக்கு நேரம் ஒதுக்குவதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதேநேரம், மார்ச் 11ஆம் திகதி மு.ப 10.00 மணி முதல் 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. (பா)

## சமூகத்தை வழி நடத்தும் துணிச்சல்...

மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.மகளிர் தினத்தை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள அவர்,

ஒரு தாயாக, மகளாக, சகோதரியாக மற்றும் பாட்டியாக ஒட்டுமொத்த சமுதாயத்தையும் வழிநடத்தும் துணிச்சலான பெண்களின் அர்ப்பணிப்பை நினைவுகூரும் சர்வதேச மகளிர் தினத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை பகிர்ந்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு நிலையான சமுதாயத்திற்காக தன் வாழ்நாள் முழுவதும் கருணை, ஆளுமை ஆகியவற்றைப் பகிரும் ஒரு பெண்ணின் பெருமையை ஒரு நாளுக்கு மட்டும் வரையறுக்க முடியாது.

மனித இனத்தை மாற்றிய அனைத்து தீர்க்கதரிசிகளின் பிறப்பு முதல், மனித இருப்பை அடையும் வரை அனைத்திற்கும் பெண்தான் காரணம் என்பது இரகசியமல்ல.

இதனால்தான், பிரபல ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கோர்க்கி அவர்கள், சூரிய ஒளி மற்றும் தாய்ப்பாலில் இருந்தே உலகம் படைக்கப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வீரப் பெண் தலைமுறையின் வரலாற்றை பின்பற்றி இலங்கைப் பெண்கள் இன்று சமூகப் பொறுப்புடன் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர். இந்த தைரியமான பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக நமது அரசாங்கம் தொடர்ந்து பணியாற்றும் என்று நான் நம்பிக்கையுடன் தெரிவிக்கிறேன்.

"நிலையான எதிர்காலத்திற்கு இன்று பாலின சமத்துவம்"என்ற சர்வதேச எண்ணக்கருவின் கீழ் கொண்டாடப்படும் இம்முறை சர்வதேச மகளிர் தினத்தில் உங்களுக்கு எதிரான வன்முறைகளும் பாகுபாடுகளும் இலங்கை சமூகத்திலிருந்து துடைத்தழிக்கப்படும் தினத்தை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும். "அவள் ஒரு நாடு, ஒரு தேசம், ஒரு உலகம்" என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தின் ஊடாக நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் பெண்களின் பங்கு சரியான முறையில் பாராட்டப்படும் என நம்புகிறேன்.

நீங்கள் "அவளுக்கு"பெருமை சேர்ப்பதற்கு இருமுறை சிந்திக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

## ஒட்டுமொத்த மக்களையும் சோகத்தில்...

எசல ஊர்வலத்தின் புத்தரின் புனிதப்பல் அடங்கிய புனித பேழையை தாங்கிச் செல்லும் நெதுங்கமுவ ராஜா என்ற யானையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. நேற்று காலை 5.30 மணியளவில் இந்த யானை உயிரிழந்துள்ளது. இறந்த யானையின் இறுதிக் கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும் என யானையின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

நெதுங்கமுவ ராஜா என்ற யானை கண்டி எசல ஊர்வலத்தில் புத்தரின் புனிதப்பல் அடங்கிய புனித பேழையை 13 தடவைகள் தாங்கிச் சென்றுள்ளது.

நெதுங்கமுவ ராஜா தெய்வீகம் பொருந்திய யானையாக சிங்கள மக்களால் பார்க்கப்படுகிறது. இதன் உயிரிழப்பானது ஒட்டுமொத்த சிங்கள மக்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## நாடெங்கும் பாடசாலைகள்...

உயர்தரப் பரீட்சையையொட்டி விடுமுறை வழங்கப்பட்டிருந்த பாடசாலைகள் நேற்றைய தினம் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

அதேவேளை, பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தரும் போது முறையையான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது கண்டிப்பானது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்கு மேலதிகமாக முகக்கவசம் ஒன்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுக்குமாறும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகின்றதா? என்பதனைக் கண்காணிப்பதற்காக பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கல்வியமைச்சு அதுதொடர்பில் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் சூழ்நிலை தொடரும் நிலையில் பகுதி பகுதியாக மாணவர்களை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அதற்கிணங்க, ஒரு வகுப்பில் 20 மாணவர்களுக்கு குறைந்த எண்ணிக்கையுள்ளவர்கள் இருப்பார்களானால் அவர்களுக்கு வழமை போன்று கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்க முடியுமென்றும் மாணவர்களின் எண்ணிக்கை 21 40 வரை இருக்குமானால் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒரு வார இடைவெளியில் வகுப்புகளை நடத்துவதற்கு கல்வியமைச்சு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

அத்துடன் 40 மாணவர்களுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட வகுப்புகள் மூன்று சம பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அதேவேளை, இருமல் மற்றும் சளி, காய்ச்சல் அறிகுறிகள் காணப்படும் மாணவர்களை பாடசாலைக்கு அனுமதிக்காமல் இருக்க நடவடிக்கையெடுக்குமாறு கொழும்பு சிறுவர் வைத்தியசாலை பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா கேட்டுக்கொண்டுள்ளார். அவர் அதுதொடர்பில் பெற்றோர்களை வலியுறுத்தியுள்ளதுடன் அவ்வறான மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அது பெற்றோர்களின் பொறுப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் எரிபொருளு க்கான நெருக்கடி நிலை காணப்படுவதால் பாடசாலை வான்களை கொண்டு நடத்துவதற்கு முடியாதுள்ளதாக சம்பந்தப்பட்ட வான் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இ.போ.ச. மூலம் தமக்கு எரிபொருளைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அவர்கள் போக்குவரத்து அமைச்சைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(ஸ)

## பல்வேறு சவால்களுக்கு முகம்...

மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த த சில்வா தனது சர்வதேச மகளிர் தின செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறிப்பிட்டுள்ள அவர், மகளிர் மற்றும் சிறுவர் மேம்பாடு, பாலர் மற்றும் தொடக்கக் கல்வி, பாடசாலை உள்கட்டமைப்பு மற்றும் கல்விச்சேவைகள்இராஜாங்கஅமைச்சு 2021 ஆம் ஆண்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான வெற்றிகரமான பிரச்சாரத்தைத் தொடங்க முடியும். பல சவால்களுக்கு மத்தியில் குழுவின் நாடளாவிய, பரந்த, கூட்டுச் செயற்பாடுகளை மீண்டும் ஒருமுறை மரியாதையுடன் சிந்தித்துப் பார்க்க முடிந்தமை நாட்டின் சிறுவர் மற்றும் பெண்களின் பாக்கியமாகும்.

பாலின சமத்துவம் மற்றும் நிலையான மேம்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் தனித்துவமான உள்ளூர் கருப்பொருளைப் பின்பற்றுவதன் மூலம் இந்த ஆண்டு 2022 சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடுவதே எங்கள் குறிக்கோள். எனவே, 2021 ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்திற்காக, 2022 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினத்திற்கான அமைச்சின் கருப்பொருளை மார்ச் 08 முதல் ஏப்ரல் இறுதி வரையிலான முக்கிய நிகழ்வுகளுடன் அழகுபடுத்துவோம். இந்தத் தொனிப்பொருள் தாய்மார்கள், மகள்கள், ஊனமுற்றோர் மற்றும் வயதான பெண்கள், மற்றும் தொழில் முனைவோர் பெண்கள் உட்பட நாட்டில் உள்ள அனைத்துப் பெண்களையும் இலக்காகக் கொண்ட கருப்பொருளாகும், மேலும் இது ஏற்கனவே நன்கு அறியப்பட்டதாகும். தலைநகர் மட்டுமின்றி, நாட்டின் கிராமப் புறங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ள இந்தத் தொடர் நிகழ்ச்சிகள், தற்போதைய அரசின் செழுமைக்கான தொலைநோக்குப் பார்வையை உணர்த்தும் வளமான மனித வளத்தை உருவாக்குவதற்கான சரியான கால முயற்சி என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் பல்வேறு பெண்களின் பிரச்சினைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான கொள்கைத் தலையீடுகள், ஏழைப் பெண்களின் பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டல், பாலினம் மற்றும் பாலின அடிப்படையில் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு ஆளான பெண்களுக்கான பெண்கள் தங்குமிடங்களைப் பராமரித்தல் மற்றும் 1938 பெண்களுக்கான 24 மணி நேர ஹெல்ப்லைன் 7 ஆண்டுகளுக்குள் தொடர்ந்து சேவைகளை வழங்க எங்கள் தொழில்நுட்ப மற்றும் மனிதப் பயிற்சி ஊழியர்களை வலுப்படுத்துவது இதுவரை எங்களின் சாதனைகளில் ஒன்றாகும். பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவது தொடர்பான தேசிய அளவிலான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் கண்காணிப்பது ஆகியவை முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

அதே நேரத்தில், அனைத்து பெண்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு, முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வுக்கான தற்போதைய தேவைகளை மையமாகக் கொண்டு, முறையான முறையில், பெண்கள் மீதான தற்போதைய பல தடைகளைத் தணிக்க மேலும் நடவடிக்கைகளை எடுப்பது எங்கள் நோக்கமாகும் என்றார்.

## வியாழக்கிழமைக்கு முன்னர்...

வியாழக் கிழமைக்குள் எரிபொருள் கியூவிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

எரிசக்தி அமைச்சராக நேற்று (07) கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் எரிசக்தி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் காமினி லொக்குகே இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,

"இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து அதிகாரிகளும் நாடு முழுவதும் எரிபொருளை விநியோகிப்பதில் வார இறுதி முழுவதையும் கழித்தனர். தற்போது பெரும்பாலான பெற்றோல் நிலையங்களில் எரிபொருள் வரிசைகள் இல்லை. இன்று 28,300 மெட்ரிக் டொன் டீசல் கொண்ட மற்றுமொரு கப்பல் வந்துள்ளது. அந்த எரிபொருளை இன்றோ நாளையோ இறக்க எதிர்பார்க்கிறோம். எதிர்வரும் வியாழன் கிழமைக்குள் இந்த நாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள வரிசைக்கு முற்றுப்புள்ளி வைத்து வழமை போன்று பொதுமக்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்குவோம்.

மேலும், தற்போது குறைந்த திறனில் இயங்கி வரும் சுத்திகரிப்பு நிலையத்தில் எரிபொருள் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். தேவையான மசகு எண்ணெய் பெறுவதில் இருந்த சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடிந்தது. அடுத்த வாரம் சுத்திகரிப்பு நிலையத்திலி ருந்து எந்த பிரச்சினையும் இல்லாமல் மின்சார சபைக்கு எரிபொருளை வழங்க முடியும்.

தற்போது மின்சார சபையினால் எரிபொருள் விநியோகம் காரணமாக எவ்வித வெட்டுமின்றி மின்சாரம் வழங்க முடியும்.

நேற்றைய காலை நிலவரப்படி ஒரு பெரல் மசகு எண்ணெய் விலை 130 டாலராக உயர்ந்துள்ளது. எண்ணெய் கப்பலுக்கு 35 மில்லியன் டாலர் கொடுக்க நாங்கள் தயாராக இருந்தோம், ஆனால் இப்போது அதற்கு 50 மில்லியன் டாலர் செலுத்த வேண்டும். இந்த விலை உயர்வால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு டீசலில் இருந்து மட்டும் லீற்றர் ஒன்றுக்கு 80.00 ரூபா விற்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி எரிபொருள் விலை தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் அந்த இழப்பை ஓரளவு குறைக்க முடியும். சுத்திகரிப்பு பொருட்களை இறக்குமதி செய்யும் போது அதிக அளவு வரி செலுத்த வேண்டும் என்றார். (பா)

## வாகன விபத்துகளில்...

விபத்துக்களுக்கான காரணம் சாரதிகளின் கவனயீனமே என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

குருணாகல் – கிரிபாவ பொலிஸ் பிரிவில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரம் ஒன்றில் மோதி இடம்பெற்ற விபத்தில் , மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் படுகாயமடைந்த நிலையில் கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 27 வயதுடைய சாலியவெவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

களுத்துறை – இங்கிரிய பொலிஸ் பிரிவில் இங்கிரிய – பாதுக்க வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி , கட்டடம் ஒன்றில் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 18 வயதுடைய இங்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

வவுனியா – பூவரசன்குளம் பொலிஸ் பிரிவில் மன்னார் – வவுனியா வீதியில், மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று குறுக்கு வீதியிலிருந்து பிரதான வீதிக்கு வந்த மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் 48 வயதுடைய தந்தையொருவரும் , 12 வயதுடைய அவரது மகனும் உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட பஸ் சாரதி வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் பிரிவில் டீ.எஸ். சந்தியில் நாரஹேன்பிட்டவிலிருந்து தெமட்டகொட நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் மோட்டார் சைக்கிளொன்றில் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 47 வயதுடைய கட்டுகுருந்த பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். அம்பாறை – பதியதலாவ பொலிஸ் பிரிவில் பதியதலாவ – மகா ஓயா வீதியில் விபத்தில் நபரொருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதன் போது விரைந்து செயற்பட்ட பொலிஸார் காயமடைந்த நபரை பதியதலாவை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்த நபர் 49 வயதுடைய பதியதலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

அநுராதபுரம் – ஹபரண பொலிஸ் பிரிவில் கந்தளாய் நோக்கி சென்று கொண்டிருந்த காரொன்று வீதியில் சென்ற பெண்ணொருவர் மீது விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த பெண் தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 69 வயதுடைய மெதிரிகிரிய பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். புத்தளம் – ஆனைமடு பொலிஸ் பிரிவில் ஆனைமடு நோக்கி சென்று கொண்டிருந்த லொறியொன்று எதிர்திசையில் வந்த மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் , மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர்; 40 வயதுடைய நவகத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

நவகுருந்துவத்தை பொலிஸ் பிரிவில் முச்சக்கரவண்டியொன்று சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி தூண் ஒன்றில் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 40 வயதுடைய படிதலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

## வீதி விளக்குகளை அணைத்து...

மீதப்படுத்துவதற்கான மாற்று வழிமுறைகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்துமாறும் அதற்கான வழிமுறைகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் நிதியமைச்சர் அனைத்து உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களிடமும் கேட்டுக்கொண்டுள்ளார்.

உலக சந்தையில் நாளுக்கு நாள் எரிபொருளின் விலை அதிகரித்துச் செல்லும் நிலையில் நாட்டில் மழைவீழ்ச்சி இல்லாத நிலையில் நீர் மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அதேவேளை, நாடு எதிர்கொண்டுள்ள மின்சக்தி நெருக்கடிக்கு தீர்வாக மேற்படி நடவடிக்கையை பின்பற்றுமாறும் நிதியமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஸ

## அத்தியாவசிய பொருட்கள்...

முன்னெடுத்துள்ளது.

நிதியமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில், நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ணவினால் பிரதேச செயலகங்களின் ஊடாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் அரிசி, சீனி, பருப்பு, சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் கையிருப்பு தொடர்பில் ஆராயவுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கொழும்பில் இருந்து ஏனைய பகுதிகளுக்கு அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களை விநியோகிக்கும் பல கென்டய்னர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளன.

இதனால் பல்வேறு பகுதிகளில் அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## அமைதியாக இருக்க...

பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி பொதுமக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்ததாகவும், ஆனால் இரண்டு வருடங்களில் நாடு சீர்குலைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிர்வாகத்தின் நடவடிக்கைகளால் பொதுமக்கள் அதிருப்தியடைந்துள்ளதாகவும், பல்வேறு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நாடு முழுவதும் வரிசையில் நிற்பது, அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்பதற்கு தெளிவான சான்றாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாளுக்கு நாள் அரசாங்கம் நாட்டை கஷ்டமான நிலைக்கு இழுத்துச் செல்வதால் பொதுமக்கள் காத்திருக்க முடியாது.

அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகிக்கும் நோக்கில் எதிர்வரும் 25ஆம் திகதி கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சத்தியாக்கிரகப் போராட்டம் அரசியல் நிகழ்வாக இல்லாமல் நாட்டைப் பாதுகாக்கும் தேசிய நிகழ்வாக அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மசகு எண்ணெய் விலை...

மேலும், வளர்ந்துவரும் நாடுகளுக்கு மசகு எண்ணெய் விலை உயர்வானது, பொருளாதாரத்தில் மோசமான விளைவை ஏற்படுத்துகிறது.

ரஷ்ய எண்ணெய் தடை குறித்து ஐரோப்பிய நட்பு நாடுகளுடன் அமெரிக்கா விவாதித்து வருவதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அண்டனி பிளிங்கன் நேற்று தெரிவித்திருந்தார். ரஷ்யா உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் உற்பத்தியாளராக இருக்கிறது என சர்வதேச எரிசக்தி அமைப்பு தெரிவிக்கின்றது.

ரஷ்யன் கச்சா எண்ணெய்க்கு தடை விதிக்கப்பட்டால் எண்ணெய் விலை பீப்பாய்க்கு $200 ஆக உயரக்கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

## ஐ.ம.ச, ஜே.வி.பியுடன்...

வாசுதேவ நாணயக்கார கூறியதாவது, மேற்படி கட்சிகளுக்கும் எமது கொள்கைகளுக்கும் இடையில் பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது. அக்கட்சிகளுடன் பேசவேண்டிய தேவை எமக்கு கிடையாது. அழைப்பு வந்தால்கூட இணைந்து பயணிக்கும் திட்டம் இல்லை.

தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதியை சந்திக்கவும் நாம் விரும்பவில்லை. பிரதமரிடம் இருந்து அழைப்பு வந்துள்ளது. அவரை உரிய நேரத்தில் சந்திப்போம். பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சி பக்கம்தான் நாம் அமர்வோம் என்றார். எமது கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தற்போதைய பிரச்சினை தொடர்பில் ஆராயப்பட்டது. அமைச்சரவை கூட்டத்திற்கு செல்லாதிருக்கும் எனது முடிவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

ஆனால் அமைச்சராக செயற்படாதிருக்கும் முடிவுக்கு அனுமதி கிடைக்கவில்லை. ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பவும் முடிவு செய்யப்பட்டது. நீக்கப்பட்ட இரு அமைச்சர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும். 11 கட்சிகளும் ஆளும் தரப்பிலே அமரும் என்றார்.

(பா)

## நாடெங்கும் தொடரும் காஸ்...

பகுதிகளிலும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு உணரப்பட்டுள்ளது.

தகனச்சாலைகள், தொழிற்சாலைகள், உணவகங்கள், பேக்கரிகள் என அவற்றுக்கும் எரிவாயு விநியோகம் கடந்த 6 நாட்களில் இடம்பெறவில்லை என லிட்ரோ நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இவ்வாறான நிலையில் நாட்டில் பல உணவங்கள், சுமார் 1,000 க்கும் அதிகமான பேக்கரிகள் சமயல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளன. பல உணவகங்களில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வீடுகளிலும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. லிட்ரோ நிறுவனமானது நாளொன்றுக்கு 80 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்கும் நிலையில் கடந்த மார்ச் முதலாம் திகதி முதல் அந்த விநியோக நடவடிக்கைகள் முற்றாக முடங்கியுள்ளன. இதனிடையே நாட்டில் லாப் சமையல் எரிவாயு சிலிண்டருக்கும் தட்டுப்பாடு காணப்படும் நிலையில், நிலவும் டொலர் பிரச்சினை இடையே இனி மேல் சமையல் எரிவாயு இறக்குமதி தொடர்பில் தாம் இரு முறை சிந்திக்கப் போவதாக அந் நிறுவனம் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் நாட்டுக்கு தேவையான எரிவாயுவை தாங்கிய 3 கப்பல்கள் இலங்கை கடலில் கடந்த 6 நாட்களாக நங்கூரமிட்டுள்ளன. எனினும் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதங்கள் இதுவரை வங்கிகளால் வெளியிடப்படாத நிலையில், கப்பலில் உள்ள எரிவாயுவை பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் நாளொன்றுக்கு 15 ஆயிரம் அமரிக்க டொலர்கள் வீதம் ஒவ்வொரு கப்பலுக்கும் தாமதக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக எரிவாயு இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## ஐ.ம.ச அலுவலகம்... (03 ஆம் பக்கத் தொடர்)

போராட்டத்தின் போது முட்டை தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில், அலுவலக வளாகத்தில் இருந்த சில ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் தற்போதைய ஆபத்தான சூழ்நிலையை எடுத்துக்காட்டி பதிலடி கொடுத்துள்ளனர்.

## விமல் வீரவன்சவுக்கு எதிரான... (03 ஆம் பக்கத் தொடர்)

30ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, கொழும்பு மேலதிக நீதவான் சந்திம லியனகே குறித்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளுக்கான முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசேன் இலங்கை வந்திருந்த சந்தர்ப்பத்தில், கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலக வளாகத்தினை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக முன்னாள் அமைச்சர் உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், நேற்றைய வழக்கு விசாரணையின் போது, குறித்த வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச உள்ளிட்ட 6 பேரும் நீதிமன்றில் ஆஜரானதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

குறித்த வழக்கில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்சவுக்கு மேலதிகமாக இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர, பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விஜேநாயக்க மற்றும் ரோஜர் செனவிரட்ன ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

# நகர்வலம்



## நில்வளா கங்கையின் உவர்த் தன்மை;

# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண விஷேட கலந்துரையாடல்



**வெலிகம தினகரன், மாத்தறை தினகரன் நிருபர்கள்**

மாத்தறை நில்வளா கங்கையின் நீர் உவர் தன்மை அடைகின்ற பிரச்சினையை மட்டுப்படுத்தி, விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்பினை குறைக்க அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

மாத்தறை நில்வளா கங்கைக்கு குறுக்கே அமைக்கப்பட்டுள்ள தடுப்பு செயலிழந்துள்ளதால், விவசாயிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது விடயமாக விஷேட கலந்துரையாடலொன்று மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ, ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில், விவசாயிகள் தற்போது எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் மற்றும் செயலிழந்துள்ள தடுப்பின் நிர்மாணப்பணிகள், பூர்த்தியானதன் பின்னர் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றி மாவட்ட விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் கருத்துகளை முன்வைத்தனர். இவர்களது கோரிக்கைகளுக்கிணங்க, நாளை (09) புதன்கிழமை சகல தரப்பினருடனும் மாத்தறை மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலொன்று மீண்டும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீனன்கோட்டை ஸலாஹ் அறபுக் கல்லூரியின் 20 வருட பூர்த்தி விழா

### பிரதம பேச்சாளராக ஹக்கானியா அதிபர் பங்கேற்பு

பேருவளை, சீனன்கோட்டை மத்ரஸதுஸ் ஸலாஹ் அறபுக்கல்லூரியின் 20வருட பூர்த்தி விழாவும் குர்ஆனை மனனமிட்ட மத்ரஸாவின் இரு ஹாபிழ்களின் அல்குர்ஆன் பாராயண நிகழ்வும் எதிர்வரும் (13) மஃரிப் தொழுகையின் பின் மத்ரஸாவின் மாநாட்டு மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

மத்ரஸா அதிபர் எம்.எஸ்.எம். இர்ஷாத் (ரப்பானி) தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், தஸ்கர ஹக்கானியா அறபுக்கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் ழபீர் ஹனீபா பிரதம பேச்சாளராக கலந்து சிறப்பிப்பார். மேற்படி மத்ரஸாவின் நிர்வாக சபைத்தலைவர் ரஸ்வி ஹாஜியார் உட்பட உலமாக்கள், முக்கியஸ்தர்கள் உட்பட பெருந்திரளானோர் இதில் கலந்துகொள்வர். விழாவிற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தற்போது நடைபெற்றுவருவதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.



ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு புதிய வீடு நிர்மாணிப்பதற்கான காசோலை வழங்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் தங்காலையில் நடைபெற்றது.பயனாளர் ஒருவருக்கு பிரதமர் காசோலை வழங்குவதையும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ , ராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த ஆகியோரையும் காணலாம்.

## உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை சிவலாக்குளம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சிவலாக்குளம் குட்டிகுளம் பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பிலே, இச்சந்தேக நபர் கைதானார். இவரிடமிருந்து துப்பாக்கியொன்றும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் 42வயதுடைய நிக்கவெவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இத்துப்பாக்கியைப் பயன்படுத்தி கொள்ளைச் சம்பவங்கள் உள்ளிட்ட குற்றச் செயல்களில் இவர், ஈடுபட்டுள்ளாரா என்பதை அறிய சிவலாக்குளம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளார்.

## பொறாமையாளர்களின் பழிதீர்ப்பு அறிஞர்கள், ஆளுமையாளர்களுக்கும் வலிகளை ஏற்படுத்தியிருந்தன

ஆளுமையுள்ளோர், அறிஞர்கள், ஞானிகள் மீது இல்லாததை இட்டுக்கட்டி ஓரங்கட்ட முயற்சிக்கும் பொறாமையாளர்களின் கெடுதிகள், இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹ் அவர்களையும் கடுமையாகப் பாதித்திருந்ததாக அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல் தலைவரும் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவருமான எஸ்,எம், சபீஸ் தெரிவித்தார்.

பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற (06) 64 ஆவது ஸஹிஹுல்புஹாரி தமாம் வைபவத்தில் விஷேட உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார். இங்கு பேசிய அவர் குறிப்பிட்டதாவது.

புனித அல்குர்ஆனுக்கு அடுத்ததாக மதிக்கப்படும் ஸஹீஹுல்புஹாரி ஹதீஸ் கிரந்தத்தின் தமாம் நிகழ்வில் பங்கேற்ற நாம் அனைவரும் நற்பேறாளர்கள்தான்.

மிகப்பெரிய ஞானத்திரவியமாக மதிக்கப்படும் இமாம் புஹாரி அவர்கள் அற்புத ஆற்றலுள்ளவர் .பத்து வயதில் குர்ஆனை மனனம் செய்த அவர், பதினோராவது வயதில் ஹதீஸ் கலையில் தேர்ச்சியடைந்தார் இத்துறைகளோடு மட்டும் அவர் தனது அறிவை மட்டுப்படுத்தவில்லை. பிக்ஹ்கலை (சட்டநுட்பம்) நபியவர்களின் ஹதீஸ்களை அறிவிப்புச் செய்த ராவிகள் பற்றிய வரலாற்றுத் தெளிவும் அவருக்கிருந்தது.

ஸஹீஹுஸ் ஸித்தா என்றழைக்கப்படும் ஆறு புனித ஹதீஸ் கிரந்தங்களில், ஸஹீ ஹுல் முஸ்லிம் மற்றும்



ஜாமிஉத்திர்மிதி ஆகிய கிரந்தங்களின் ஆசிரியர்களும் இமாம் புஹாரிஅவர்களின் மாணவர்களே!

இவ்வளவு ஆற்றலுள்ள இமாம் புஹாரியை, பொறாமையில் சக அறிஞர்கள் பழிதீர்க்க முனைந்தனர்.

இந்த நோக்கில், யூத அறிஞர்கள் சிலரைப் பாவித்து புஹாரி ரஹ்மத்துல்லாஹ் அவர்களை கேள்விகளால் குடைந்தனர். குர்ஆன் படைக்கப்பட்டதா? அருளப்பட்டதா? என இமாமிடம் கேட்கப்பட்டது. அருளப்பட்டதென அவர் பதிலளித்தபோது, அருளப்பட்டதை எப்படிப்பார்த்து ஓத முடியுமென மறுகேள்வியையும் யூதர்கள் கேட்டனர்.உங்கள் பார்வையும், குரலுமே படைக்கப்பட்டதென இமாம் புஹாரி பதிலளித்தார்.இமாமைப் பழிதீர்க்க இந்தப் பதிலை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திய சக அறிஞர்கள், குர்ஆன் படைக்கப்பட்டதாக இமாம் புஹாரி கூறியதாக இல்லாததை இட்டுக்கட்டினர்.

இதனால், ஏராளமான வலிகளைத் தாங்கும் துயரத்துக்கு இமாம் உள்ளானார்.

இருந்தாலும் சோரம்போகாத குணத்தால் குன்றாக உயர்ந்து நின்றவர் இமாம் புஹாரி.

அரசனுடைய மகனுக்கு அறிவூட்ட தனது இல்லத்துக்கு வருமாறு அழைத்தபோதும், அறிவு காலடிக்குச் செல்லாது, கால்மடித்துக்கற்க வேண்டிய ஒன்றெனக் கூறி அரசனின் அழைப்பையும் நிராகரித்த, நிகரில்லாத நிறைகுடமாகவே அவர்கள் திகழ்ந்தார்.

ஹிஜ்ரி 250 களில் இடம்பெற்ற இந்த அபாண்டம் சுமத்தும் கபடத்தனமும், அரசனின் குழந்தைகளுக்கு அடிமையாக இருக்கப் பணிக்கும் அதிகார துஸ்பிரயோகங்களும் உலகம் அழியும்வரை நீடிக்காமல் தடுக்கும் ஆயுதம் மக்கள் கைகளிலே உள்ளது.

காதில் கேட்பவைகளை நம்பாமல் உண்மைகளை தேடி நம்புபவர்களாகவும் அநீதிக்கு எதிராக குரல்கொடுப்பவர்களாகவும் மாறினால், இவ்வாறானவர்கள் தடமே இல்லாமல் போய்விடுவர் எனவும் தெரிவித்தார்.



இந்தியாவுக்கான இலங்கை துணைத்தூதுவர் டொக்டர் வெங்கடேஷ்வரன் மற்றும் துணைத் தூதரகச் செயலாளர் பிரஷாந்தி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர், ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதமகர்த்தா ஒஸ்கார்முண்டி,ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் களப்பணிப்பாளர் சத்தியானந்த வேலன் ஆகியோரைச் சந்தித்து,தென்னிந்தியாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## அறுகம்பேயில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று ( 08 ) செவ்வாய்கிழமை அறுகம்பே புழு வேவ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது

ஸ்ரீ லங்கா டெலிகம், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் காரியாலயம் ஆகியவைகளின் அனுசரணையுடன் சம்மேளனத்தின் தலைவர் எ.எம்.ஜௌபர் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமாறா பாரூக் புர்கி பிரதம அதிதியாக கலந்து கொள்கின்றார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கௌரவ அதிதியாகவும் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக, மாவட்ட அபிவிருத்தி சபை தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யு வீரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்கள் எ.எல்.எம். அதா உல்லா, எச்.எம்.எம். ஹரீஸ், எஸ்.எம். முஷாரப், பைசால் காசிம், டாக்டர் திலக் ராஜபக்ச, ரீ.கலைஅரசன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளவுள்ளனர்.

சிறந்த பெண் தலைவர்கள், சிறு நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், பெண் சாதனையாளர்கள் போன்றோர் விருது வளங்கி கௌரவிக்கப்படுவது, நிகழ்வின் முக்கிய அமசமாக இடம்பெறும். அத்தோடு இப் பகுதிளில் வசிக்கும் விதவைகளுக்கு நிவாரணப் பொதிகளும் பாகிஸ்தான் உயர் ஸ்தாநிகர் மேஜர் ஜெனரல் உமாறா பாரூக் புர்கியால் வழங்கப்படவுள்ளது.

## அல்பா வர்த்தக கேந்திர மையத்தை இராஜாங்க அமைச்சர் விஜயம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளத்தில் அமைக்கப்பட்டு வரும் அல்பா வர்த்தக கேந்திர மையத்தை பார்வையிட, கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா அண்மையில் வருகை தந்திருந்தார். புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக்கின் அழைப்பின்பேரில் இவர் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது மறைந்த தலைவர் மர்ஹூம் கே.ஏ. பாயிஸின் கனவுத் திட்டமான, அல்பா வர்த்தக மத்திய நிலையத்தின் தற்போதைய நிலவரங்களை நகரபிதா இராஜாங்க அமைச்சருக்கு விபரித்தார்.

## கொரோனா தடுப்பூசிகளை பெறாதோருக்கு; இரவு நேரத்தில் தடுப்பூசிகளை ஏற்ற நடவடிக்கை

**மாத்தறை தினகரன் நிருபர்**

தடுப்பூசியை இதுவரை பெற்றுக் கொள்ளாத கொரோனா தொற்றாளர்களின் வசதி கருதி, கொரோனா தடுப்பூசிகளை இரவு நேரத்தில் வழங்குவதற்கான நடவடிக்கை மாத்தறை – கெகனதுர சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் (06) மேற்கொள்ளப்பட்டது.

கெகனதுர சுகாதார சேவை அலுவலகத்தில் நடைபெற்ற இந்ததடுப்பூசி பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையில், பெரும் தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார். சுகாதார சேவை அலுவலகத்தில் நடைபெற்ற, இந்த இரவு தடுப்பூசி வழங்கும் நிகழ்வு, வரலாற்றில் முதல் தடவையாக நடைபெற்றதென மக்கள் சுகாதார பிரிவு பரிசோதகர் எச். ஐ. ஜகத்குமார தெரிவித்தார். பகல் நேரங்களில் இப் பிரதேசத்திலுள்ள தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்வதால், அவர்களால் கொரோனா தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைப்பதில்லை. இதனால், இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.


திகதி 06.03.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4698
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,871,130.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 6 5 8 8 7 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 53,300,273.20

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1046
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,637,360.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 239,581,278.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து L சுப்பர் இலக்கம் 18 வெற்றி இலக்கங்கள் 02 09 41 47

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 728
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,129,260.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 20 63 64 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,895,527.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1220
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.1,902,220.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 9 2 9 3 3 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,382,130.80

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416




மிஹிந்தலை பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட கட்டுபொத மற்றும் எலப்பன்குளம் கிராமங்களில் மட்பாண்ட தொழில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க பயனாளி ஒருவருக்கு தொழிலுக்குத் தேவையான உபகரணத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

## மரைகளை வேட்டையாடி இறைச்சி விற்பனை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கல்ஓய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனவிழுந்தாவ வனப் பகுதியில், இரண்டு மரைகளை வேட்டையாடி விற்பனை செய்யப்படவிருந்த 67 கிலோ இறைச்சியை கல்ஓய பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதுதொடர்பில், பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக் கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலே, இந்த இறைச்சி கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பெரிய அளவிலான வியாபாரிகள் இதனுடன் தொடர்பு கொண்டுள்ளார்களா? என்பது தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.எனினும்,இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படாததால், உரியவர்களைத் தேடியும் வலை விரிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்டுள்ள இறைச்சி ஹிங்குராங்கொட நீதி மன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கல்ஓய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஜீ.ஜீ.சீ. ஜயதிஸ்ஸ, சார்ஜன்ட்களான இந்திக, சுனந்த கான்ஸ்டபிள்களான சபறுள்ளா மற்றும் ரங்கன ஆகியோர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

## சர்வதேச செய்திகள்

# உக்ரைனிய நகரங்களில் ரஷ்யா 'மனிதாபிமான பாதைகள்' திறப்பு

## கியேவ் நகரை கைப்பற்றும் முயற்சி தீவிரம்

ரஷ்ய இராணுவம் உக்ரைனின் பல நகரங்களில் நேற்று திங்கட்கிழமை தாக்குதல்களை நிறுத்தி மனிதாபிமான பாதைகளை திறந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது பற்றிய அறிவிப்பை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டிருந்தது.

மொஸ்கோ நேரப்படி நேற்றுக் காலை 10 மணிக்கு உக்ரைன் தலைநகர் கியேவ் மற்றும் கார்கிவ், மரியுபோல் மற்றும் சமி நகரங்களில் இந்த மனிதாபிமானப் பாதை திறக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மக்ரோன் விடுத்த தனிப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஆர்.ஐ.ஏ செய்தி நிறுவனம் வெளியிட்ட வரைபடத்தின்படி, கியெவ் நகரின் மனிதாபிமானப் பாதை ரஷ்யாவின் நட்பு நாடான பெலாரஸை நோக்கிச் செல்வதோடு கார்கிவில் இருந்து ரஷ்யாவை நோக்கியே அந்தப் பாதை வரையப்பட்டுள்ளது. மரியுபோல் மற்றும் சமி நகரங்களுக்கான மனிதாபிமானப் பாதை ஏனைய உக்ரைன் நகரங்கள் மற்றும் ரஷ்யாவை நோக்கி உள்ளது.

கியேவில் இருந்து வெளியேற விரும்புபவர்கள் விமானம் மூலமும் ரஷ்யாவுக்கும் பயணிக்க முடியும் என்று ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டது. இந்த வெளியேற்றங்கள் குறித்து ஆளில்லா விமானங்களில் கண்காணிக்கப்படும் என்றும் அது குறிப்பிட்டிருந்தது.

“ரஷ்யா மற்றும் அனைத்து நாகரிக உலகையும் ஏமாற்றும் உக்ரைனின் முயற்சி இந்த முறை தோல்வி அடையும்” என்று அமைச்சு குறிப்பிட்டிருந்தது.

எனினும் உக்ரைனில் இருந்து வெளியேறும் மக்கள், பெலாரஸ் அல்லது ரஷ்யாவிற்கு அகதியாக செல்லும் வகையில் திறக்கப்படும் பாதை தொடர்பான ரஷ்ய முன்மொழிவு ‘முற்றிலும் நியாயமற்றது’ என்று உக்ரைன் கூறியுள்ளது.



“இது முற்றிலும் நியாயமற்றது. மக்கள் படும் துன்பம், விரும்பிய சூழலை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது,” என்று ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கியின் செய்தித் தொடர்பாளரை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் வெளியானதோடு, இதனால் 1.5 மில்லியன் உக்ரைனியர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர். மேற்குலகம் விதித்துள்ள தடைகளால் ரஷ்யாவின் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

“சிறப்பு இராணுவ நடவடிக்கை” என்று அழைக்கப்பட்ட உக்ரைன் மீதான படையெடுப்பை ரஷ்யா கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பித்தது. பொதுமக்கள் இருக்கும் பகுதிகள் மீது தாக்குதல் நடத்துவதில்லை என்றும் உக்ரைனை ஆக்கிரமிக்கும் திட்டம் இல்லை என்றும் ரஷ்யா தொடர்ந்து கூறி வருகிறது.

இந்தப் பதற்றம் காரணமாக எண்ணெய் விலை 24 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை தடை செய்வது குறித்து ஆய்வு செய்து வருவதாக அமெரிக்க நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. உலக எண்ணெய் விநியோகத்தில் ரஷ்யா 7 வீதத்தை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவின் ஐந்தாவது மிகப்பெரிய எண்ணெய் இறக்குமதி நாடாக இருக்கும் ஜப்பானும் ரஷ்யாவின் எண்ணெயை தடை செய்வது குறித்து அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளது.

ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் எரிவாயுவில் பெரிதும் தங்கியுள்ள ஐரோப்பாவும் இந்தத் தடை குறித்து திறந்த நிலைப்பாட்டில் இருப்பதாக இது தொடர்பான வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

3 மில்லியன் மக்கள் வாழும் உக்ரைன் தலைநகர் கியேவ் மீது முழு வீச்சில் படையெடுக்க ரஷ்யா வளங்களை சேகரிக்க ஆரம்பித்திருப்பதாக உக்ரைன் ஆயுதப் படைகளின் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். தலைநகரை நோக்கி பெலாரஸில் இருந்து தெற்குப் பக்கமாக ரஷ்ய இராணுவம் முன்னேற்றம் கண்டபோதும் அண்மைய தினங்களில் அது மெதுவடைந்து காணப்பட்டது.

எனினும் டாங்கர்கள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட படை பிரிவுகள் மூலம் கியேவ் நகரின் இர்பின் பகுதியை நோக்கி முன்னேறி வருவதாகவும் உக்ரைன் இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

ரஷ்ய இராணுவ கமாண்டர்கள் எரிபொருளை கப்பல் மூலம் தங்கள் படைகளுக்கு, பெலாரஸிலிருந்து செர்னோபிள் விலக்கு மண்டலம் வழியாக அனுப்பி வருகின்றனர் என்றும் கிழக்கு நகரங்களான கார்ஹிவ், செர்னிஹிவ், சுமி மற்றும் தெற்கு நகரமான மைகோலாயிவ் ஆகிய பகுதிகளை ரஷ்ய இராணுவம் சுற்றி வளைப்பதில் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கருங்கடல் நகரான மரியுபோலில் சுமார் 200,000 பேர் முற்றுகையில் சிக்கிய நிலையில் உள்ளனர். ரஷ்யப் படைகள் தொடர்ந்து ஷெல் குண்டுகளை வீசி வரும் நிலையில் கடந்த ஆறு நாட்களால் அவர்கள் நிலவறைகளில் உறங்கி வருகின்றனர். நகருக்கான உணவு, நீர், மின்சாரம் மற்றும் சூடேற்றும் வசதிகள் துண்டிக்கப்பட்டிருப்பதாக உக்ரைன் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

நகரில் உள்ள 400,000 பேரில் பாதி அளவானோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து வெளியேற்றப்பட திட்டமிடப்பட்டபோதும் இரண்டாவது முறையாகவும் அந்த முயற்சி தோல்வி அடைந்தது. அந்த நகரில் அமுல்படுத்தப்படவிருந்த யுத்த நிறுத்தம் முறிவடைந்ததை அடுத்து இந்த நிலை ஏற்பட்டது. இதற்கு இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம்சாட்டி உள்ளன.

தெற்கு நகரான மைகொலயிவ் நகர் மீது ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக உக்ரைன் நிர்வாகம் நேற்று தெரிவித்தது.

ரஷ்ய படையெடுப்புக்கு பின்னர் உக்ரைனில் இதுவரை 20 சிறுவர்கள் உட்பட 364 பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை கடந்த ஞாயிறன்று கூறியிருந்தது. இதில் மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

பொதுமக்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்படுவதற்கான நம்பகமான அறிக்கைகளை காண முடிவதாகவும் போர் குற்றம் ஒன்று பற்றி விசாரணைக்காக இவை ஆவணப்படுத்தப்பட்டு வருவதாகவும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனில் ரஷ்யா போர்க் குற்றங்களில் ஈடுபடுவது பற்றி விசாரணை ஒன்று தேவைப்படுவதாக ஐரோப்பிய ஆணைக்குழு தலைவர் வொன் டெர் லெயேன் தெரிவித்துள்ளார்.

“இந்த விடயம் பற்றி தெளிவான மற்றும் வலுவான விசாரணை ஒன்று தேவைப்படுவதாக நான் நினைக்கிறேன்” என்று சி.என்.என் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் மீது கொடூரங்களை புரியும் ரஷ்யா தண்டனைக்கு முகம்கொடுக்கும் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி எச்சரித்துள்ளார்.

“கல்லறையைத் தவிர உங்களுக்கு இந்த பூமியில் அமைதியான இடம் ஒன்று இருக்காது” என்று தொலைக்காட்சியில் உரையாற்றிய அவர் கூறினார்.

உலகின் பல இடங்களிலும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்றதோடு, ரஷ்யா மீது கடும் தண்டனைகளை விதிக்கும்படியும் மேலும் ஆயுதங்களை தரும்படியும் மேற்குலக நாடுகளிடம் உக்ரைன் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் உக்ரைனுக்கு போர் விமானங்களை வழங்குவது குறித்து பரிசீலித்து வருவதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனை இராணுவமயமற்ற, நாஜி செல்வாக்கற்ற மற்றும் நடுநிலையானதாக மாற்ற விரும்புவதாக புட்டின் குறிப்பிட்டுள்ளார். மேற்குலகின் தடைகள் “ஒரு போர் பிரகடனமாக” கருதுவதாகவும் கடந்த சனிக்கிழமை அவர் குறிப்பிட்டிருந்தார்.

# தேசத்தைக் காக்கும் உன்னதமான பணியில் இராணுவ மகளிர் படையணியின் பங்களிப்பு

“இயலாததவையென ஒன்று மில்லை” என்ற கூற்றை உண்மையாக்கும் வல்லமை கொண்ட அமைப்பாக இலங்கை இராணுவம் இன்றளவில் பல்வேறு துறைகளிலும் பரிணமித்து வருகின்ற அதேவேளை, துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்களை உள்ளடக்கிய அமைப்பாகவும் நிபுணத்துவத் திறன்களை பயிற்சிகள் மூலம் பகிர்ந்தளிக்கக் கூடிய அமைப்பாகவும் விளங்குகின்றமை சிறப்பம்சமாகும்.

இன்றளவில் உலகின் பல்வேறு துறைகளிலும் இன்றியமையாத பங்களிப்புகளை வழங்கிவரும் பெண்கள் இலங்கை இராணுவத்திலும் இணைந்து கொண்டு அதன் நிபுணத்துவம் மற்றும் பல்துறை அம்சங்களை உள்ளடக்கிய செயற்பாடுகளுக்கும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். அந்த வகையில், பெண்கள் எதற்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை உறுப்படுத்தும் விதமான நாட்டின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இராணுவ சேவையிலும் இணைந்து கொண்டு திறன்மிக்கச் சேவைகளை வழங்கி வருகின்றனர்.

சாதாரண மனிதர்களுக்கும் பல வேறுபாடுகள் உண்டு என்ற வகையில் “இராணுவ பலமே பலமான ஆயுதம்” என் எண்ணக்கருவின் கீழ் இராணுவத்தினால் ஆற்றப்படும் சேவைகளுக்கும் பெண்கள் தங்களது பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர்.

அதற்கமைய, 'உறுதியான மனம் ஆயுத பலமிக்க கரங்கள்' என்ற எண்ணக்கருவை மூலாதாரமாகக் கொண்டு 1979 ஆம் ஆண்டில் இலங்கை மகளிர் படையணி அப்போதைய தளபதி காலம் சென்ற ஜெனரல் ஜே.ஈ.டி பெரேரா அவர்களினால் உருவாக்கப்பட்டது. இப்படையணியானது இன்றளவில், 2 நிரந்தர படையலகுகள், 5 தொண்டர் படையலகுகள் என மொத்தம் 7 படையலகுகளை கொண்ட படையணியாக இலங்கை இராணுவ கட்டமைப்புக்குள் இயங்கி வருகின்றது.

குறிப்பாக ஆண் சிப்பாய்களை முழுமையாக களச்செயற்பாடுகளில் உள்ளீர்ப்பதை அடிப்படை நோக்கமாக கொண்டும், அதற்காக தொலைபேசி இயக்குனர்கள், கணினி இயக்குனர்கள், தாதியர் தொழில்துறைகளில் பணியாற்றி வந்த ஆண் சிப்பாய்களை விடுவிப்பதற்கான முயற்சியாகவும் இலங்கை இராணுவ மகளிர் படையணி உருவாக்கப்பட்டமையினால் அந்த படையணியின் சிப்பாய்கள் ஆரம்ப காலங்களில் மேற்குறிப்பிட்ட பணிகளில் மாத்திரமே அமர்த்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இந்தப் படையணியின் முதலாவது கட்டளை அதிகாரி லெப்டினன்ற் கேர்ணல் ஏ.டபிள்யூ. தம்பிராஜ் என்பதும் அவர் ஓர் தமிழர் என்பதும் குறிப்பிட்டுக் கூற வேண்டிய சிறப்பம்சமாகும். மகளிர் படையணியின் தலைமையகம் 1977 ஆம் ஆண்டில் கொழும்பு பொரளையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததோடு, நிர்வாகச் செயற்பாடுளை இலகுபடுத்துவதற்கு ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த படையணி தலைமையகம் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது.

இருப்பினும் பின்னர் கள நடவடிக்கைகளிலும் மகளிர் படையணியின் சிப்பாய்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அதன் மற்றமொரு சிறப்பம்சமாகும். இந்நிலையில் இப்படையணியின் படையலகுகள் நாட்டின் எட்டு திக்கிலும் நிறுவப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தப்பதாகும். அதற்கமைய நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு பகுதிகளில் சேவையாற்றும் தமிழ், சிங்கள மொழிகளை பேசுபவர்கள் என்பதுடன் அவர்கள், பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களின் பிரதிநிதிகள் ஆவர்.



ஆண்களுக்கு இணையாக இன்று இராணுவத்தின் அனைத்துத் துறைகளிலும் இணையாக சேவையாற்றி வருகின்ற மகளிர் படையணியினர் அமைதி காக்கும் பணிகளுக்கும் பங்களிப்புச் செய்து வருகின்றனர். குறிப்பாக ஐக்கிய நாட்டு அமைதி காக்கும் பணிகளுக்காக லெபனான் நாட்டிற்கு புறப்பட்டுச் சென்ற 2022 ஆம் ஆண்டில் அமைதி காக்கும் பணிகளுக்கான குழுவில் ஒரு பெண் அதிகாரியும் 7 பெண் சிப்பாய்களும் அடங்கியுள்ளனர்.

விளையாட்டுத் துறையிலும் இராணுவத்திலுள்ள மகளிர் சிப்பாய்களின் பங்களிப்புக்கள் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன. குறிப்பாக தடகள, தற்காப்பு கலை, குறிபார்த்துச் சுடுதல் போன்ற விளையாட்டுக்களில் சர்வதேச மட்டத்தில் குறிப்பிடத்தக்க இலக்குகளை அடைந்துள்ளனர். குறிப்பாக ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கைக்கு முதலாவது வெள்ளி பதக்கம் வென்ற வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்க இராணுவத்தைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை இராணுவத்தின் தற்போது சேவையிலுள்ள சிரேஷ்ட பெண் அதிகாரியாக பிரிகேடியர் (வைத்தியர்) டீ.என்.டி. முனசிங்க அவர்கள் உள்ளதுடன் இராணுவ மகளிர் படையணியின் சேவையிலிருக்கும் சிரேஷ்ட பெண் அதிகாரிகயாக மேஜர் ஜீ.எஸ். ரன்கொட்டிகொட அவர்கள் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோல் இலங்கை இராணுவ மகளிர் படையணியில் இணைந்து கொண்ட முதலாவது பெண் அதிகாரியாக (ஓய்வு) லெப்டினன்ற் கேர்ணல் கே.சீ. வீரசேகர அவர்கள் விளங்குவதோடு அவர், 1979 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி இணைந்து கொண்டிருந்தார். இதே நேரம் இராணுவத்தில் இணைந்து கொண்ட முதலாவது பெண் சிப்பாயாக கோப்ரல் (ஓய்வு) கே.எம்.பி. வில்ஷன் அவர்கள் விளங்குகிறார். இவர் 1980.10.14 ஆம் திகதி இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பரசூட் பயிற்சிகளிலும் தங்கள் பங்களிப்பை வழங்க தவறாத மகளிர் படையணியில் முதல் பரசூட் பயிற்சி பெற்ற அதிகாரியாக கப்டன் வீ.என்.எஸ். விதானகே அவர்களும் பரசூட் பயிற்சி பெற்ற இலங்கை இராணுவத்தின் முதலாவது வீராங்கனையாக கோப்ரல் ஆர்ஏஎன் ஹேமந்தி அவர்களும் அறியப்படுகின்றனர்.

அதேபோல் வெளிநாட்டு களப் பயிற்சிகளில் பங்களிப்புச் செய்த இலங்கை இராணுவத்தின் முதலாவது உறுப்பினராக மேஜர் கேஎச்டீ மெண்டிஸ் அவர்கள் விளங்குகிறார்.

மேலும் இலங்கை இராணுவ மகளிர் படையணி, இலங்கை இராணுவ சமிக்ஞை படையணி, இலங்கை இராணுவ வைத்திய படையணி, இலங்கை இராணுவ புலனாய்வு படையணி, இலங்கை இராணுவ பொலிஸ் படையணி, இலங்கை இராணுவ பொறியியல் சேவை படையணி, மற்றும் இலங்கை இராணுவ பொதுச் சேவைப் படையணிகளிலும் இன்றளவில் 200 க்கும் மேற்பட்ட பெண் அதிகாரிகளும் சுமார் 3500 க்கும் மேற்பட்ட பெண் சிப்பாய்களும் சேவையாற்றுகின்றனர்.

இவற்றுக்குக்கு மேலதிகமாக தற்போதைய இராணுவ தளபதியின் எண்ணக்கருவிற்கமைய விஷேட ரோந்து பணிகளுக்கான மோட்டார் சைக்கிள் பயிற்சிகளுக்காக மகளிர் சிப்பாய்கள் விடுவிக்கப்பட்டுள்ளமையும் சிறப்பம்சமாகும்.

இவ்வாறு தங்கள குடும்ப வாழ்க்கைக்கு அப்பால் தேசத்தின் நலனுக்காகவும் தங்களை அர்ப்பணிக்கும் விதமாக இராணுவ சேவையில் இணைந்து கொண்டிருக்கும் அனைத்து வீராங்கனைகளுக்கும் பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா உள்ளிட்ட அனைத்து இராணுவ உறுப்பினர்களின் மகளிர் தின வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**கெப்டன் வா சுதர்ஸ்சன்**
இராணுவ ஊடக பணிப்பகம்
இராணுவத் தலைமையகம்
ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு

# சோதனைகளை வெற்றிகொள்ளும் இயேசுவின் பாலைவனஅனுபவம்



எத்தனை சோதனைகள் நமது வாழ்க்கையில் வந்தாலும் மனம் தளராமல் கொண்ட கொள்கையில் உறுதியுடன் நின்றால் எப்போதும் வெற்றிகளைக் குவிக்கலாம்.

இயேசு, தனது பணிவாழ்வைத் தொடங்கும் நிலையில் தூய ஆவியால் பாலை நிலத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு சாத்தானின் சோதனைக்கு ஆட்படுகிறார்.

அவர் மூன்று விதங்களில் சாத்தானால் சோதிக்கப்படுகிறார். முதல் சோதனையில் உணவு மையப்படுத்தப்படுகிறது.



“அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார். அந்நாட்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. அதன் பின் அவர் பசியுற்றார். அப்பொழுது அலகை அவரிடம், “நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும்படி கட்டளையிடும்” என்றது. அதனிடம் இயேசு மறுமொழியாக, “‘மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை’ என மறைநூலில் எழுதியுள்ளதே” என்றார் (வசனம் 34).

எந்தவொரு அரசனும், எதிரியின் கோட்டைக்குள் நுழையப்போகும் முன்பு அக்கோட்டையின் எந்தப்பகுதி மிகவும் பலவீனமாக இருக்கின்றது என்பதைக் கண்டறிந்து அவற்றை முதலில் தாக்கி வெற்றிகொள்ள முயற்சிப்பான்.

உலகம் தோன்றியதுமுதல் இன்றுவரை பசிதான் ஒரு மனிதனின் பலவீனமாக இருக்கின்றது.'பசி வந்துவிட்டால் பத்தும் பறந்து போகும்' என்பார்கள். பசியைப் போக்கியே பலர் தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்வதைப் பார்க்க முடிகிறது.

. பல நேரங்களில் உணவு நம் உணர்வுகளையெல்லாம் அப்படியே மழுங்கடித்துவிடுகிறது. உணவு நமது மானம், மரியாதை, கௌரவம் எல்லாவற்றையும் விலை பேசிவிடுகிறது. சிலவேளை உணவு வழியாகவே நம் உயிருக்கும் உலை வைக்கப்படுகிறது.

வாழ்க்கைக்கு உணவு தேவை என்பதைவிட உணவுக்காகவே வாழ வேண்டும் என்ற மலிவான சிந்தனைகளால் பலரின் உண்மை வாழ்வு உருக்குலைந்து போய்விடுகிறது. இதன் அடிப்படையில், சாத்தானும் இயேசுவின் பசியைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளப் பார்க்கிறது. ஆனால் இயேசு, மனிதரின் வாழ்வு, உணவை மையப்படுத்தி அமைவதில்லை மாறாக, இலட்சியத்தை மையப்படுத்தி அமைகிறது என்பதை எடுத்துக்காட்டி சாத்தானின் முதல் முயற்சியைத் தோற்கடிக்கின்றார்.

இரண்டாவது சோதனையில், சாத்தான் இயேசுவிடம் அதிகார மோகத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறது.

பின்பு, அலகை அவரை அழைத்துச் சென்று உலகத்தின் அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அவருக்குக் காட்டி, அவரிடம், “இவற்றின்மேல் முழு அதிகாரத்தையும் இவற்றின் மேன்மையையும் உமக்குக் கொடுப்பேன். இவை யாவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன; நான் விரும்பியவருக்கு இவற்றைக் கொடுப்பேன். நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையவையாகும்” என்றது.

இயேசு அதனிடம் மறுமொழியாக, “‘உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக’ என்று மறைநூலில் எழுதியுள்ளது” என்றார். (வசனம் 58).

இன்றைய உலகில் அதிகாரப் போதைதான் அனைவரையும் ஆட்டிப்படைக்கிறது. இங்கே அதிகாரத்தைப் பெற அதற்காக எத்தகைய அசிங்கமான காரியங்களையும் செய்யத் தயாராக இருக்கின்றார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் நாட்டை ஆளும் தலைவர்கள் சிலர் ஹிட்லரின் வடிவமெடுக்கத்தான் செய்கிறார்கள். இன்று உலகமே உக்ரைன் நாட்டைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கின்றது. ஒரு தனிப்பட்ட மனிதரின் அல்லது சிலரின் அதிகார மோகம், அத்தனை ஆயிரம் மக்களை இன்று அவதிக்குள்ளாக்கி வருகின்றது.

இன்றைய உலக அரசியலை பொறுத்தளவில் எனக்குப் பதவி வேண்டும் அவ்வளவுதான். அதற்காக நான் எந்த எல்லைக்கும் செல்லத் தயார். எதையும் யாருக்காகவும் எவ்வளவு வேண்டுமானாலும் விட்டுக்கொடுக்கவும் தயாராக இருக்கிறேன் என்ற கொள்கையற்ற நிலையைப் பார்க்கிறோம். துறவற வாழ்விலும் இந்தப் பதவி மோகத்திற்குப் பஞ்சமில்லை. எனக்கு அந்தப் பொறுப்பு வேண்டும், எனக்கு இந்தப் பொறுப்பு வேண்டும், நான் அந்தக் கல்லூரிக்கு முதல்வராகவேண்டும், இந்தக் கல்லூரியின் அதிபராக வேண்டும், உயர்ந்த தலைமைப் பொறுப்புகளை நான் பெற வேண்டும்என்ற பதவிவெறியால் இயேசுவின் இறையாட்சிக் கொள்கைகள் இங்கே முக்கியத்துவம் பெறுவதில்லை என்பதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். மனிதத்தை சிதைத்தழிக்கும் இத்தகைய பதவி மோகத்தை சாத்தான் இயேசுவிடம் எடுத்துக்காட்டியபோது, இயேசு, தனது வழி தனி வழி என்பதை எடுத்துரைத்து, அதன் சுயநல எண்ணங்களை தவிடு பொடியாக்குகின்றார்.

உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும். ஏனெனில், மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” (மார்க் 10: 4445) என்ற இயேசுவின் வார்த்தைகள் இங்கே நினைவுகூரத் தக்கவை.மூன்றாவது சோதனையாக சாத்தான் இயேசுவுக்கு கொடுப்பது தற்பெருமை.

பின்னர், அது அவரை எருசலேமுக்கு அழைத்துச் சென்று கோவிலின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி, “நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும்; ‘உம்மைப் பாதுகாக்கும்படி கடவுள் தம் தூதருக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்’ என்றும் ‘உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக்கொள்வார்கள்’ என்றும் மறைநூலில் எழுதியுள்ளது” என்றது. இயேசு அதனிடம் மறுமொழியாக, “‘உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம்’ என்றும் சொல்லியுள்ளதே” என்றார். (வசனம் 912)

ஒரு மனிதர் கொண்டிருக்கின்ற தற்பெருமையை வைத்தே அம்மனிதர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் நாடிபிடித்துப் பார்த்துவிடலாம். தற்பெருமை உச்சம்தொடும்போது அது ஆணவமாக ஊற்றெடுக்கிறது. ஆணவம் அதிகமாகத் தலைக்கேறும்போது அம்மனிதர் அழிவுக்குள்ளாகிறார். மெல்லக் கொல்லும் நஞ்சுபோல அது மாறிவிடும்.

உங்களுக்கு இருக்கிற சக்திக்கு.... உங்களுக்கு இருக்கிற திறமைக்கு என சாத்தானைப்போன்று இதனைச் சொல்லிச் சொல்லியே வளர்த்துவிடுவதற்கென்றே பலர் நம் பக்கத்தில் இருப்பார்கள். இயேசுவைப் போன்று நாம் மிகவும் கவனமாக இல்லை என்றால் நம் வாழ்வு உடைந்துபோகும்.

சாத்தானின் தந்திரங்களை அறிந்திருந்த நமதாண்டவர் இயேசு, அதனின் தீய எண்ணங்களை உடைத்தெறிகின்றார். ஒரு மனிதர் தனது உழைப்பினால் எவ்வளவு தான் உச்சிக்குச் சென்றாலும், தான் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து அவ்வப்போது தன்னை சரிசெய்துகொண்டால எப்போதும் வெற்றியின் பாதையில் செல்லலாம். இன்றைய முதல் வாசகம் இத்தகைய சிந்தனைகளைத்தான் முன்னிறுத்துகின்றது. இரண்டாவது முக்கியமான விடயம் என்னவென்றால், உயிருள்ள இறைவனின் வார்த்தையின்மீது நாம் ஆழமான நம்பிக்கைக் கொள்வது. இதனை இன்றைய இரண்டாவது வாசகம் நமக்கு அறிவுறுத்துகின்றது.

சாத்தான் எப்போதும் நல்லவன் போலத்தான் நம்மிடம் வரும். நமக்கு நல்லது செய்வது போலவே நமக்குள் நுழைந்து நம்மை ஆட்கொண்டதும், சிறிது சிறிதாக நமது வாழ்வை நீர்த்துபோகச் செய்துவிடும். இன்று நாம் காணும் மூன்று சோதனைகளிலும் இறைவார்த்தைகளைக் கொண்டே இயேசுவை தனது வலையில் சிக்கவைக்கப் பார்க்கிறது சாத்தான். இதனை நன்கறிந்த இயேசு, அதே இறைவார்த்தைகளைக் கொண்டே அச்சாத்தானை வீழ்த்துகிறார். எனவே, எனது அன்றாட வாழ்வில் நான் உடலை வளர்க்கும் உணவுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கிறேனா? அதிகாரப் போதைக்கு அடிமையாகிறேனா? தற்பெருமையை வளர்த்துக்கொள்ள காரணமாகிறேனா? ஆகிய கேள்விகளை எழுப்பி அடிக்கடி நம்மை ஆன்ம பரிசோதனை செய்துகொண்டால், இயேசுவைப்போல நாமும் சாத்தானின் சோதனைகளைச் சுலபமாக வென்றுவிடலாம். அதற்கான இறை அருளைவேண்டுவோம்.

அருட்தந்தை **சூசை மாணிக்கம்...**




# மன்னிப்போம் மறப்போம்

மனித வாழ்விலே ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு கடந்து செல்லுதல் என்பது ஒரு மகத்தான செயற்பாடு.

எனது மகன் க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்து மேற்படிப்பிற்காக பல்கலைக்கழகத்திற்கு செல்கின்றான் என்றால் அவன் எடுத்து வைப்பது என்னவோ ஒரு படிக்கல் தான். ஆனால் அவன் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு கடந்து வருவதற்கு எடுத்துக்கொண்ட காலம் பல வருடம்.

வேதனைகள் அனைத்தையும் சாதனையாக மாற்றி அதைக்கடந்து வரும் பொழுது கிடைக்கும் மகிழ்ச்சி அளவிட முடியாத ஒன்று. சிந்தித்துப் பார்த்தால் இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொன்றையும் கடந்து செல்வதற்கு எத்தனை சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கவேண்டியிருக்கிறது.



கல் சாதாரண சிலையாக மாறுவதற்கு உளிகளால் எத்தனை தாக்குதல்கள். ஒரு மூங்கில் புல்லாங்குழலாக மாறுவதற்கு எத்தனை அகழ்வுகள்? வாழ்க்கையில் கடந்து செல்லுதல் என்பது இன்றைய நிலையை பொறுத்தவரையில் கடினமான விடயம்தான். கடந்துவிட்டோம் என்றால் அதைவிட களிப்பானது எதுவுமில்லை.

கடவுளை நீ அன்பு செய்கிறாய் என்பது மகிழ்ச்சி. உன்னை நீ அன்பு செய்கிறாய் என்பது மிக்க மகிழ்ச்சி. உனக்கு அடுத்திருப்பவரை நீ அன்பு செய்கிறாய் என்பது மிக மிக மகி'ழ்ச்சி எங்கோ பூகம்பம் நடந்தது என்றால் யார் என்று தெரியாதவர்களுக்குக் கூட அன்பை வெளிப்படுத்துகிறோம். ஆனால் நமது பகைவருக்கு அன்பு செலுத்துவது என்பது மட்டும் முடியாமல் இருக்கிறது.

முரண்பாடான ஆனால் வாழ்க்கையின் ஆழத்தை உணரச் செய்யும் உணர்வில் கலந்த வார்த்தைகளைச் சிந்தித்துப்பார்த்தால் கிறிஸ்தவத்தின் மையப் புள்ளியும் சகாப்தமும் இந்த வார்த்தையிலேயே அடங்கிவிடும். “மன்னிக்கத் தெரிந்த உள்ளம் மாணிக்கக் கோவிலப்பா” என்று கவிஞர் கண்ணதாசன் கூறுவார்.

மானிடமகன் பொருட்டு மக்கள் உங்களை வெறுத்து ஒதுக்கி நீங்கள் பொல்லாதவர் என்று இகழ்ந்து தள்ளிவிடும் போது நீங்கள் பேறுபெற்றோர் (லூக்: 22) உண்மைதான் நீங்கள் இகழப்படுவதால் அல்ல மாறாக இகழ்ச்சிப்படுத்துபவரை மன்னிப்பதால் தான் பேறுபெற்றவர்கள் என்பதை மறைமுகமாக விளக்குகின்றார் நம் ஆண்டவர் இயேசு.

ஆக பகைமை என்ற சொல்லுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்றால் அன்பும் மன்னிப்பும் இணைய வேண்டும்.நாம் எதுவாக மாற வேண்டுமென்று நினைக்கின்றோமா அதுவாக மாறுவோம். என்பது அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கத்தின் மந்திர வார்த்தை. நாட்டின் அதிபராக வேண்டும் என எண்ணினேன். அதுவாகவே மாறினேன் என்றாராம் அவர்.

ஒரு சமூக சேவகியாக வேண்டும் என்ற எண்ணம் இல்லையெனில் அன்னை திரேசா அகிலம் போற்றும் அளவுக்கு உருவாகி இருக்க முடியுமா? ஒரு தனி மனிதனின் எண்ணங்கள் தான் அவனை வாழவைக்கும். அதேசமயம் சில சமயம் அது வீழவும் வைக்கும். நம்முடைய எண்ணங்களும் சிந்தனைகளும் தொலைநோக்குப் பார்வையுடனானதாக இருந்தால் பகைமை அழியும். அன்பு மலரும்.

அன்பு வாழ்க்கை வாழும் போது நாம் விண்ணகத்தை சார்ந்தவர்களாக இருப்போம். “உங்களைத் துன்புறுத்துவோருக்காக ஆசிகூறுங்கள். ஆம் ஆசி கூறுங்கள். சபிக்க வேண்டாம். (உரோ 12:140 என புனித பவுல் கூறுவார். பிறரைச் சபிக்கும் பொழுது எதிர் மறை எண்ணங்கள் நம்மில் தலைதூக்கும்.

எமது அன்றாட வாழ்க்கையை சிந்தித்துப் பார்ப்போம். நான் என்னுடைய அர்த்தமில்லாத எண்ணங்களால் எத்தனை பகைவர்களை என் வாழ்நாளில் சம்பாதித்திருக்கிறேன்? அவர்களை மன்னிக்க இப்பொழுது தயாராக இருக்கின்றேனா?வாழ்வு என்பது இறைவன் வரைந்த ஓவியம். வாழ்க்கை என்பது மனிதன் படைக்கும் காவியம் எனவே மன்னிப்போம் மறப்போம் .அன்பை வளர்ப்போம்

அம்புறோஸ்பீற்றர்...

# ஆர்த்தடக்ஸ் கிறிஸ்தவர்கள் மன்னிப்பு ஞாயிறு சிறப்பிப்பு

*ரஷ்யாவில் திருப்பீடத் தூதராகப் பணியாற்றும் பேராயர் Giovanni D'Aniello அவர்கள் ரஷ்ய ஆர்த்தடக்ஸ் முதுபெரும்தந்தை கிரில் அவர்களை மாஸ்கோவிலுள்ள ஆர்த்தடக்ஸ் சபை தலைமையகத்தில் சந்தித்து கிறிஸ்தவ சபைகள் அமைதிக்கு ஆற்றவேண்டிய முக்கிய பங்களிப்பு தொடர்பில் எடுத்துரைத்தார்.*

*கியூபா நாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கும் முதுபெரும்தந்தை கிரில் அவர்களுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பு பற்றிக் குறிப்பிட்ட பேராயர் Giovanni D'Aniello அவர்கள் கிறிஸ்தவ சபைகள் போரில் ஒருபோதும் ஈடுபடக்கூடாது மாறாக அவை அமைதியை ஏற்படுத்தும் கருவிகளாகச் செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினார்.*



*உலக கிறிஸ்தவ சபைகள் மன்றத்தின் இடைக்காலப் பொதுச்செயலாளர் பேராசிரியர் Ioan Sauca அவர்கள் ரஷ்ய ஆர்த்தடக்ஸ் முதுபெரும்தந்தை கிரில் அவர்களுக்கு அனுப்பியுள்ள மடலில் உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்குமிடையே இடம் பெறும் போரை நிறுத்தும் வகையில் அவ்விரு தரப்புகளுக்குமிடையே அமைதிக்கான உரையாடலை ஊக்குவித்து அதற்கு நடுவராயிருந்து செயற்படுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.*

*உக்ரைனில் இடம்பெற்றுவரும் போருக்கு ஓர் அமைதியான தீர்வு காணப்படுவதற்கு நம்பிக்கையின் அடையாளங்களைக் காண உலகில் அனைவரும் மிகுந்த கவலையோடும், ஆவலோடும் உள்ளனர் என்று அம்மடலில் Sauca அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.*

*கிறிஸ்தவர்கள் சாம்பல் புதனோடு தவக்காலத்தைத் தொடக்கியிருக்கும் இவ்வேளையில் ஆர்த்தடெக்ஸ் கிறிஸ்தவர்கள் நேற்று திங்களன்று தவக்காலத்தை ஆரம்பிப்பதன் அடையாளமாக கடந்த ஞாயிற்றுக்கிழமையை மன்னிப்பு ஞாயிறாகச் சிறப்பித்தனர்.*

*இத்தவக்காலத் திருவழிபாடுகள், மனவருத்தம், அமைதி, மற்றும் ஒப்புரவு ஆகியவற்றுக்கு அழைப்பு விடுக்கும் வேளை இரத்தம் சிந்துதலையும் துன்பங்களையும் கொணரும் போரை நிறுத்துவதற்கு முதுபெரும்தந்தை கிரில் அவர்கள் சம்பந்தப்பட்ட தலைவர்களோடு உரையாடலை மேற்கொள்ளுமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.*

மேரிதெரேசா ...








குருநகர் மீன்பிடி இறங்கு துறைக்கு சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உள்ளூர் இழுவைமடி வலைத் தொழிலாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற தொழில் உபகரணங்களை பார்வையிட்டார். கடந்த வாரம் கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்த இழுவைமடி வலைத் தொழிலாளர்கள், தமது தொழில் முறையினால் கடல் வளத்திற்கு பாதிப்பு ஏற்படாது என்று தெரிவித்ததுடன், தமக்கு நிரந்தர தொழில் அனுமதிகளை வழங்குமாறும் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

# ஐஸ் போதை பொருளுடன் ஒருவர் கைது

**மன்னார் குறூப் நிருபர்**

ஐஸ் போதைப்பொருளுடன் மன்னார் தாராபுரம் பிரதான வீதியில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (6) மதியம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மன்னார் இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையுடன் சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர். மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஒரு கிலோ ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





மூளாய் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய பங்குனி உத்தர பக்ஷ வருடாந்த மகோற்சவம் நாளை மறுநாள் புதன்கிழமை 9ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருவதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.



பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்க நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (06) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு ரெறொன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பினால் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கனடா ரெறொன்ரோவின் மனித நேயக் குரலின் தலைவர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் பா.பாலகணேசன், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் மு.கனகலிங்கம், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் உறுப்பினர்கள் உட்பட பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.
(படம் : மன்னார் குறூப் நிருபர்)

# கல்வியங்காடு மட்பாண்ட உற்பத்தி கிராமத்தை மேம்படுத்த நடவடிக்கை





நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்வியங்காடு மட்பாண்ட கிராமத்தினை உள்வாங்கும் நிகழ்ச்சித்திட்டம் நேற்று இடம்பெற்றது.

பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், தளபாடங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு அமைச்சின் வழிகாட்டலில், தேசிய அருங்கலைகள் பேரவையின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படும் பாரம்பரிய மற்றும் கிராமிய கைத்தொழில் கிராமங்கள் அபிவிருத்தி இணைந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கல்வியங்காடு மட்பாண்ட கிராமத்தினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பயனாளிகளுக்கான உதவித்திட்டங்களை வழங்கி வைத்தார்.

தொடர்ந்து, மட்பாண்ட உற்பத்தி நிலையமொன்றுக்கு விஜயம் செய்த அவர், உற்பத்தி பணிகளை பார்வையிட்டதுடன், உற்பத்தியாளர்கள் எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பில் கேட்டறிந்தார்.

இதன்போது தமக்கு தேவையான மண்ணை கண்டாவளையிலிருந்து பெறுவதிலுள்ள சிக்கல்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள் எடுத்துரைத்தனர். இது தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலாளருடன் தொலைபேசியில் உரையாடிய அங்கஜன் இராமநாதன் இப்பிரச்சனையை நல்லூர் பிரதேச செயலகத்துடன் இணைந்து தீர்ப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்யுமாறு அறிவுறுத்தினார்.

# மன்னாரில் புதிதாக ஏழு பேருக்கு கொரோனா

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் (06.03.2022) 7 பேர் புதிதாக கொரோனா தொற்றாளர்களாக இனம்காணப்பட்டுள்ளனர்.

இம்மாதம் (மார்ச்) மன்னாரில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.வினோதனின் நாளாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.வினோதனின் நாளாந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (06) 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நானாட்டான் மற்றும் சிலாவத்துறை வைத்தியசாலைகளில் தலா 2 பேரும் மன்னார் பொது வைத்தியசாலை தலைமன்னார் மற்றும் பேசாலை ஆகிய வைத்தியசாலைகளில் 5 பேரும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இதுவரை மன்னார் மாவட்டத்தில் மார்ச் மாதம் 35 பேரும் இந்த வருடம் (2022) இதுவரைக்கும் 797 பேரும் மொத்தமாக 3979 தொற்றாளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை

# புதிய நடைமுறையால் நோயாளர்கள் அசௌகரியம்

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தற்போது அமுல்படுத்தப்பட்டிருக்கும் புதிய நடைமுறையால் நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

அதாவது வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் காரணமாக நிர்வாகம் வைத்தியசாலை வெளிவாயில் கதவுகளை மூடி வைத்திருப்பதாகவும், நோயாளர்களை ஏற்றி வரும் முச்சக்கரவண்டி உள்ளிட்ட வாகனங்களை வைத்தியசாலை வளாகத்திற்குள் செல்ல அனுமதிப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய நடைமுறை காரணமாக கிளினிக் ,வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட சிகிச்சை நிலையங்களுக்கு வருபவர்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தீவிர நோய் நிலைமையுடன் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்படும் நோயாளர்கள் இந்த புதிய நடைமுறையால் சிகிச்சை பெற முன்னராகவே உயிரிழக்கக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றது.அத்துடன் நோயாளர்களை அழைத்து வரும் வாகனங்களை உள்ளே செல்ல அனுமதிக்காமையால் அவை ஏ9 வீதி ஓரமாக தரித்து நிற்கின்றன. இதனால் பாரிய விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் பொதுமக்கள் சிலர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் டயாழினி மகேந்திரனிடம் வினவிய போது;

நோயின் தன்மையை கருத்திற்கொண்டு நோயாளர்களுடன் வரும் வாகனங்களை உள்ளே அனுமதிக்குமாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தெரிவித்துள்ளோம்.

கிளினிக் வருபவர்கள் வைத்தியசாலையின் டச் வீதியில் உள்ள வாயில் வழியாக வந்து சேவையை பெற முடியும். அத்துடன் கிளினிக் வரும் கர்ப்பிணிப் பெண்கள் நேரடியாக கிளினிக் நடைபெறும் இடத்திற்கு முச்சக்கரவண்டியில் வந்து இறங்க வேண்டிய தேவை இல்லை. கர்ப்பிணி என்பது நோயல்ல. அவர்கள் அதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வைத்தியசாலையில் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவின் பணிகள் துரித கதியில் இடம் பெறுகின்றன. எதிர்காலத்தில் குறித்த தீவிர சிகிச்சைப் பிரிவு இயங்க ஆரம்பிக்கும் பட்சத்தில் சகல வாகனங்களையும் வைத்தியசாலை வளாகத்திற்குள் அனுமதிப்பதால் பல இடையூறுகள் ஏற்படும். ஏனைய வைத்திய சாலைகளிலும் இதே நடைமுறைகள் தான் கடைப்பிடிக்கப்படுகின்றது. என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக எஸ்.குணபாலன் நியமனம்



முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக (காணி) எஸ்.குணபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய எஸ்.குணபாலன் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக (காணி) தனது கடமைகளை கடந்த வியாழக்கிழமை(03) உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

# விளைச்சல் குறைந்த விவசாயிகள் பதிவுசெய்யவும்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

தனங்கிளப்பு கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாய நிலங்களில் 2021-2022 காலப்பகுதியில் காலபோகச் செய்கையில் ஈடுபட்டு விளைச்சல் குறைந்த விவசாயிகளுக்கான பதிவுகள் எதிர்வரும் 09 மற்றும் 10ஆம் திகதிகளில் கைதடி கமநல சேவை நிலையத்தில் இடம்பெறவுள்ளது. எனவே அப்பகுதிகளில் விளைச்சல் குறைந்த விவசாயிகள் ஏக்கர் வரி செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை சகிதம் வந்து காலை 9மணி தொடக்கம் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென தனங்கிளப்பு கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர்.




மருந்து விலைகளை குறைத்து

# சாதாரண விலையில் விற்பனை செய்ய மருந்து நிறுவனங்களிடம் கோரிக்கை

சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(அக்குறணை குறூப் நிருபர்)

மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களிடம் அவற்றின் விலைகளை குறைத்து சாதாரண விலையில் பொதுமக்களுக்கு வழங்கும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய றம்புக்வெல்ல தெரிவித்தார். (7)

கண்டி, குண்டசாலையில் இடம் பெற்ற வைபவம் ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 60 சதவீத்திற்கும் மேற்பட்ட மருந்துப் பொருட்களை எட்டு நிறுவகங்களே பிரதானமாக இறக்குமதி செய்கின்றன. அவர்கள் அதிகளவு இலாப மீட்டுகின்றனர். அவர்களிடம் மக்களுக்கு குறைந்த விலையில் மருந்துப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கும் படி நான் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.



நாடு மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கும் போது மேற்படி நிறுவனங்கள் அதிகளவு இலாபம் உழைப்பது நியாயமாகாது.

அதே நேரம் சில தொழிற்சங்க தலைவர்கள் நாட்டுமக்களை சிரமத்திற்கு ஆளாக்கி தமது கோரிக்கைகளை வென்றெடுக்க முற்படுகின்றனர். அவர்களது கோரிக்கைகளில் நியாயமானதும் உண்டு. சில நியாயமற்றதாகவும் உள்ளன. ஏனெனில் இன்று நாடு இக்கட்டான நிலையில் இருக்கும் போது சிலவற்றை நிறைவேற்ற முடியாதுள்ளது.

மேலும் நாட்டு மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சில தொழிற்சங்க தலைவர்கள் மிக உயர்ந்த அரசு ஊதியத்தையும் பெற்றுக்கொண்டு, மக்களை சிரமத்திற்கும் ஆளாக்கினால் அவர்களது சம்பள விபரம் உட்பட பல இரகசியங்களை வெளிப்படுத்துவேன்.

அப்போது எது நியாயம் எது அநியாயம் என பொதுமக்கள் தெரிந்து கொள்வர்.

கடந்த கொவிட் காலத்தில் சுகாதாரத்துறையினரின் அளப்பரிய சேவையை நாம் குறைத்து மதிப்பிட வில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



வெரலப்பத்தன தோட்டப் பாடசாலை கட்டிடம் சேதமடைந்திருந்த நிலையில், மறுசீரமைக்கப்பட்ட கட்டிடத்தை இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார். செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டும்

மகளிர் தின வாழ்த்து செய்தியில் செந்தில் தொண்டமான்



அனைத்துத் துறைகளிலும் பெண்களின் இருப்பு அதிகரிக்கப்பட வேண்டும். பன்முக திறமைகள் கொண்ட பெண்கள் இந்த சமுதாயத்தில் உருவாக்கிய மாற்றங்கள் அதிகம். பெண்களுக்கான சம உரிமை மற்றும் பொருளாதார சுதந்திரமே ஒரு சமூகத்தின் வெற்றியாக பார்க்கப்படுகிறது என தெரிவித்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான், அனைத்து துறைகளிலும் வெற்றி நடைபோடும் அனைத்து மகளிருக்கும் தன்னுடைய இனிய மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

தனது மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

பெண் என்பவர் இந்த தேசத்தைக் கட்டியமைக்கும் வலிமை கொண்டவள். ஒரு குடும்பத்தை முன்னேற்றவும் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும் பெண்களின் பங்கு என்பது அளப்பறியது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடப்பிடுமிடத்து, பெண்களுக்கான வாய்ப்புகள் அதிகளவில் வழங்கப்படும் இடத்தில் இலங்கை காணப்படுகிறது. அதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டு உலகின் முதல் பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டமையாகும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இந் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியப் பங்குதாரர்களாக பெருந்தோட்டப் பெண்கள் உள்ளனர் என்பதை எவரும் மறுக்க முடியாது. பெண்கள் நினைத்தால் இந்த சமூகத்தில் எத்தகைய மாற்றத்தையும் கொண்டுவர முடியும். அத்தகைய மாற்றத்தின் தொடக்கமாக நம்முடைய இல்லங்கள் அமையட்டும். பெண்களை மதித்து கொண்டாடுவதுடன் அவர்களின் கரங்களை வலுப்படுத்துவதையும் நாம் அனைவரும் நம்முடைய வீடுகளிலிருந்து தொடங்குவோம் என தனது வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## தொழிலாளர்களுக்கு மாற்றிடம் வழங்க அசமந்தம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்ட தோட்டப் பகுதிகளில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மாற்றிடங்களை வழங்க பிரதேசசெயலகம் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து தகவல்கள் கேட்கப்படும் போது உரிய தகவல்களை வழங்குதல் மற்றும் மாற்று நிலங்களை வழங்க தோட்ட அதிகாரிகள் முன்வராமையால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பான காணிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடி நிலவுவதாகவும் காணிப் பற்றாக்குறையே இந்நிலைமைகளுக்கு காரணம் எனவும் இரத்தினபுரி மாவட்ட பிரதேச செயலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கண்டியில் காணிப்பிரச்சினைகளை தீர்க்க விசேட மத்தியஸ்த சபை

அக்குறணை குறூப் நிருபர்



கண்டி மாவட்டத்தில் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக ஏற்படும் பிணக்குகளுக்காக மாத்திரம் விசேட மத்தியஸ்த சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான நியமனக்கடிதங்கள் கண்டியில் வைத்து நேற்று முன்தினம் (6) கையளிக்கப்பட்டன.

யுத்த முடிவின் பின் வடபகுதியில் ஏற்பட்ட காணிப்பிணக்குகள் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட மத்தியஸ்த சபையின் மாதிரியை ஒத்த சபையை கண்டி மாவட்டத்திலும் மத்தியஸ்த சபை ஆணைக்குழு அமைத்துள்ளது.

இதில் 46 பேர் அங்கம் வகிக்கின்றனர். காணி பிணக்குகள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள முதலாவது பிரதேச மத்தியஸ்த சபையாக இது உள்ளதாக அதன் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி ஹெக்டர் எஸ் யாப்பா தெரிவித்தார்.

நாட்டில் குற்றவியல் வழக்குகள் அதிகரித்து. காணி வழக்குகளுக்கு அதிக காலம் எடுப்பதால் அதனை விரைவுபடுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் முறைப்பாடு கிடைத்து 30 நாட்களுக்குள் குற்றவியல் வழக்குகளையும் 60 நாட்களுக்குள் சிவில் வழக்குகளையும் விசாரித்து முடிக்க இச்சபை கடமைப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# சிறிய நடுத்தரளவு வர்த்தகங்களின் வளர்ச்சிக்கு உதவும் SLT-MOBITEL

SLTMOBITEL, தொடர்ச்சியாக மாற்றமடைந்து வரும் வியாபாரச் சூழலில் சிறியநடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களின் வினைத்திறன் மற்றும் வியாபார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அவற்றுக்கு ஆதரவளித்து வலுவூட்டும் விசேட ஊக்குவிப்புத் திட்டமொன்றை அறிமுகம்செய்துள்ளது.

SLTMOBITEL இனால் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு பரிபூரண சிக்கல்களில்லாத மற்றும் பாதுகாப்பானவியாபாரத் தீர்வுகள் வழங்கப்படுகின்றன. இவற்றில் Business Voice, Business Internet, Business Applications, Business Solutions, Business TV மற்றும் Business Cloud ஆகியனஅடங்கியுள்ளன. இவ்வாறு வழங்கப்படும் பரந்தளவு தயாரிப்புகள் மற்றும் சேவைகளில்Vobox, Voice Unlimited, Biztunes, SLTM Bizchat, SLTM eSiphala, Business Internet Links, VPN Solutions, Akaza Solutions மற்றும் PABX Solutions போன்றனஅடங்கியுள்ளன. இவற்றினூடாக சிறியநடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான உத்தரவாதம் வழங்கப்படுகின்றது.

பரந்தளவு தீர்வுகள் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களின் குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்திசெய்யும் வகையில் அமைந்திருப்பதுடன், இலகுவாக அணுகக் கூடியவகையிலும் அமைந்துள்ளன.

இந்த ஊக்குவிப்புத் திட்டம் SLTMOBITEL இன் 2022 ஆண்டுக்கானதொனிப்பொருளான NoDream TooBig என்பதற்கமைய காணப்படுவதுடன், சிறியநடுத்தரளவுதொழில்முயற்சியாளர்களின்கனவுகளை நனவாக்கிடும் வகையில், இணைக்கப்பட்டசாதனங்கள்மற்றும் தீர்வுகளைவழங்குவதாகவும் அமைந்துள்ளது.




மேலும் சிறியநடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் வகையில், SLTMOBITEL இனால் பரந்தளவு விசேட பக்கேஜ்களுக்கு வெகுமதிகள் சேர்க்கப்பட்டிருந்தது.




## CIMA உடன் Gold Corporate Partner கூட்டாண்மையைத் தொடரும் DFCC வங்கி



DFCC வங்கி இலங்கை முகாமைத்துவ பட்டயக் கணக்காளர்கள் கற்கை நிலையத்துடன் (CIMA) அதன் "Corporate Partnership Programme" நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீண்டும் ஒருமுறை கைகோர்த்துள்ளது. நாட்டிலுள்ள முதன்மையான வணிக வங்கிகளில் ஒன்றாக, DFCC வங்கி தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக இந்த கூட்டாண்மையை அறிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைவதுடன், கணக்கியல் தொழில் தற்போதைய மற்றும் சமகால வணிகத் தேவைகளுக்குப் பொருத்தமானதாக இருப்பதை உறுதி செய்ய உதவுகிறது.

CIMA Corporate Partnership Programme நிகழ்ச்சித்திட்டம் என்பது CIMA மற்றும் வணிகத்துறை தலைவர்களுக்கு இடையேயான கூட்டாண்மைகளின் மதிப்புமிக்க வணிக வலையமைப்பாகும். மேன்மையை நிலைநாட்டும் ஆர்வமும், உலகளவில் போட்டித்திறனைத் தோற்றுவிக்கும் வகையில் மாற்றத்திற்கு வித்திடுகின்ற தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைந்த சிந்தனையாளர்களை உருவாக்குவதில் பங்களிக்கும் ஆர்வம் கொண்ட வணிகத் தலைவர்களின் வலையமைப்பாக இது காணப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம், DFCC வங்கியானது, CIMA கற்கைத் துறை திறமையாளர்களுடன் ஈடுபடவும், ஆட்சேர்ப்பு செய்யவும், எதிர்காலத் தலைவர்கள் மற்றும் ஒத்த எண்ணம் கொண்ட நிர்வாக அதிகாரிகளுடன் தொடர்புகளைப் பேணும் வலையமைப்பை ஏற்படுத்தி, கணக்கியல் தொழிலில் புத்தாக்கத்தை ஆதரிப்பதோடு, எதிர்காலத்திற்கான அறிவு மற்றும் நுண்ணறிவுகளை காத்திரமான உரையாடல் மூலம் தமக்கிடையில் பகிர்ந்து கொள்ள முடியும்.



இலங்கையின் FMCG துறையில்முன்னணியில் உள்ள Hemas Consumer Brands, தனது தலையீடுகளை மேற்கொண்டு கொவிட்19 இனால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.அண்மையில் திஸ்ஸமஹாராம மற்றும் சூரியவெவ பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட 200 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.



2022 ஆம் ஆண்டிற்கான சிங்கர் டெல் கூட்டாளர் பாராட்டு விருதுகள், 2021 இல் சிங்கரின் டெல் தயாரிப்புக்களை மறுவிற்பனை செய்த அதிசிறந்த ஈடுபாட்டைக் கொண்டவர்களை அங்கீகரிப்பதில் கவனம் செலுத்தியது. இந்த விருதுகள் Blue Ribbon Club என்ற கருப்பொருளுடன் சிறப்பான அங்கீகாரத்தை மேலும் வலுப்படுத்துகிறது. டெல் தயாரிப்புகளுக்கான சிங்கரின் சிறந்த 10 மறுவிற்பனையாளர்களில் ஒருவராக இருப்பதே இந்த விருதை வெல்வதற்கான அளவுகோலாகும்.



சியபத பினான்ஸ் சுகாதாரத் துறைக்கு ஆதரவளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதோடு நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளுக்கு அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது. சியபத பினான்ஸ்,சுகாதார பராமரிப்பு நிறுவனங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் அவசரத் தேவைகளில் சிலவற்றை அடையாளம் காண முடிந்ததுடன் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ICUபடுக்கைகள் மற்றும் பிற அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை வழங்குவதன் மூலம் அதன் ஆதரவை நல்கி வருவதோடு பல பகுதிகளில் உள்ள மொத்தம் பதினொரு மருத்துவமனைகளுக்கு 10 ICUபடுக்கைகள்,பெட் பல்ஸ் ஆக்சிமீட்டர்கள் மற்றும் கருவி டிரோலிகளை நிறுவனம் தாராளமாக விநியோகித்துள்ளது

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வை.டப்ளியூ.எம்.ஏ அனுசரணையில் பெண்களை வலுவூட்டும் செயற்பாடுகள்...

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அகில. இலங்கை வை. எம். எம்.ஏ. பேரவையின் சகோதர அமைப்பான வை. டப்ளியூ. எம். ஏ இன் அனுசரணையுடன் நுவரெலியா வை. எம். எம். ஏ. இன் ஏற்பாட்டில் நுவரெலியா வஜிரபுர பிரதேசத்தில் இலவச மூக்குக் கண்ணாடி வழங்குதல் புலுஎல சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. இதில் 500 பேருக்கும் மேல் கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 350 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நுவரெலியா ஹாவாஎலிய பள்ளிவாசலின் மேல் மாடியில் தையல்கலை சுயதொழில் பயிற்சி நிலைய மாணவிகளின் தையல் கலைக் கைப்பணிக் கண்காட்சியைத் திறந்து வைத்தல், நுரெலியா மாவட்ட வைத்தியசாலையின் ஜனாஸா குளிப்பாட்டும் அறைக்கு மின் இயந்திர உபகரணம் கையளித்தல், பொரகஸ் பள்ளிவாசல் ஒன்றுக்கு ஜனாஸா தூக்கும் சந்துக்கு கையளித்தல் மற்றும் கணவனை இழந்த வறிய விதைைத் தாய்மார்களுக்கான சுயதொழில் வேலைவாய்ப்புக்காக சமையல் பாத்திர இயந்திர உபகரணங்கள் வழங்கி வைத்தல் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



இந்நிகழ்வுகளில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி கலந்து கொண்டு சிறப்பித்தார். அத்துடன் வை. டப்ளியூ. எம். ஏ இன் தலைவி பவாசா தாஹா தலைமையில் கொழும்பில் இருந்து வருகை தந்த வை. டப்ளியூ. எம். ஏ இன் குழுமத்திலுள்ள சகோதரிகளும் கலந்து கொண்டனர்.

இக்குழுமத்திலுள்ள சகல சகோதரிகளும் மகளிர் தின நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்தனர். அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவரும் மலேசியா இலங்கை வர்த்தக நட்புறவு ஒன்றியத்தின் தலைவர் காலீத் பாரூக் மற்றும் நுவரெலியா வை. எம். எம். ஏ. பேரவையின் மாவட்டப் பணிப்பாளர் ரஹீம்,பள்ளிவாசல் தலைவர் நுவரெலியா மாவட்ட வை. எம். எம். ஏ. கிளையின் தலைவர்கள் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்

**இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம் ரிஸ்மி உரையாற்றும் போது,..**

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் அளவில் வலுசேர்ப்பவர்களாக பெண்கள் திகழ்கின்றார்கள். இன்று இலங்கைக்கு அதிகளவு அன்னிய செலவாணியை ஈட்டித் தரும் இரு வர்த்துகத் துறைகளில் பெண்களின் பங்களிப்பு மிக அளப்பரிவை. அவைகளில் ஒன்று ஆடைத் தொழில் வர்த்தகமாக இருந்தாலும் சரி மற்றையது தேயிலைத் தொழில் வர்த்தகமாக இருந்தாலும் சரி முன்னணியில் வகிப்பது இந்த இரு வர்த்தக துறைகளுமாகும். இதற்காகவே பெண்களின் பலமும் சக்தியும் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

அது மட்டுமல்ல வீடுகளில் சிறு வணிகத் துறையில் வர்த்தக உற்பத்திகளைத் தொடங்கி வெற்றிகரமான முறையில் செயற்படுவோர்களாக பெண்கள் உள்ளனர். இதன் மூலம் குடும்பம் பொருளாதார நெருக்கடியை ஈடு செய்வதற்கு பெரும் பங்காளிகளாவும் மற்றும் உண்மையான வெற்றிக்கு பெண்கள் நல்ல மன ஆரோக்கியமிக்கவர்களாகவும் விளங்குகின்றார்கள்.

சர்வதேச மகளிர் தினம் என்பது பெண்களின் சமூக பொருளாதார கலாசார மற்றும் அரசியல் சாதனைகளைக் கொண்டாடும் உலகளாவிய தினமாகும். பெண்களின் சமத்துவத்தை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைக்கான அழைப்பாக இந்நாள் குறித்து நிற்கிறது.

அகில இலங்கை வை. டப்ளியூ எம். ஏ. அமைப்பினர் இந்நிகழ்வை கௌரவப்படுத்தும் வகையில் கொழும்பில் இருந்து மிகவும் சிரமத்திற்கு மத்தியில் நுவரெலியாவுக்கு வருகை தந்துள்ளார்கள். இவ்வமைப்பின் வரவானது ஒரு இக்கட்டான கால கட்டத்தில் வறிய மக்களது சில தேவையை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது என்று குறிப்பிட முடியும்.

வை. டப்ளியூ எம். ஏ. அமைப்பின் தலைவி பவாசா தாஹா தலைமையில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களது நலனையும் சமூக நலனைக் கருத்திற் கொண்டு தமது முதிர்ந்த காலத்திலும் தமது பிள்ளைகள் தாய்மார்கள் சகோதரர்கள் எல்லோரும் ஒரு குழுமமாக வந்து மனிதாபிமான காருண்ய உதவிகளில் ஈடுபடுவதைப் பார்க்கின்ற போது மனதிற்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

மூக்குக் கண்ணாடியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தமிழ், சிங்கள, கிறிஸ்தவ முஸ்லிம்கள் என அதிகமான மக்கள் வருகை தந்துள்ளார்கள். இந்த நான்கு சமூகத்தினர்கள் வருகை தந்திருப்பது மனதிற்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது.இதனை நாங்கள் பெரு வெற்றியாக கருதுகின்றோம். அந்த வகையில் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் கொடுத்து வைத்தவர்கள். அதேவேளையில் இப்பிரசேத்தை தெரிவு செய்து இவ்வுதவியை செய்ய முன்வந்த எங்களது வை. டப்ளியூ. எம். ஏ. அமைப்பின் தலைவி பவசா தஹா மற்றும் அக்குழுமத்தினரோடு வருகை தந்த சசோதரிகள் மற்றும் முன்னாள் வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் காலீத் பாருக் மற்றும் இந்த ஏற்பாடுகளை மேற்கொண்ட நுவரெலியா வை. எம். எம். ஏ. கிளையினர்களுக்கு விசேடமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

## நுவரெலியா மாவட்டத்தில் பெண்களுக்கு உதவிக்கரம்...







நுவரெலியா வஜிரபுரவில் இடம்பெறும் கண் பரிசோதனை முகாமில் பல்லின மக்கள் மிக நீண்ட வரிசையில் ஆர்வத்தோடு காத்திருந்து கண்பரிசோதனைகளை மேற்கொண்டு உடன் இலவச மூக்குக் கண்ணாடிகளை பெற்றுக் கொண்டமையும் ஒரு முக்கிய அம்சமாகும்.

இன்றைய கால கட்டத்தில் ஏனைய மாவட்டங்களை தெரிவு செய்து நிவாரண உதவிகள் வழங்குவதை விட நுவரெலியா மாவட்டத்திற்கு உதவி வழங்குவது உயர்ந்தது. இம்முறை வை. டப்ளியூ. எம். ஏ. அமைப்பு நுவரெலியா மாவட்டத்தை தெரிவு செய்து இப்பிரதேசத்திலுள்ள மக்களின் நலன்கருதி செயற்பட முனைந்தது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும்.

சுயதொழில் வாய்ப்புக்காக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு சமையல் உபரகணங்கள் வழங்குதல் என்பது பாராட்டப்பட வேண்டியது

வை. டப்ளியூ. எம். ஏ. அமைப்பால் வழங்கி வைக்கும் உபகரணங்களின் மூலம் உங்கள் வாழ்க்கையில் சிறந்த முன்னேற்றத்தைக் கண்டு கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடுதான் பகிர்ந்தளிக்கின்றார்கள். இதற்கு பங்களிப்புச் செய்த நுவரெலிய வை. எம். எம். ஏவுக்கு நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

எங்களது சகோதர அமைப்பான வை. டப்ளியூ. எம். ஏ இன் தலைவிக்குப் பலமாக வை. எம். எம். ஏ. அங்கத்தவர்கள் செயலாற்றுகின்றனர். இதுதான் அவ்வமைப்பின் பலம். அதேநேரத்தில் அவருடைய தலைமை, ஆளுமை தான் அடுத்த பலம்.

இன்று பெண்கள் ஆண்களை விட சனத்தொகையில் அதிகரித்துள்ளார்கள். இலங்கையிலும் 52 விகிதம் பெண்களாவர்.ஆண்கள் 48 விகிதம் உள்ளனர்.

சமகாலத்தில் சுமார் 2 தசாப்த காலங்களாக இலங்கையில் மட்டுமல்ல இந்த உலகத்திலும் எல்லாப் பதவிகளிலும் பெண்கள் இருக்கின்றார்கள்.ஒரு தவறான கருத்துப் பரப்பப்பட்டு இருக்கிறது. இஸ்லாத்தில் பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டு இருப்பதாக.

இஸ்லாம் தான் பெண்களுக்கு உரிமையையும் சுதந்திரத்தையும் வழங்கிய ஒரு மார்க்கம். ஆகவே பெண்களுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைக்கவும் அவர்களுக்கு ஆடையாக இருந்து பாதுகாக்கவும் முழுப் பொறுப்பும் ஆண்களுக்கு இருக்கிறது. குறிப்பாக உலமாக்களாக இருக்கலாம்,மார்க்கத் தலைவர்களாக இருக்கலாம். ஒட்டுமொத்த ஆண்களும் பெண்களை மதித்து என்னுடைய தாய் என்னுடைய மனைவி. என்னுடைய மகள், இந்த உலகில் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் மிகப் பொறுப்பாக இருப்பவர் தாய்தான்.



இவர்களோடு சேர்ந்து இவர்களின் சுக துக்கங்களில் எல்லா வகையிலும் பங்களிப்புச் செய்ய கடமைப்பட்டுள்ளோம். அந்த வகையில் வை. டப்ளியூ. எம். ஏ. தன்னுடைய சக சகோதரிகளுக்கு அவர்களின் கஷ்டத்தை உணர்ந்து குறிப்பாக விதவைகளுக்கு அவர்களின் வாழ்க்கையை வலுவூட்டுவதற்காக இவ்வாறான உதவிகளைச் செய்து வருகின்றார்கள். இவை எங்களுக்கு பெரும் பலமாகும்.

பொதுவாக நாடளாவிய ரீதியில் நான் பல இடங்களுக்குச் சென்றிருக்கின்றேன். அங்கு ஒரு அமைப்பின் ஊடாக உணவுக்காக ஏதாவது ஒரு தொகை உலருணப் பொதிகள் வழங்குவார்கள். அன்றாட செலவுகளுக்கு ஏதாவது உதவிகள் செய்வார்கள். அவர்கள் மீனைக் கொடுக்கின்றார்கள். ஆனால் அவர்கள் மீனைப் பிடிப்பதற்கு வளையைக் கொடுக்கவில்லை. இவர்களுக்கு தொழிலை ஆரம்பிப்பதற்கான அதே செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றன. இந்த உலகத்திற்கு நாங்கள் அனைவரும் அனுப்பப்பட்டோம்.ஏதோ உதவி செய்து வாழ்ந்து விட்டுச் செல்வதற்காக அல்ல ஸகாத் என்னும் ஏழை வரி ஏன் கட்டாயப்படுத்தியுள்ளது. அடுத்தவரின் கஷ்டத்திற்கு எங்களுடைய ஏழை வரி அவசியமாகும்.

எமது வருமானத்தில் இரண்டரை விகிதம் கட்டாயம் வழங்க வேண்டும். அதே போல ஒன்றுதான் எங்களிடம் இருக்க வேண்டிய சகல வளங்களுக்கு ஸகாத் கடமையாக்கப்பட்டுள்ளது. கல்வியாக இருக்கலாம். பல்வேறுபட்ட தொழில் நுட்ப அறிவாக இருக்கலாம். எங்களுக்கு இருக்கக் கூடிய சகல வளங்களையும் நாங்கள் பகிர்ந்து கொடுக்க கடமைப்பட்டிருக்கின்றோம்.

அந்த வகையிலேதான் எங்களது சகோதர அமைப்பான வை. டப்ளியூ. எம். ஏ. சகோதரிகளிடம் இருக்கக் கூடிய வளங்களைப் பகிர்ந்து கொள்கின்றார்கள். முழு இலங்கையிலும் சகல துறைகளிலும் இவர்களது செயற்பாடு ஒரு பலமாக அமையும். நாங்கள் சமாந்தரமாக செயற்படுவதற்கு அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் செயற்பாடுகளுக்கு ஒரு தூணாக இருந்து செயற்படுகின்றார்கள். எதிர்காலத்தில் இதை விட மேலாக செயற்படுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். .

எங்கள் அமைப்பு கடந்த தேசிய மாநாட்டில் இரு பெண்களை முதன்மைப்படுத்தி சாதனையாளர்களாக விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளோம். அந்த வகையில் டப்ளியூ எம். ஏ அமைப்பின் தலைவி பவாசா தாஹா மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம் சேவை உதவிப் பணிப்பாளர் ரினோசியா ஆகியோர் பாராட்டி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பின் உழைப்பும் உந்து சக்தியும் தான் இந்த இடத்தில் நாம் கலந்து கொள்ள வழிகோலியது. அந்த வகையில் எதிர்காலத்தில் மென்மேலும் இது போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.









**வை. டப்ளியூ எம். ஏ அமைப்பின் தலைவி பவாசா தாஹா உரையாற்றும் போது,...**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நுவரெலியாவுக்கு வந்தமையானது மலையக மக்களோடு சேர்ந்து கொண்டாடுவதற்காகும்.

இங்கு சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவம் எனப் பல்லின மக்கள் இன, மத வேறுபாடுகளின்றி வருகை தந்துள்ளார்கள். இதைப் பார்க்கும் போது மிக்க சந்தோசமாக இருக்கிறது. சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கண் சத்திர சிகிச்சை முகாம் நடாத்தி இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைப்பதற்காகவே வருகை தந்தோம். இனம், மதம், மொழி வேறுபாடுகள் இன்றி இதனை வழங்கி வருகின்றோம்.

எத்தொழிலுக்கும் இல்லா சிறப்புரிமை சமையல் தொழிலுக்கு இருக்கிறது. சிறுக அளவிலான முதலீட்டில் எளிதில் தொடங்கலாம்.வீசிய விதையை போல் உயர்ந்து வளரும். பெரியளவில் முதல் போட்டு நஷ்டமாகாமல் சுதந்திரமாகச் செய்யும் தொழில். இத்தொழிலை திறன்பட செய்வீர்கள் என்ற நம்பிக்கையில் இந்த உபகரணங்களை உங்களுக்கு வழங்கியிருக்கின்றோம்.

விதவைத் தாய்மார்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக நாங்கள் தாய்மார்கள் சேர்ந்து உன்னத நோக்கத்திற்காக இந்த சமையல் இயந்திரங்களை வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளோம்.

எங்களைப் போன்று நீங்கள் ஒரு சாதனையாளராக மாறி உங்களைப் போல் உள்ள ஏழைகளுக்கு உதவி செய்ய முன் வர வேண்டும்.அத்தோடு இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி பல வேலைகளுக்கு மத்தியிலும் இந்நிகழ்ச்சிகளில் அனைத்திலும் கலந்து கொண்டு பெருமைபடுத்தினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



# கூட்டு ஒப்பந்தம் தொழிலாளர்களுக்கு சாதகமாக அமைவதே அவசியம்

## பதுளை மாவட்ட எம்.பி அரவிந்தகுமார் தெரிவிப்பு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

கூட்டு ஒப்பந்தம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சாதகமாக அமைய வேண்டும். தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கும் வகையில், ஒப்பந்த சரத்துக்கள் அமையாவிட்டால் அவ் ஒப்பந்தத்தில் பயன் கிடையாது என தெரிவித்த பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார், பெருந்தோட்டங்களில் தொழிற்சட்டங்கள் முற்று முழுவதாக மீறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய தான்தோன்றித்தனமான செயல்பாடுகளை, அனுதிக்க முடியாதென்றும் குறிப்பிட்டார்.

பதுளைப்பகுதியின் செல்வக்கந்த பெருந்தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு, மின்சார வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார், அங்கு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிற்கமைய, செல்வக்கந்த பெருந்தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் (04) பாராளுமன்ற உறுப்பினர் வைபவரீதியாக மின்சார வசதியை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,' தற்போது கூட்டு ஒப்பந்தம் பற்றி பரவலாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இக் கூட்டு ஒப்பந்தத்திற்கு நான் எதிரானவனல்ல. ஆனால், அவ் ஒப்பந்தம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சாதகமாக அமைய வேண்டும். தொழிலாளர்களது மேம்பாடுகள், சேம நலன்கள், சம்பள உயர்வுகள், உரிமைகள் என்ற ரீதியில், தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கும் வகையில், ஒப்பந்த சரத்துக்கள் அமையாவிட்டால் அவ் ஒப்பந்தத்தில் பயன் கிடையாது. தொழில் துறையொன்றிற்கு ஒப்பந்தம் ஒன்று இருக்க வேண்டியது அவசியமாகும். அது எவ்வாறானதொரு பெயராகவும் இருக்கலாம். ஆனால், அவ் ஒப்பந்தம் பக்கம் சார்ந்ததாக இருந்துவிடக்கூடாது. தொழிலாளர்களுக்குரிய உரிமைகள் அனைத்தும் பாதுகாக்கப்படல் வேண்டும். இது விடயத்தில், நான் மிகுந்த கவனத்தைச் செழுத்துவேன்.

தொழிலாளர்களுக்குரிய ஆயிரம் ரூபா தினச்சம்பளத்தில், ஏற்றுக்கொள்ள முடியாத மனிதாபமானமற்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இவ் ஆயிரம் ரூபா தினச் சம்பளமும் முழுமையாக தொழிலாளர்களுக்கு கிடைப்பதில்லை. இவ்வகையில், விதிக்கப்படும் நிபந்தனைகள் அனைத்துமே, சட்ட விரோதமானவைகளாகும் என்றார்.

## மீட்டுக்கொள்ளப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை

அடகு முகவர்களான வரையறுக்கப்பட்ட கண்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், கண்டி, கட்டுகஸ்தொட்டை, போவல, பஹிரவகந்த, தங்கொல்ல, மாவில்மட, அருப்பல, வட்டபுளுவ, உடபேராதெனிய, சுதுஹூம்பொள, தித்தவெல மற்றும் நுவரவெல ஆகிய கிராமிய வங்கிக்கிளைகளில் 2020.12.31ஆம் திகதி உட்பட அத்தினம் வரை அடகு வைத்து 2022.03.25 வரை மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகள் 2022.03.26 சனிக்கிழமையன்று மு.ப. 9.00 முதல் கண்டி குமார வீதியின் இலக்கம் 15 என்ற முகவரியிலுள்ள சங்கத்தின் பிரதான அலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்**
**வ/ப கண்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**த.பெ. 30, இலக்கம் 15, குமார வீதி,**
**கண்டி.**
**தொலைபேசி இல: 081-5701315, 2223556, 5620081**
**தொலைநகல் இல: 081-2223556**
**2022.03.04**




## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**119**
**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

NW GB-9723 Mitsubishi rosa, 1995 bus கூடிய விலைக் கேள்விக்கு வெலிபல் ஃபினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொ. பே. 0714 542958. 016760

**128**
**டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு**

டயர் டியூப் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் போக்குவரத்து. போர்க்லிப்ட் உரிமையாளர்களே உங்களுக்குத் தேவையான டயர்கள் ஒரே கூரையின் கீழ் அழையுங்கள் நீங்கள் எதிர்பார்க்காத விலைகளில் கழிவுகள் விலை குறைவு மோட்டர் கிரேடர் நிரப்பப்பட்ட மற்றும் புதிய JCB பெக்கோ டயர் வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட லொறி, டிப்பர், டயர் துருக்கி, சீன, மலேசிய டயர் டியூப். நாம் தருவிப்போம். கூடுதல் விலையை ஏன் செலுத்த வேண்டும். 155, கிரவுன் டயர், கொழும்பு 14. 0773 13 4060, 075-3134 06 0, 0777830000 சுகததாச நீச்சல் தடாக பிரதான கதவு பிரதான பாதை, கல் மற்றும் காற்று டயர் போர்க்லிப்ட் 600 x 9 - 700 x 12, 650 x 10, 28 x 9, 15 - 300 x 15, 250 x 15 016091

### வேலைவாய்ப்பு

**320**
**வெற்றிடங்கள்**
**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொழும்பு 05, ஹெவ்லொக் வீதியில் இல் ஓர் சீன உணவகத்தில் வெற்றிடங்கள். பயிலுநர்/ பயிற்சி பெற்ற வெயிட்டர்கள், கிச்சன் ஹெல்பர், டிஷ் வொஷர்ஸ் மற்றும் வெயிட்டர்/ ரைடர்கள். தொடர்பு 0705323273, 0765718240. 016126

**For classified advertisements and for replies**

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

**Repeat Your ad For Better Offers**

## அற்றோணித் தத்துவத்தை மீளப்பெறல்

இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது 19.10.2012ஆம் திகதியிடப்பட்டு இந்தியா, கேரளா மாநிலம், கசரகோட் மாவட்ட நொத்தாரிசு C. ரவிக்குமரன் நாயர் முன்னிலையில் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிந்தவூர்-12, வன்னியார் வீதி, இல 206 ஐச் சேர்ந்த அப்துல் கபூர் முஹம்மட் சுஹூட் என்பவரின் பெயரில் இந்தியா, கேரளா மாநிலம், கசரகோட் மாவட்டம் த.பெ.பேக்கல் 671318, கொட்டிக்குளம், கே, என் வீட்டில் வசிக்கும் கே.என். முஹம்மட் ஜிப்ரி ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்டு பதிவாளர் நாயகத்தின் மட்டக்களப்பு பதிவாளர் நாயக அலுவலகத்தில் 2013.01.04ஆம் திகதி தொடரிலக்கம் 05இல் 28ஆம் இதழில் 21ஆம் இலக்கப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் 29.01.2022 முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்துச் செய்யப்படுகின்றது. இன்று முதல் மேற்குறித்த அற்றோணித்தத்துவ பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாகமாட்டேன்.

**கே.என். முஹம்மட் ஜிப்ரி**

## அறிவித்தல்

**கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு**

**பட்டதாரி பயிலுனர்களாக பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளை கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை, 3-I(அ) தரத்துக்கு மாவட்ட ரீதியாக ஆட்சேர்ப்பு செய்தல் - 2022**

கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை, 3-I(அ) தரத்துக்கு மாவட்ட ரீதியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சாதாரண நேர்முகப்பரீட்சைக்கு பட்டதாரி பயிலுனர்களாக பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் கீழ் குறிப்பிட்டுள்ள கிழக்கு மாகாண சபையின் இணையத் தளத்தில் மேலதிக தகவல்கள் மற்றும் தகைமைகளை பரீட்சிக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022.03.31ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். முறையாக பூர்த்திசெய்யப்படாது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

www.ep.gov.lk ⟶ Exams & Results Recruitment Exams

**மூ.கோபாலரெத்தினம்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
2022.03.08

## கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல்,
கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள்
மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

NAQDA

**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)**

**விலைமனுக்கோரல்**

**பெறுகை அறிவித்தல்**

**பங்கேற்பாளர்களுக்கான உணவு மற்றும் பானங்கள் வழங்கல் - 2022/2023**

01. இலங்கையின் தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) என்பது நிர் வளம் மற்றும் நீர் உயிரினவளர்ப்பு தொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ வளர்ச்சிக்காக 1998 ஆண்டு இல. 53 ஆம் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

02. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மேஜர்) தேசிய போட்டி ஏல நடைமுறையை பின்பற்றி ஒரு வருட காலத்திற்கு பின்வரும் சேவையை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| பெறுகையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மனுப் பிணை மற்றும் பெறுமதி (SLR) | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி / நேரம் |
|---|---|---|---|---|
| கலாவெவ தேசிய உள்நாட்டு மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனத்தில் : (NIFATI) பங்கேற்பாளர்களுக்கான உணவு மற்றும் பானங்கள் வழங்கல் - 2022/2023 NQ/DPC/2022/NCB/ S/02 | 100,000.00 121 நாட்கள் (2022.07.21) | 3,500.00 | 2022.03.21 பி.ப.3.00 | 2022.03.22 பி.ப.2.00 |
| இரம்படகல தேசிய உள்நாட்டு மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனத்தில் (NIFATI) பங்கேற்பாளர்களுக்கான உணவு மற்றும் பானங்கள் வழங்கல் - 2022/2023 NQ/DPC/2022/NCB/ S/02 | 50,000.00 121 நாட்கள் (2022.07.21) | 2,500.00 | 2022.03.21 பி.ப.3.00 | 2022.03.22 பி.ப.2.00 |

03. கலாவெவ தேசிய உள்நாட்டு மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனத்தில (NIFATI) ஒரே நேரத்தில் 30-100 பங்கேற்பாளர்கள் மற்றும் இரம்படகல்ல அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் பயிற்சி நிலையத்தில் 15-40 அதிக எண்ணிக்கையிலானவர்களுக்கு உணவழிப்பதற்காக சிறந்த அனுபவத்துடன் தகுதிவாய்ந்த மற்றும் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களாக இருக்க வேண்டும்.

04. தொடர்புடைய மனுக்களை **2022.03.21** ஆம் திகதி **பி.ப.3.00** மணி வரை பின்வரும் இடங்களில் இலவசமாகப் பரிசோதிக்கலாம் மற்றும் மேலதிக தகவல்களை கீழே குறிப்பிடப்பட்ட அதிகாரிகளைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெறுகையின் பெயர் | மனு ஆவனங்களை இலவசமாக பரிசீலனை செய்யக்கூடிய மற்றும் மனு ஆவனங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இடம் | மனு ஆவனங்கள் தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்ள கூடிய அதிகாரிகள் பற்றிய விவரம் |
|---|---|---|
| NQ/DPC/2022/NCB/ S/02 கலாவெவ தேசிய உள்நாட்டு மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனத்தில் : (NIFATI) பங்கேற்பாளர்களுக்கான உணவு மற்றும் பானங்கள் வழங்கல் - 2022/2023 | கொள்முதல் அதிகாரி, இலங்கையின் தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்ல. பொறுப்பு அதிகாரி, கலாவெவ தேசிய உள்நாட்டு மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனம் | கொள்முதல் அதிகாரி, தொலைபேசி எண்: 011 2786544 / 011 2786495 பொறுப்பு அதிகாரி, , தொலைபேசி எண்கள்: 025 226 4560 தொலைநகல் : 025 226 4560 |
| NQ/DPC/2022/NCB/ S/02 இரம்படகல தேசிய உள்நாட்டு மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனத்தில் : (NIFATI) பங்கேற்பாளர்களுக்கான உணவு மற்றும் பானங்கள் வழங்கல் - 2022/2023 | கொள்முதல் அதிகாரி, இலங்கையின் தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்ல. பொறுப்பு அதிகாரி, இரம்படகல தேசிய உள்நாட்டு மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு பயிற்சி நிறுவனம் | கொள்முதல் அதிகாரி, தொலைபேசி எண்: 011 2786544 / 011 2786495 பொறுப்பு அதிகாரி, , தொலைபேசி எண்கள்: 037 2252048 தொலைநகல் : 037 2252048 |

05. மேலே இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் கோரிக்கை கடிதத்துடன் மீளச்செலுத்தப்படாத மனுக கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

06. அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க முறையாக பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து மனுக்களும் **2022.03.22** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மேலே இலக்கம் 02 இல் குறிப்பிட்டுள்ள மீளச்செலுத்தப்படாத மனுக் கட்டணத்தை பணமாக செலுத்துவதன் மூலம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுப் காப்புறுதிபிணையுடன் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும்.

தலைவர்,
**திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்)**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.
**2022.03.08**

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இல: 3/2/3/10/274-715
எனது இல : காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/7/2019/ஏச்டபிள்யூ/118

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 03 டிசம்பர் 2021 ஆம் திகதிய 2256/52 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி (111) ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : மேல்
மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : அத்தனகலை

| ஆ.வ.இல. கடத்திரல் வரைபட இல. | துண்டு இல. | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம சேவகர் பிரிவு |
|---|---|---|---|---|
| 510602, (துண்டு இல. 06, தாள் இல. 04) | 21 | 14.0427 | வெதகம | இல. 343ஏ, வெதகம |
| 510605, (துண்டு இல. 01, தாள் இல. 13) | 70 | 1.2018 | நவகமுவ | இல. 343பி, நவகமுவ |
| 510615, (துண்டு இல. 01, தாள் இல. 07) | 106 | 6.1339 | கோங்கஸ்தெனிய | இல. 348, நிட்டம்புவ வடக்கு |

**எஸ்.பீ.குணவர்த்தன,**
**பிரதேச செயலாளர்,**
**அத்தனகலை.**

**பிரதேச செயலகம்,**
**அத்தனகலை.**
**03.03.2022**

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இல: 3/2/3/10/274-715
எனது இல : காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/7/2019/ஏச்டபிள்யூ/118

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 17 நவம்பர் 2021 ஆம் திகதிய 2254/27ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி (111) ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : மேல்
மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : அத்தனகலை

| ஆ.வ.இல. கடத்திரல் வரைபட இல. | துண்டு இல. | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம சேவகர் பிரிவு |
|---|---|---|---|---|
| 510606, (துண்டு இல. 03, தாள் இல. 12) | 114 | 3.1319 | நாபாகொட | இல. 345, நாபாகொட |
| 510607, (துண்டு இல. 02, தாள் இல. 22) | 28 | 1.2483 | நிட்டம்புவ | இல. 348ஏ, நிட்டம்புவ தெற்கு |
| 510607, (துண்டு இல. 01, தாள் இல. 16) | 181 | 9.1278 | நிட்டம்புவ | இல. 348, நிட்டம்புவ வடக்கு |
| 510606, (துண்டு இல. 02, தாள் இல. 10) | 14 | 0.2011 | நாபாகொட | இல. 345, நாபாகொட |

**எஸ்.பீ.குணவர்த்தன,**
**பிரதேச செயலாளர்,**
**அத்தனகலை.**

**பிரதேச செயலகம்,**
**அத்தனகலை.**
**03.03.2022**

**அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு**

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்டவர்களின் தகுதிகளை ஆராயும்:

| இல | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1 | டாக்டர். எஸ்.எச். பிரசாத் மஞ்சுள, இலக்கம். 270/1, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 05 | புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப்பணியகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 2 | திரு ஓஷத சேனாநாயக்க இலக்கம். 11 பி, கடற்கரை வீதி, கல்கிசை | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 3 | திரு. ரோஹான் பெர்னாண்டோ, இலக்கம். 220, லேக் டிரைவ், கொழும்பு - 08 | ஸ்ரீ லங்கா ரெலிகொம் கம்பனியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 4 | திரு. என்.கே.ஏ.ஜி.நாரகல இலக்கம். 23 பி, கட்டுவாவல மாவத்தை எம்பில்லவத்த வீதி, பொரலஸ்கமுவ | அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 5 | திரு. எரங்க பஸ்நாயக்க இலக்கம். 34 6/2, வஜிர வீதி, கொழும்பு-04 | இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 6 | திரு.சஜித் ஆட்டிகல இலக்கம். 23, மடபாத்த, பிலியந்தலை | உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 7 | திரு. எச்.என். பிரேமரத்ன இலக்கம். 55/1/சீ, வட்டவலகாவ அரெல்லவல, கொமில மாவரல | சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 8 | திரு. ரோஷன் முத்தையா இலக்கம் 5 பி, ஐகானிக், 110 பாராளுமன்ற வீதி, இராஜகிரிய | இலங்கை கணினி அவசர தயார் நிலை அணியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 9 | மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா இலக்கம் 71, குவாரி வீதி, மிரிஹான நுகேகொட | வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 10 | டாக்டர். நிஹால் ஜயதிலக இலக்கம். 465/2, வெலிவிட்ட வீதி மகாதெனிய, கடுவெல | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 11 | பேராசிரியர் எம்.ஜே.எஸ். விஜயரத்ன இலக்கம்.305/5, ஹிம்புட்டான, முல்லேரியா | தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி,அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |

மேற்குறிப்பிட்ட பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, "செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே" என்ற விலாசத்திற்கு 2022 மார்ச் மாதம் 21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777300 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk)

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2022 மார்ச் மாதம் 08ஆம் திகதி**


**பகிரங்க ஏலவிற்பனை**

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2022/02/28 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2022/03/30 மற்றும் 2022/03/31 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 444 222


**கொமர்ஷியல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி**
**(கம்பனி பதிவெண் PQ 131/PB/PQ)**
**68, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-04.**

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எல்ஒஎல்சி பினான்ஸ் பிஎல்சி உடன் கொமர்ஷியல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி (சிஎல்சி) இன் ஒன்றிணைப்பு**

2022 பெப்ருவரி 11 ஆம் திகதியிடப்பட்ட பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கையின் திருத்தமானது 2022 பெப்ருவரி 15 ஆம் திகதியன்று பங்குதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2022 மார்ச் 30 ஆம் திகதிக்கு சரிசெய்யப்பட்ட "எஸ்எவ்எல்" பங்குகளின் செயல் தொடர்புகளுக்கான திகதி தொடர்பான மேற்கூறப்பட்டுள்ள சுற்றறிக்கையின் (2) (I) ஆகிய உட்கூறுகள் பின்வருமாறு வாசிக்கப்படல் வேண்டும்.

(I) 2022 மார்ச் 25 ஆம் திகதிக்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ஒன்றிணைப்பு செயற்பாடானது பின்போடப்படாவிடின் எஸ்எவ்எல் இன் பங்கு கொடுக்கல் வாங்கலானது நடைபெற மாட்டாது.

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**கொமர்ஷியல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி**
**எல்ஒஎல்சி கோர்ப்பரேட் சேர்விசஸ் (பீவீடி) எல்டிட**

**கையொப்பமிட்டவர்**
**செயலாளர்கள்**

**2022 மார்ச் 2 ஆம் திகதியன்று.**

# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)

## வெலிமடையில் உள்ள இலங்கை வங்கியின் கிளை மற்றும் முகாமையாளரின் இல்லத்தைத் திருத்துதல்

**கேள்வி இல. BOC/PROP/P/2020/74**

1. இலங்கை வங்கி சார்பாக, இலங்கை வங்கி நிறைவேற்று சேகரிப்புக் குழுவின் தலைவரிடமிருந்து வெலிமடையில் உள்ள இலங்கை வங்கியின் கிளை மற்றும் முகாமையாளரின் இல்லத்தை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் திருத்துவதற்கு தகுதியான நபர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட ஏலவிலைகள் கோரப்படுகின்றன. இதற்கு ரூ.50 மில்லியன் (VAT இன்றி) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

   திருத்த வேலையானது அண்ணளவாக 812 சதுர மீற்றர்ப் பரப்பளவைக் கொண்ட மூன்று மாடிக் கட்டடத்தைத் திருத்துதல், அதற்கான புதிய கூரையை அமைத்தல், MEP சேவைகளை தரமுயர்த்துதல், பாதுகாப்புப் பெட்டகங்களுக்கான பலப்படுத்தப்பட்ட அறையினை அறிமுகப்படுத்தல், கட்டட முகப்பை மாற்றியமைத்தல், முகாமையாளரின் வதிவிடத்தினைத் தரமுயர்த்தல், புறச்சூழலை அழகுபடுத்தி வாகனத்தரிப்பிடத்தைத் தரமுயர்த்தல், போன்றவற்றைக் கொண்டிருக்கும்.

   கட்டுமான வேலைகளானவை வங்கிச் செயற்பாடுகள் நடைபெறும் போது மேற்கொள்ளப்பட வேண்டும். வேலைகள் பகுதி பகுதியாகப் பூரணப்படுத்தப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

   திருத்தவேலைகள் நடைபெறும் இடமானது இலக்கம் 12, 12/A ஹேமபால முனிதாச மாவத்தை, வெலிமடவில் அமைந்துள்ளது.

   இவ்வேலைகளை பூர்த்திசெய்வதற்கான காலம் ஆரம்பத் திகதி தொடக்கம் 270 நாட்கள் ஆகும்.

2. தேசிய போட்டிகர ஏலவிலை நடைமுறைக்கமைய (NCB) ஏலவிலை கூறல்கள் மேற்கொள்ளப்படும்

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்குத் தகைமை பெறுபவர் புறக்கணிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் காணப்படாதிருக்க வேண்டியதுடன் கீழ்க் காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

   - நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (CIDA) கட்டட நிர்மாண வேலைத்துறையில் தரம் C4 அல்லது C5 மட்டத்தில் பதிவுசெய்யப்படிருக்க வேண்டும்.

4. ஒப்பந்தத்தை வழங்க தகைமை பெறுவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைப்பாடுகள்

   - கடந்த ஐந்து வருட காலத்தினுள் குறைந்தது ரூ.100 மில்லியன் சராசரி வருடாந்தப் பணப் புரள்வுடைய நிர்மாண வேலையை நிறைவேற்றியிருத்தல்.
   - பிரதான ஒப்பந்தக்காரராக கடந்த ஐந்து வருட காலத்தினுள் இதனை ஒத்ததும் சிக்கலான அமைப்பை உடையதுமான குறைந்தபட்சம் ரூ.40 மில்லியன் பெறுமதியுடைய மூன்று அல்லது அதற்கும் அதிகமான மாடிகளைக் கொண்ட வணிகக் கட்டடமொன்றை ஒன்பது மாதங்களுக்குள் திருத்தியிருக்க வேண்டும்.
   - திரவநிலை சொத்துக்கள் அல்லது கடன் வசதிகள் (மற்றொரு ஒப்பந்த பொறுப்புகளுக்கு ஒதுக்கிய பின்பு) மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ள உள்ள எவையேனும் முற்பணக் கொடுப்பனவு தவிர்த்து ரூ.16 மில்லியனை விடக் குறைவாகக் காணப்படலாகாது

5. இவ்விலை கூறலில் பங்குகொள்ள ஆர்வமுடையோர் வேலை நாட்களில் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் (தொலைபேசி இல. 011-2544310, 011-2204260 தொலைநகல் 011-2449629 மின்னஞ்சல் முகவரி : procurement@boc.lk) மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு 0900 மணி முதல் 1430 மணிவரை விலைகூறல் ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.

6. விலைகூறல்களை தெரிவிக்க ஆர்வமுடையோர் ஆங்கில மொழியிலான விலைகூறல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூ.16,200.00 (VAT உடன்) (ரூ.15,000.00 + ரூ.1,200.00 VAT) மாத்திரம் 2022.03.08 தொடக்கம் 2022.04.05 வரை எவையேனும் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1430 மணிவரை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை பணமாகும்.

7. நகலுடனான முத்திரையிட்ட விலைகூறல்களை 2022.04.06 திகதி 1000 மணிக்கு அல்லது அதற்கு முன் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்" எனும் முகவரியில் உள்ள இலங்கை வங்கியின் தரைத் தளத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இட வேண்டும் தாமதித்து கிடைக்கும் விலைகூறல்கள் திறக்காது நிராகரிக்கப்படும். விலை கூறல்கள் முடிவடைந்ததும் விலைகூறல்களை விலைகூறுவோர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் குறிப்பிடப்பட்ட இடத்தின் மூன்றாவது தளத்தில் விலைகூறல்கள் திறக்கப்படும்.

8. ஏலவிலை கூறல்கள் 2022.07.05 வரை செல்லுபடியாகும்.

9. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களானவை 09ஆம் பகுதியில் உள்ள (விலைகூறல்) நியமப் படிவங்களில் காணப்படும் பிணைமுறிப் படிவத்தைப் பயன்படுத்தி இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் வேறொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து மாத்திரம் வங்கி உத்தரவாதத்தின் வடிவில் பெற்ற ரூ.500,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) பெறுமதியானதும் 2022.08.02 ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான (மாற்றமுடியாத, நிபந்தனையற்ற, தேவையின்போதான) விலைகூறல் பிணை முறியுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விலைகூறல் பிணைமுறிக்குப் பதிலாக அதே தொகைக்கான பணவைப்பு ரசீது / வங்கிக் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்.

10. 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பொது ஒப்பந்தச் சட்டத்தில் அல்லது அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விலைகூறலுடன் PCA3 படிவத்தையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

11. முன்கூட்டிய ஏல விலை கூறல் கூட்டம் 2022.03.22 திகதி 1100 மணிக்கு திருத்தவேலைகள் நடைபெறும் கிளையில் இடம்பெறும்.

தலைவர்
நிறைவேற்று சேகரிப்புக் குழு,
இலங்கை வங்கி,
இல 01, "BOC சதுக்கம்",
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

www.boc.lk

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

கொவிட் விடுமுறை காலத்தில்

# இலவசமாக கல்வி போதித்த ஆசிரியர்களுக்கு பாராட்டு

## மாத்தளை கல்வி அபிவிருத்தி போரம் ஏற்பாடு



*மாத்தளை சுழற்சி நிருபர்*

மாத்தளை கல்வி அபிவிருத்தி போரத்தின் ஏற்பாட்டில் 2020 க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு விடுமுறை காலத்தில் இலவசமாக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்ட ஆசிரியர் மற்றும் அதிபர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மாத்தளை ஆமினா தேசியக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (6) இடம்பெற்றது.

கற்றல் செயற்பாடுகளில் இம்மாவட்டத்தில் ஈடுபட்ட 12 பாடசாலைகளைச் சேர்ந்த 47 ஆசிரியர்கள் அதிபர்கள் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் பொதுச் செயலாளர் அர்கம் நூறாமித் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மாத்தளை வலயக்கல்விப் பணிப்பாளர் ஜே.எம். இக்பால், மத்திய மாகாண முஸ்லிம் பாடசாலைகளுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.எம் உனைஸ் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# மாவனல்ல பிரதேச சபை தலைவராக லசந்த ஸ்டீவன் சத்தியபிரமாணம்



*காவத்தை தினகரன் விசேட நிருபர்*

மாவனல்லபிரதேசசபையின்புதியதலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஆர்.பி.எம்.லசந்த ஸ்டீவன் கடந்த வெள்ளிக்கிழமை(4) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ முன்னிலையில் மாகாண சபை கட்டிடத்தொகுதியில் வைத்து சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மாவனல்ல பிரதேச சபையின் தலைவர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதையடுத்து புதிய தலைவர் ஒருவரை தெரிவு செய்வது குறித்து கடந்த வெள்ளிக்கிழமை(4) இடம்பெற்ற தேர்தலின்போது புதிய தலைவராக ஆர்.பி.எம். லசந்த ஸ்டீவன் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து அவர் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதன்போது மாகாண ஆளுநரின் செயலாளர் எச்.டி.சிசிர, சப்ரகமுவ மாகாண உள்ளூராட்சி சபை ஆணையாளர் துலிப் சொமிரத்ன உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# மனித உரிமைகள் ஆணைக்குழு மாவட்ட கிளை அலுவலகம்

## நுவரெலியாவில் இன்று அங்குரார்ப்பணம்

*தலவாக்கலை குறூப் நிருபர்*

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கிளை அலுவலகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் இன்று (08) நுவரெலியாவில் மாவட்ட அலுவலகமொன்றை குயின் எலிசபெத் கட்டிடத்தில் திறக்கவுள்ளது.

இலங்கையில் வாழும் இனங்களுக்கு மத்தியில் இந்திய வம்சாவளி தமிழ் இனத்தவரும் முக்கியமானவர்கள். இவர்கள் 19ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட ஆங்கிலேய ஆட்சியாளர்களால் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு நாட்டில் இயங்கி வந்த பெருந்தோட்ட துறையில் பணிக்கமர்த்தப்பட்டனர். இந்திய வம்சாவளி மக்கள் நாட்டின் சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கி மிக ஏழ்மைநிலையில் வாழ்ந்துவருகின்றனர். மேலும் இக்குழுவில் அதிக கவனம் செலுத்தி அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், உரிமை மீறல்களின் போது எளிதாக அவர்கள் தங்களது பிரதேசத்தில் இருக்கும் அலுவலகத்திற்கு சென்று மீறல் சம்பந்தமான முறைப்பாட்டை மேற்கொள்வதற்கு வழி வகுக்கும் வகையில் இந்த அலுவலகம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இவ் அலுவலகத்தின் திறப்பு நிகழ்வானது இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் எஸ்.ஈ.ஸ்கொக்கினால் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரும் முன்னால் உயர் நீதிமன்ற நீதியரசருமான ரோஹினி மாரசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான சங்கைக்குரிய கலுபஹன பியரத்தன ஹிமி, கலாநிதி. விஜித நானயக்கார, வைத்தியர். நிமல் கருணாசிறி மற்றும் செல்வி. அனுஷியா சண்முகநாதன் ஆகியோருடன் ஆணைக்குழுவின் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் ஜே.பி. வீதி பஹ்ர் கிராமம், மாஞ்சோலை எனும் விலாசத்தில் வசிக்கும் யோகராசா பாத்திமா அஸ்மா மற்றும் செல்வக்குமார் அஸ்லம் ஆகிய கணவன் மனைவியாகிய நாங்கள் கடந்த 2018.01.13ம் திகதி புனித இஸ்லாத்தை தழுவிக் கொண்ட நாங்கள் யோகராசா சசிகலா என்ற எனது பெயரை யோகராசா பாத் திமா அஸ்மா என்றும், செல்வக்குமார் கிருஸ்ண குமார் என்ற எனது பெயரை செல்வக்குமார் அஸ்லம் என்றும் மாற்றியுள்ளோம். அதன் பின்னர் எங்களது அனைத்து ஆவணங்களிலும் யோகராசா பாத்திமா அஸ்மா மற்றும் செல்வக்குமார் அஸ்லம் என்று உள்ளதால் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் யோகராசா பாத்திமா அஸ்மா மற்றும் செல்வக்குமார் அஸ்லம் என்று மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

**செல்வக்குமார் அஸ்லம்**

## பெயர் மாற்றம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் மாவடிச்சேனை 05 இல.46 யாசன் பாவா வீதி எனும் விலாசத்தில் வசிக்கும் இஸ்ஸதீன் ஆகிய எனது பிறப்பு சான்றிதழில் "முகம்மது ஸ்தீன்" என பெயர் வைக்கப் பட்டுள்ளதுடன், எனது அனைத்து ஆவணங்களிலும் முகம்மது இஸ்ஸதீன் என்று உள்ளதால் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் முகம்மது இஸ்ஸதீன் என்று மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

**முகம்மது இஸ்ஸதீன்**
**இல.46 யாசன் பாவா வீதி**
**மாவடிச்சேனை 05**

## கொமர்ஷியல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி

(கம்பனி பதிவெண் PQ 131/PB/PQ)
68, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-04.

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கொமர்ஷியல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி உடன் சிங்ஹபுத்திர பினான்ஸ் பிஎல்சி (எஸ்எவ்எல்) இன் ஒன்றிணைப்பு**

2022 பெப்ருவரி 11 ஆம் திகதியிடப்பட்ட பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கையின் திருத்தமானது 2022 பெப்ருவரி 15 ஆம் திகதியன்று பங்குதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2022 மார்ச் 18 ஆம் திகதிக்கு சரிசெய்யப்பட்ட "எஸ்எவ்எல்" பங்குகளின் செயல் தொடர்புகளுக்கான திகதி தொடர்பான மேற்கூறப்பட்டுள்ள சுற்றறிக்கையின் (2) (I) ஆகிய உட்கூறுகள் பின்வருமாறு வாசிக்கப்படல் வேண்டும்.

(I) 2022 மார்ச் 14 ஆம் திகதிக்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ஒன்றிணைப்பு செயற்பாடானது பின்போடப்படாதவிடின் எஸ்எவ்எல் இன் பங்கு கொடுக்கல் வாங்கலானது நடைபெற மாட்டாது

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**கொமர்ஷியல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி**
**எல்ஓஎல்சி கோர்ப்பரேட் சேர்விசஸ் (பீவீடி) எல்டிடீ**

**கையொப்பமிட்டவர்**
**செயலாளர்கள்**

**2022 மார்ச் 2 ஆம் திகதியன்று.**

## சிங்ஹபுத்ர பினான்ஸ் பிஎல்சி

(கம்பனி பதிவெண் PB/PQ 259)
11, ஹில் வீதி, கண்டி

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கொமர்ஷியல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி (சிஎல்சி) உடன் சிங்ஹபுத்திர பினான்ஸ் பிஎல்சி (எஸ்எவ்எல்) இன் ஒன்றிணைப்பு**

2022 பெப்ருவரி 11 ஆம் திகதியிடப்பட்ட பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கையின் திருத்தமானது 2022 பெப்ருவரி 15 ஆம் திகதியன்று பங்குதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2022 மார்ச் 18 ஆம் திகதிக்கு சரிசெய்யப்பட்ட "எஸ்எவ்எல்" பங்குகளின் செயல் தொடர்புகளுக்கான திகதி தொடர்பான மேற்கூறப்பட்டுள்ள சுற்றறிக்கையின் (2) (I) ஆகிய உட்கூறுகள் பின்வருமாறு வாசிக்கப்படல் வேண்டும்.

(I) 2022 மார்ச் 14 ஆம் திகதிக்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ஒன்றிணைப்பு செயற்பாடானது பின்போடப்படாவிடின் எஸ்எவ்எல் இன் பங்கு கொடுக்கல் வாங்கலானது நடைபெற மாட்டாது.

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**சிங்ஹபுத்ர பினான்ஸ் பிஎல்சி**

**கையொப்பமிட்டவர்**
**H K P தில்ஹானி**
**செயலாளர்கள்**
**2022 மார்ச் 2 ஆம் திகதியன்று.**

## பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் பி.எஸ். குறுக்கு வீதி ஓட்டமாவடி எனும் விலாசத்தில் வசிக்கும் பொன்னுசாமி சுமையா ஆகிய நான், கடந்த 2019.02.28ம் திகதி புனித இஸ்லாத்தை தழுவிக் கொண்ட நிலையில் பொன்னுச்சாமி தவராணி என்ற எனது பெயரை பொன்னுசாமி சுமையா என்று மாற்றியுள்ளேன். அதன் பின்னர் எனது அனைத்து ஆவணங்களிலும் பொன்னுசாமி சுமையா என்று உள்ளதால் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பொன்னுசாமி சுமையா என்று மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

**பொன்னுசாமி சுமையா**
**பி.எஸ். குறுக்கு வீதி**
**ஓட்டமாவடி**

## எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி

(கம்பனி பதிவெண் PB 244 PQ)
இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கொமர்ஷியல் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி (சிஎல்சி) உடன் எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி (எல்ஓஎவ்சி) இன் ஒன்றிணைப்பு**

2022 பெப்ருவரி 11 ஆம் திகதியிடப்பட்ட பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கையின் திருத்தமானது 2022 பெப்ருவரி 15 ஆம் திகதியன்று பங்குதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2022 மார்ச் 30 ஆம் திகதிக்கு சரிசெய்யப்பட்ட "சிஎல்சி" பங்குகளின் செயல் தொடர்புகளுக்கான திகதி தொடர்பான மேற்கூறப்பட்டுள்ள சுற்றறிக்கையின் (2) (I) ஆகிய உட்கூறுகள் பின்வருமாறு வாசிக்கப்படல் வேண்டும்.

(I) 2022 மார்ச் 25 ஆம் திகதிக்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ஒன்றிணைப்பு செயற்பாடானது பின்போடப்படாவிடின் சஷசஷசிஎல்சி" இன் பங்கு கொடுக்கல் வாங்கலானது நடைபெற மாட்டாது.

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி**
**எல்ஓஎல்சி கோர்ப்பரேட் சேர்விசஸ் (பீவீடி) எல்டிடீ**

**கையொப்பமிட்டவர்**
**செயலாளர்கள்**

**2022 மார்ச் 2 ஆம் திகதியன்று.**

## பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காவத்தமுனை பனிச்சையடி வீதி எனும் விலாசத்தில் வசிக்கும் அப்துல் ஜெளபர் ஆகிய நான், கடந்த 2016.01.10ம் திகதி புனித இஸ்லாத்தை தழுவிக் கொண்ட நிலையில் தர்மலிங்கம் என்ற எனது பெயரை அப்துல் ஜெளபர் என்று மாற்றியுள்ளேன். அதன் பின்னர் எனது அனைத்து ஆவணங்களிலும் அப்துல் ஜெளபர் என்று உள்ளதால் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் அப்துல் ஜெளபர் என்று மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

**அப்துல் ஜெளபர்**
**பனிச்சையடி வீதி**
**காவத்தமுனை**

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)(8)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்:
**கார்பன் கன்சல்டன்சி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: **PV 74495**

பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி: **2022.02.24**

பதிவு முகவரி இல:
**104/11, கிரான்பாஸ் வீதி, கொழும்பு - 14**

கம்பனியின் புதிய பெயர்:
**கிளைமேட் என்ட் கன்சர்வேஷன் கன்சோர்டியம் (பிரைவட்) லிமிட்டட்**

**சபையின் கட்டளைப் பிரகாரம்**

**செயலாளர்கள் :**
**கோப்பரேட் சர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**Climate & Conservation Consortium (Private) Limited**

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: மீரி/பிசெ/காணி/3/2020-2020/04

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 30 மார்ச் 2021 ஆம் திகதிய 2221/29 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி (111) ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : மேல்
மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : மீரிகம
கிராமம் : பஸ்யால

| கிராம சேவகர் பிரிவு | கடத்திரல் வரைபட இல. | துண்டு இலக்கங்கள் | துண்டுகள் | விஸ்தீரணம் (ஹெக்டயார்) |
|---|---|---|---|---|
| இல. 342ஏ, பஸ்யால கிழக்கு | 510258/01/8 | 240, 242, 244, 246, 248, 250, 252, 254, 255, 257, 259, 261 | 12 | 0.0553 |
| இல. 342, பஸ்யால | 510258/06/9 | 371, 373, 375, 377, 379, 381, 383, 385, 387, 389, 391, 393, 395 | 13 | 0.0366 |
| இல. 342பி, பஸ்யால மேற்கு | 510258/05/7 | 307, 309, 311, 313, 315, 317, 319, 321, 323, 324, 326, 328, 329, 331, 333, 334, 336, 338 | 18 | 0.0377 |
| இல. 342ஏ, பஸ்யால கிழக்கு | 510258/04/13 | 467, 468, 469, 471, 473, 475, 477, 479, 481, 482. 484, 486, 488, 490, 492, 494, 496, 498, 500, 502, 504, 506 | 22 | 0.0889 |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**மீரிகம.**

**பிரதேச செயலகம்,**
**மீரிகம.**
**03.03.2022**

இலங்கை சனநாயக குடியரசின் அரசாங்கம்
வீதி மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## 2022/ 2023 ஆம் ஆண்டுக்காக அவிசாவளை நிறைவேற்று பொறியியலாளர் பிரிவுக்கு தொழிலாளர்களை பணியமர்த்தல்

01. 2022/ 2023 ஆம் ஆண்டுக்காக அவிசாவளை நிறைவேற்று பொறியியலாளர் பிரிவுக்கு தொழிலாளர்களை பணியமர்த்துவதற்கு தகுதியுடைய சேவை வழங்குநர்களிடம் இருந்து வீதி அபிருத்தி அதிகாரசபையின் (RDA) சார்பில் கொழும்பு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தலைமை பொறியியலாளர் அலுவலக, பிராந்திய பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**விலைமனு ஆவணத்தில் தேவைகளின் விரிவான விபரம் மற்றும் விபரக்குறிப்பு தரப்பட்டுள்ளது.**

| வ/ இல. | விலைமனு இல. | ஒப்பந்தத்தின் பெயர் | அளவு | விலைமனு பிணை (ரூபா) | கேள்விமனு கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | RDA/CE/COL/ TEN/BID/24 | அவிசாவளை நிறைவேற்று பொறியியலாளர் பிரிவின் களுக்கல்ல பிரிவுக்காக தொழிலாளர்களை பணியமர்த்தல் | 15 | 5,000.00 | 1,080.00 |
| 02 | RDA/CE/COL/ TEN/BID/25 | அவிசாவளை நிறைவேற்று பொறியியலாளர் பிரிவின் கலகெதர பிரிவுக்காக தொழிலாளர்களை பணியமர்த்தல் | 05 | 5,000.00 | 1,080.00 |
| 03 | RDA/CE/COL/ TEN/BID/26 | அவிசாவளை நிறைவேற்று பொறியியலாளர் பிரிவின் ஹோமாகம பிரிவுக்காக தொழிலாளர்களை பணியமர்த்தல் | 10 | 5,000.00 | 1,080.00 |
| 04 | RDA/CE/COL/ TEN/BID/27 | அவிசாவளை நிறைவேற்று பொறியியலாளர் பிரிவின் கெஸ்பாவ பிரிவுக்காக தொழிலாளர்களை பணியமர்த்தல் | 10 | 5,000.00 | 1,080.00 |

02. விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதி மற்றும் தகைமை தேவைகளை பூர்த்தி செய்த அனைத்து தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கும் திறந்ததான இலங்கை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல்கள் மூலம் நிர்வகிக்கப்படும் தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறையை பயன்படுத்தி விலைக்கேட்பு நடத்தப்படும்.
03. மீளளிக்கப்படாத கட்டணமாக ஆயிரத்து எண்பது இலங்கை ரூபாவை (ரூபா 1,080.00) செலுத்தி 2022.03.07 ஆம் திகதி தொடக்கம் 2022.03.21 ஆம் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை தலைமை பொறியியலாளர் அலுவலகம் (கொழும்பு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இல. 36, உடுமுல்ல வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் இருந்து ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெற முடியும்.
04. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 மார்ச் 22 ஆம் திகதி பி.ப 02.00 அல்லது அதற்கு முன்னர் "தலைவர், பெறுகைக் குழு, தலைமை பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இல. 36, உடுமுல்ல வீதி, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கொழும்பு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தலைமை பொறியியலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடலாம்.
05. 2022.03.22 ஆம் திகதி பி.ப. 02.15க்கு மேலுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
06. விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க கோரப்படுகின்றனர்.
07. வேறு மேலதிக விபரங்களை தொ.: 011-2879113-15, தொலைநகல்: 011-2879116, கொழும்பு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தலைமை பொறியியலாளரிடம் இருந்து பெறலாம்.

**தலைமை பொறியியலாளர் - கொழும்பு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**2022 மார்ச் 07**

# விலைமனு அழைத்தல்

## மினுவங்கொட வலயக் கல்விப்பணிமனை - 2022

மினுவங்கொட வலயக்கல்விப் பணிமனையின் பெறுகைக்குழுத் தலைவரினால் பின்வரும் உருப்படிகளை 2022ஆம் ஆண்டின் முன்வரும் காலங்களில் கொள்வனவு செய்து கொள்வதற்காக 2022.04.07 அன்று மு.ப. 10.00 வரை தகுதியுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரையிட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| தொகுதி | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | மீளளிக்கப் படும் தொகை ரூபா |
|---|---|---|
| கணனிகள் | 500/- | 4000/- |
| டுப்ளோ இயந்திரங்கள் | | |
| போட்டோ பிரதியிடும் இயந்திரங்கள் | | |
| தொலைக்காட்சிப் பெட்டிகள் | | |
| மடிக்கணனிகள் | | |
| தொலைநகல் இயந்திரங்கள் | | |
| கணனி அச்சு இயந்திரங்கள் | | |
| மல்டிமீடியா புரொஜெக்டர்கள் மற்றும் ஸ்கிரீன் திரைகள் | | |

- கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் உருப்படிகளின் எண்ணிக்கையானது 2022ஆம் ஆண்டின் முன்வரும் காலங்களில் தேவைக்கேற்ப வேறுபடலாம்.

1. விலைமனுக் கோரலானது, திறந்த தேசிய போட்டி ரீதியிலான முறைமையினடிப்படையில் மேற்கொள்ளப்படும். கீழ்க்காணப்படும் முகவரியில் 2022.03.09 முதல் 2022.04.06 வரை வார வேலை நாட்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை) இதற்கான விலைமனுப்படிவங்களின் பிரதிகள் ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத கட்டணங்களை வலயக் கல்விப் பணிமனையின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டு மற்றும் நிறுவனத்தின் கடிதத்தலைப்பில் விண்ணப்பக்கடிதமொன்றை கணக்குப் பிரிவில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.
2. விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக, 2022.04.07 அன்று மு.ப. 10.00 இற்கு விலைமனுத்திறத்தல், மினுவங்கொட வலயக் கல்விப் பணிமனையில் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
3. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.04.07 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் மினுவங்கொட வலயக்கல்விப்பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் அல்லது 'வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர் பணிமனை, ஜாபாலவத்தை, மினுவங்கொட' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். அனைத்து விலைமனுக்களும், ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திருந்து 2022.12.31 வரை செல்லுபடியாகுதல் வேண்டும்.
4. 0112295077, என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் மினுவங்கொட வலயக்கல்விப் பணிமனையில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், விலைமனுப்படிவங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
5. இவ்விலைமனுக் கோரலை இரத்துச் செய்தல் அல்லது வேறு ஏதேனும் மாற்றங்களை மேற்கொள்ளல் தொடர்பான அதிகாரம் பெறுகைக்குழுவின் தலைவருக்கு உரித்தாகும்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**வலயக்கல்விப் பணிமனை**
**மினுவங்கொட**
**2022.03.03**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

### உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம் - செயற்றிட்டம் ID: P 163305

### கிழக்கு மாகாணம், திருகோணமலை

01. **உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக** உலக வங்கியிலிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது கடனொன்றைப் பெற்றுள்ளதுடன், இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை கீழேயுள்ள அட்டவணையிலுள்ள வேலைகளின் பணக்கொடுப்பனவுகளுக்கான செலவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து உரித்தான உள்ளூராட்சி அதிகாரசபைகளின் சார்பாக உள்ளூராட்சி பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
03. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
04. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர்அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரம் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றிற்காக பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
05. தகைமைகளின் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவண அட்டவணையில் (5 ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை **அட்டவணையில் பட்டியலிடப்பட்ட உரித்தான உள்ளூராட்சி அதிகாரசபையின்** தலைவர்/ செயலாளரிடமிருந்து பெற்று எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
07. **2022.03.09 ஆம் திகதியிலிருந்து 2022.03.29 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்** உரித்தான உள்ளூர் அதிகாரசபைக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
08. **2022.03.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும்.** தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
09. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலுக்கமைவாக விலைமனுக்கள் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. 2022 மார்ச் 22 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு உரித்தான உள்ளூராட்சி அதிகாரசபைகளில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர் இந்தக் கூட்டத்திற்கு அவர்களின் சொந்த செலவிலேயே பங்கு பெறலாம்.

**உதவி செயற்றிட்ட பணிப்பாளர்,**
**உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்,**
**திருகோணமலை மாவட்டம்**
**08.03.2022.**

| தொ. இல. (1) | உள்ளூ ராட்சி அதிகார சபையின் பெயர் (2) | வேலைகளின் விளக்கம் மற்றும் விலைமனு இல. (3) | கேள்வியிடக் கூடிய விலைமனுத் தொகை (பெசேவ நீங்கலாக மில்லியனில்) (4) | ஒப்பந்தக் காலம் (5) | தேவைப் படும் தரம் மற்றும் விஷே டத்துவம் (6) | பெறுகை அமைப்பின் பெயர் (7) | விலைமனுக் கோரல் ஆவணத்தை பெறுமிடம் மற்றும் தொலைபேசி இல. (8) | விலைமனு சமர்ப்பிக்கும் இடம் (ரூபாவில்) (9) | விலைமனு ஆவணத்தின் விலை (10) | தேவைப்படும் விலைமனு பிணையம்: விலைமனு பிணைய தொகை (ரூ) (11) | தேவைப்படும் விலைமனு பிணையம்: ஒப்பந்தக் காலம் (12) | விலைமனு செல்லு படியாகும் காலம் (13) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | பிரதேச சபை கோமர ங்கட வெல | கோமரங் கடவில் சந்தைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் 2021-1-EP-Tri கோமரங் கடவெல பிரதேச சபை | 11.76 | 120 நாட்கள் | கட்டிட நிர்மா ணத்தில் சி-5 மற்றும் சி-6 | பிரதேச சபை கோமரங் கடவெல | பிரதேச சபை கோமரங் கட வெல 026-2255045 | பிரதேச சபை கோமரங் கட வெல | 5,000.00 | 118,000.00 | 2022.07.13 வரையும் | 2022.06.15 வரையும் |
| 02. | பிரதேச சபை, பதவி சிரிபுர | சிரிபுரவில் அனைத்து வசதிகளு முடைய விருந்தினர் வீட்டின் பூர்த்தி யாக்கல் 2021-1-EP-Tri – பதவிசிரிபுர பிரதேச சபை | 13.25 | 120 நாட்கள் | கட்டிட நிர்மா ணத்தில் சி-5 மற்றும் சி-6 | பிரதேச சபை பதவி சிரிபுர | பிரதேச சபை பதவி சிரிபுர 025-2255209 | பிரதேச சபை, பதவி சிரிபுர | 5,000.00 | 133,000.00 | 2022.07.13 வரையும் | 2022.06.15 வரையும் |

**உதவி செயற்றிடட பணிப்பாளர்,**
**உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்.**
**திருகோணமலை மாவட்டம்.**
**08.03.2022**

### ஐ.பி.எல். ரி–20 தொடருக்கான போட்டி அட்டவணை வெளியீடு:

# முதல் போட்டியில் சென்னை-கொல்கத்தா அணிகள் மோதல்



பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெறவுள்ள 2022ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். ரி20 தொடருக்கான போட்டி அட்டவணையை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ளது.

கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். ரி20 தொடரின் நடப்பு ஆண்டுக்கான அத்தியாயம், எதிர்வரும் மார்ச் 26ஆம் திகதி தொடங்கி மே 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தநிலையில். 65 நாட்கள் நடைபெறும் இந்த தொடரில் மொத்தம் 70 லீக் போட்டிகள் நடைபெறுகின்றன. 4 பிளே ஒப் போட்டிகள் நடைபெறுகின்றன. இதன்படி, இத்தொடரின் முதல் லீக் போட்டியில் நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன. இப்போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறுகிறது.

மே 22ஆம் திகதி வான்கடே மைதானத்தில் நடைபெறும் இறுதி லீக் போட்டியில், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் பஞ்சாப் கிங்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

வான்கடே மைதானம் மற்றும் டி.வை. பட்டீல் ஆகிய மைதானங்களில் தலா 20 லீக் போட்டிகளும், மும்பை பிரபோன் மைதானம் மற்றும் புனே எம்சிஏ சர்வதேச விளையாட்டரங்கில் தலா 15 போட்டிகளும் நடைபெறுகின்றன.

இரண்டு போட்டிகள் நடைபெறும் நாட்களில் முதல் போட்டி பிற்பகல் 3.30 மணிக்கும், இரண்டாவது போட்டி இரவு 7.30 மணிக்கும் தொடங்கும்.

பிளே ஒப் போட்டிகளுக்கான போட்டிகள் மற்றும் மே 29ம் தேதி நடைபெறும் இறுதிப் போட்டியில் மோதும் அணிகள் மற்றும் மைதானங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

2022ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். ரி20 தொடரில், இம்முறை இரண்டு குழுக்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

குழு 'ஏ'இல் மும்பை இந்தியன்ஸ் அணி, கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, டெல்லி கெபிடல்ஸ் அணி, லக்னோவ் சுப்பர் ஜியண்ட்ஸ் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

குழு 'பி'இல் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, சன்ரைசஸ் ஹைதரபாத் அணி, றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, பஞ்சாப் கிங்ஸ் அணி, குஜராத் டைடன்ஸ் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

இம்முறை இரண்டு புதிய அணிகளின் வருகையுடன் மொத்தம் 10 அணிகள் விளையாட ஒரு அணி, 14 லீக் போட்டிகளில் (7 சொந்த ஊர் மற்றும் 7 வெளியூரில்) விளையாடவுள்ளது. ஒவ்வொரு அணியும் தங்கள் குழுவில் உள்ள அணிகளுடன் இரண்டு முறையும், மற்ற குழுவில் அதே வரிசையில் உள்ள அணியுடன் இரண்டு முறையும் விளையாடும். மற்ற குழுவில் உள்ள மீதமுள்ள நான்கு அணிகளுக்கு எதிராக, ஒவ்வொரு அணியும் ஒரு முறை மட்டுமே விளையாடும்.

புனே வோரியர்ஸ் இந்தியா மற்றும் கொச்சி டஸ்கர்ஸ் கேரளா ஆகிய இரண்டு புதிய அணிகளைக் கொண்டிருந்த 2011ஆம் ஆண்டு பதிப்பில் பயன்படுத்தப்பட்ட வடிவம் போன்றது.

## நீளம் பாய்தலில் மற்றுமொரு மைல்கல்லை எட்டினார் தனுஷ்க




இலங்கையின் முன்னணி நீளம் பாய்தல் வீரரான தனுஷ்க சந்தருவன், அமெரிக்காவில் நடைபெற்ற திறந்த மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரொன்றில் பங்குகொண்டு முதலிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளார்.

மிகவும் குளிரான காலநிலைக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில் 7.87 மீட்டர் தூரத்தைப் பாய்ந்து இந்த வெற்றியை அவர் பதிவுசெய்துள்ளார். நீளம் பாய்தலில் அவரது அதிசிறந்த தூரப் பெறுமதி இதுவாகும். அமெரிக்காவில் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான முதலாவது திறந்த மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் இதுவென்பது மற்றுமொரு சிறப்பம்சமாகும். முன்னதாக கடந்த மாதம் அமெரிக்காவில் நடைபெற்ற மாஸ்டர்ஸ் உள்ளக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் பங்குகொண்ட தனுஷ்க, ஆண்களுக்கான நீளம் பாய்தலில் 7.82 மீட்டர் தூரம் பாய்ந்து புதிய இலங்கை சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரேனிய இராணுவத்தில் சேரும் முன்னாள் டென்னிஸ் வீரர்



உக்ரேனின் முன்னாள் டென்னிஸ் வீரர், செர்கி ஸ்டாகொவ்ஸ்கி அவரது நாட்டின் இராணுவப் படையில் சேர்ந்துள்ளார்.

முன்பு நான்கு முறை ATP போட்டிகளில் வெற்றிபெற்ற 36 வயது விளையாட்டாளர் ஸ்டாகொவ்ஸ்கி உக்ரேனைக் காக்கும் படையில் சேர்ந்துகொள்ள விரும்பியதாகச் சொன்னார்.

தற்போது உக்ரேனில் இல்லாத அவர், அங்கு திரும்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இராணுவப் படையில் சேவையாற்றிய அனுபவம் இல்லாத அவர், துப்பாக்கியைத் தனிப்பட்ட முறையில் பயன்படுத்திய அனுபவம் உண்டு என்று பகிர்ந்துகொண்டார்.

அவருடைய தந்தையும் சகோதரரும் அறுவைசிகிச்சை நிபுணர்கள். ஸ்டாகொவ்ஸ்கி உக்ரேனுக்குச் சென்று இராணுவத்தில் சேர்வது குறித்து அவர்கள் கவலை தெரிவித்தனர். அவர்களிடம் அடிக்கடி பேசிவரும் ஸ்டாகொவ்ஸ்கி, தம் குடும்பம், பாதுகாப்புக்காக வீட்டின் கீழ்த்தளத்தில் இரவு நேரங்களில் உறங்குவதாகச் சொன்னார்.

ஸ்டாகொவ்ஸ்கியைப் போலவே முன்னாள் குத்துச் சண்டை வீரர் விளாடிமிர் கிளிட்ஷ்கோ என்பவரும் உக்ரேனியப் படையில் சேர்ந்திருக்கிறார்.

## ஒசோரியோ வீழ்ந்ததால், மான்டேரி மகுடத்தை தக்க வைத்தார் பெர்னாண்டஸ்



கனடாவின் லெய்லா பெர்னாண்டஸ் ஞாயிற்றுக்கிழமை கொலம்பியாவின் கமிலா ஒசோரியோவை வென்றதன் மூலம் சர்ச்சைக்குரிய பாணியில் தனது WTA மான்டேரி கிரீடத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு முன் ஐந்து போட்டிப் புள்ளிகளை பெற்றார்.

19 வயதான பெர்னாண்டஸ் 6–7 (5/7), 6–4, 7–6 (7/3) என்ற கணக்கில் வியத்தகு இறுதி செட்டுக்குப் பிறகு மூன்று மணி நேரத்திற்குள் போராடி வெற்றி பெற்றார்.

ஐந்தாம் நிலை வீரரான ஒசோரியோ, தனது ஐந்தாவது போட்டி புள்ளியை பெற்ற பிறகு, ஃபெர்னாண்டஸின் சர்வீஸில் 65 என தீர்க்கமான மூன்றாவது செட்டைப் பெற்ற பிறகு, தனது கேரியரில் இரண்டாவது டபிள்யூடிஏ பட்டத்தை மட்டுமே கைப்பற்றத் தயாராக இருந்தார்.

ஆனால் 2021 அமெரிக்க பகிரங்கத்தில் இரண்டாம் இடம் பெற்ற பெர்னாண்டஸ் பின்னர் போட்டி அதிகாரிகளிடம் மேன்முறையீடு செய்தார், மைதானத்தில் உள்ள ஒரு தவறான விளக்கு தன்னை திசைதிருப்பியதாக வாதிட்டார்.

விளக்குகளை சரி செய்ய அதிகாரிகள் உத்தரவிட்டனர், இதனால் விளையாட்டு மீண்டும் தொடங்குவதற்கு சுமார் 15 நிமிடங்கள் தாமதமானது.

செயல் மீண்டும் தொடங்கும் போது, ஒசோரியோவின் தாளம் உடைந்துவிட்டது.

பெர்னாண்டஸ் மேட்ச் பாயி ண்டை முறையாகத் திரும்பப் பெற்றார், மேலும் டை பிரேக்கை கட்டாயப்படுத்த சர்வீஸை வைத்திருந்தார்.

பின்னர் அவர் மூன்றாவது செட் டைபிரேக்கர் மூலம் 7/3 என்ற கணக்கில் கடந்த ஆண்டு முதல் முறையாக வென்ற பட்டத்தை வெற்றிகரமாக பாதுகாத்தார்.

# அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் கழகம் சம்பியன்




**கல்முனை மத்திய தினகரன்,**
**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்கள்**

சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் விளையாட்டுக்கழக ஏற்பாட்டில் நடைபெற்ற 'ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் வெற்றிக்கிண்ணம் 2022' சம்பியனாக அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக்கழகம் தெரிவானது.

அணிக்கு எட்டுப்பேர் கொண்ட 05 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியாக நடைபெற்ற இச் சுற்றுப்போட்டியில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த 22 அணிகள் கலந்துகொண்டன.

இறுதிப்போட்டிக்கு அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக்கழகமும், சாய்ந்தமருது றெட்மக்ஸ் விளையாட்டுக்கழகமும் தெரிவானது.

சாய்ந்தமருது பௌசி விளையாட்டுமைதானத்தில் நேற்று முன்தினம் (28.02.2022) மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அட்டாளைச்சேனை நியூ ஸ்டார்ஸ் விளையாட்டுக்கழகம் 05 ஓவர்களை எதிர்கொண்டு 5 விக்கட்களை இழந்து 54 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு 55 எனும் வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது றெட்மக்ஸ் விளையாட்டுக்கழகம் 05 ஓவர்கள் முடிவில் 30 ஓட்டங்களை மட்டுமே பெற்று 25 ஓட்டங்களால் தோல்வியடைந்து இரண்டாமிடத்தினை தனதாக்கிக் கொண்டனர்.

இந்த சுற்றுப்போட்டியின் தொடராட்டகாரராக 04 விக்கட்டுக்களை வீழ்த்தி 71 ஓட்டங்களை பெற்ற ரஸா தெரிவானார். தொடர்ந்தும் இறுதியாட்ட நாயகனாக அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக்கழக வீரர் அப்ராஸும்,தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக ஷமீர், துடுப்பாட்ட வீரராக ரஸா,களத்தடுப்பாளராக நக்மல் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு பாராட்டப்பட்டனர்.

சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் விளையாட்டுக்கழக ஒருங்கிணைப்பாளர் எல்.எம். ஷிப்னாஸின் தலைமையில் நடைபெற்ற இறுதிநாள் பரிசளிப்பு நிகழ்வில் விளையாட்டு உத்தியோகத்தரும்,சாய்ந்தமருது விளையாட்டுக் கழகங்களின் சங்க செயலாளருமான ஏ.எம். றிசாத், றெட் மேக்ஸ் நிறுவன பணிப்பாளர் ஏ.என்.எம். ஜாவித்,ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் விளையாட்டுக்கழக ஒருங்கிணைப்பாளர் அஸ்வர் அப்துல் ஸலாம்,கழக முகாமையாளர் அஸ்வர் கழக பயிற்றுவிப்பாளர் ஆசிரியர் எம்.எச்.எம்.முஸ்பீக் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

இதன்போது வெற்றி பெற்ற நியூ ஸ்டார் கழக அணிக்கு பெறுமதியான வெற்றிக்கிண்ணத்துடன் 6 ஆயிரம் ரூபா பணப்பரிசும்,இரண்டாமிடம் றெட்மக்ஸ் அணிக்கு பெறுமதியான கிண்ணத்துடன் 4 ஆயிரம் பணப்பரிசும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன. சகல போட்டிகளிலும் ஆட்டநாயகர்களாக தெரிவானோருக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





பேருவளை ஹெட்டிமுல்லையில் அமைக்கப்பட்ட புட்சல் விளையாட்டரங்கு திறப்பு விழாவினை முன்னிட்டு பேர்கோ சிடி வெற்றிக்கிண்ணத்திற்காக சினேகபூர்வ உதைபந்தாட்ட போட்டியொன்று 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெற்றது. பேருவளை மககொடை லிடில் இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியும் பாணந்துறை தொட்டவத்தை யங் உதைபந்தாட்ட அணியும் மோதிய போது இரு அணிகளும் சமநிலையில் கோல்களை பெற்றுக கொண்டதால் இறுதியில் பெனல்டி முறை வைக்கப்பட்டது. இதன் போது பேருவளை மககொடை லிடில் இங்கிலாந்து அணி 1 – 0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது. அந்த அணியின் சார்பல் முஹம்மத் அன்சத் கோல் ஒன்றை பெற்றுக் கொடுத்தார். லிடில் இங்கிலாந்து அணிக்கு முஹம்மத் ரிப்தியும் யங் தொட்டவத்தை முஹம்மத் ஆசிக்கும் தலைமைவகித்து தமது அணியை வழிநடாத்தினர். இப்போட்டிக்கு எம்.என்.எம் ரிம்ஸான் மஸ்தியஸ்தராக கடமையாற்றினார். புட்சல் உரிமையாளர் பாஹிம் தாலிப் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த சில்வா, பிரதம அதிதியாகவும் பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மட் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். பேருவளை பிரதேச சபை உறுப்பினர்களான பைஸான் நைஸர், ஹஸீப் மரிக்கார், தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத் தலைவர் ஏ.பீ.எம் ஸுஹைர் ஹாஜியார் உட்பட பல பிரமுகர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு பாஹிம் தாலிபின் புதல்வர் மின்ஹாஜ் பாஹிம் வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். படங்கள்: பேருவளை விசேட நிருபர்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கிழக்கின் குரல்



# சாய்ந்தமருதிற்கான நகரசபை; எனது பங்கு முதன்மையாக இருக்கும்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

சாய்ந்தமருதுக்கான தனியான நகர சபையை பெற்றுக் கொடுப்பதற்காக என்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு இப்பிரதேச மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு உதவி புரிவேன் என அம்பாறை மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது போரத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கிழக்கு மாகாண நிர்வாகத்திற்கான பிரதி பிரதம செயலாளர் ஏ.மன்சூரை



பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுரகயில்,

சாய்ந்தமருது மக்கள் நீண்டகாலமாக தமக்கென தனியான நகரசபையொன்று வேண்டும் என்ற கோஷம் மிக நீண்ட நாட்களாக இந்தப் பிரதேச மக்களால் கோரப்பட்டு வருவதனை நான் நன்கறிவேன். இவர்கள் பல அரசியல்வாதிகளால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். எனவே என்னால் முடிந்த வரையில் அந்த மக்களின் தாகத்தைத் தீர்ப்பதற்காக அரசுடனும் அது சம்பந்தப்பட்ட அமைச்சுடனும் அதிகாரிகளுடன் கதைத்து சாய்ந்தமருதுக்கான தனியான நகரசபை ஒன்றை பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல இன மக்களுக்கிடையில் தமிழ் , முஸ்லிம் , சிங்களம் என்ற வேறுபாடு இல்லாமல் ஒரு அன்னியோன்யமான உறவு ஏற்படுத்தப்பட வேண்டும். எதிர்கால சந்ததியினர் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் இந்த நாட்டிலும் அம்பாறை மாவட்டத்திலும் மிகவும் சுதந்திரமாக நடமாட வேண்டும் என்பதில் நான் மிகவும் நம்பிக்கையாக இருக்கின்றேன்.

## பாடசாலைகளில் அனைத்து வகுப்புகளும் ஏக காலத்தில் நடாத்தபட வேண்டும்;

### கல்வி நிருவாக அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

**கல்முனை விசேட நிருபர்**

பாடசாலை வகுப்புகள் தொடர்பில் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் உடனடியாக மாற்றம் செய்யப்பட்டு, சகல வகுப்புகளும் இடையூறின்றி ஏக காலத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி கல்வி அமைச்சருக்கு அவசர மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக சங்கத்தின் செயலாளர் ஏ.எல். முகம்மட் முக்தார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்;

கொரோனா பெருந்தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஓரளவு சீர் செய்யப்பட்டு வருகின்ற நிலையில், எரிபொருள் தட்டுப்பாட்டை காரணம் காட்டி பாடசாலைகளில் வகுப்புகளை பிரித்து நடாத்துமாறு கல்வி அமைச்சு சுற்றுநிருபம் வெளியிட்டிருக்கிறது.

இதனால் மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் மீண்டும் வெகுவாக பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

கொரோனா காலத்தின் பாதிப்புக்களால் இழந்த கல்வியை மாணவர்கள் இன்னமும் ஈடுசெய்ய முடியாமலும் வகுப்பேற்றம் நடைபெறாமலும் மாணவர்கள் பல்வேறு மன உழைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை கல்வி அமைச்சு அதிகாரிகள் கவனத்திற் கொள்ளவில்லையென்பது கவலைக்குரியதாகும்.

தற்போது கல்வி அமைச்சு சகல பாடசாலைகளும் நடத்தப்பட வேண்டிய முறை பற்றி சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

இதற்கமைவாக ஒரு வகுப்பில் 20 க்கு குறைவாக மாணவர்கள் இருப்பின் தினசரி அவ்வகுப்புக்கள் இடம்பெற வேண்டும் எனவும் ஒரு வகுப்பில் 21 முதல் 40 வரையான மாணவர்கள் இருப்பின் அவர்களை இரு குழுக்களாக பிரித்து வாரத்திற்கு ஒரு குழு வீதமும் 40 க்கு மேற்பட்ட மாணவர்கள் ஒரு வகுப்பில் இருப்பின் அவர்களை மூன்று குழுக்களாக பிரித்து பொருத்தமான ஏற்பாட்டுடன் வகுப்புக்களை நடாத்துமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சி.பெரேராவின் ஒப்பத்துடன் வெளியிடப்பட்ட கல்விச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



எழுத்தாளர் ஈழமதி ஜப்பார் எழுதிய மதி பாடும் நதிகள் எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா (06) அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மண்டபத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் தலைமையில் இடம்பெற்றது. இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா கலந்துகொண்டு நூலின் பிரதிகளை வழங்கி வைத்த போது,..

படம் முள்ளிப்பொத்தானை, பாலமுனை தினகரன் குறூப் நிருபர்கள்

## திருமலை சிறைக் கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்



**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருமலை சிறைச்சாலையும், திருமலை சிறைச்சாலை சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கமும் இணைந்து திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் 75 பிள்ளைகளுக்கு பாதணி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி (6) வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப் தலைமையில் திருகோணமலை நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் சிறை கைதிகள் மற்றும் விளக்கமறியல் கைதிகளின் பிள்ளைகளுக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப், பிரதான ஜெயிலர் சம்பத் ஜெயவர்த்தன, திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய நோயல் இம்மானுவேல் ஆண்டகை, சிறைச் கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் பாஸ்கரன் மற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், கைதிகளின் பிள்ளைகள் பாதுகாவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

## கல்முனையில் சர்வதேச மகளிர் தினவிழா

**காரைதீவு குறூப் நிருபர்**

மனித அபிவிருத்தித் தாபனத்தின் அம்பாறை மாவட்ட சகவாழ்வுக் குழுக்கள் இணைந்து நடாத்தும் மாபெரும் சர்வதேச மகளிர் தினவிழா, இன்று(8) கல்முனை கிறிஸ்ரா இல்லத்தில் மகளிர் அணித் தலைவி றிலீபா தலைமையில் நடைபெறும். பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் மற்றும் அதிதியாக மனித அபிவிருத்தித்தாபனத்தின் பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் கலந்து சிறப்பிக்கவிருக்கின்றார். கௌரவ, விசேட அதிதிகள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

மகளிர் சிறப்பு அதிதிகளாக மனித அபிவிருத்தித்தாபன மகளிர் விவகார இணைப்பாளர் திருமதி லோகேஸ்வரி சிவப்பிரகாசம், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுசியா சேனாதிராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர். இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் சமூகசேவைகள் தொடர்பில் ஆற்றிவரும் அளப்பரிய சேவைக்காக நிகழ்வில் மனித அபிவிருத்தித் தாபனத்தின் பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் விசேட விருது வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்படுவார்.

சகவாழ்வுக்குழு உறுப்பினர்களின் சிறப்பான வித்தியாசமான கலைநிகழ்ச்சிகள் மேடையேறவுள்ளன என இணைப்பாளர் பி.ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

## மாமனிதர் சிவநேசன் கிட்டிணனின் 14 ஆவது ஆண்டு நினைவஞ்சலி




**பாசிக்குடா நிருபர்**

மட்டக்களப்பு வாழைச்சேனை சுங்காங்கேணி எழுச்சி கிராமத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சிவநேசன் கிட்டிணனின் 14 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியினால் நினைவு கூரப்பட்டதுடன் நிகழ்வு பிரதேச சபை உறுப்பினர் கு.குனசேகரன் தலைமையில் நடைபெற்றது.

உயிர் நீத்த பாராளுமன்ற உறுப்பினர் யுத்த காலத்தில் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் நினைவு கூரப்பட்டதுடன்.மௌன, மலர் அஞ்சலி செலுத்தியதுடன் ஈகைச் சுடரும் ஏற்றப்பட்டது.

இந் நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ்,மாவட்ட அமைப்பாளர் க.குககுமாரராஜா ஆகியோர்களுடன் சிறுவர் முதல் முதியவர்கள் என பலரும் கலந்து கொண்டு நினைவஞ்சலி செலுத்தினார்கள்.

## கல்முனை மின் பொறியியலாளர் பிரிவு;

# அவசர திருத்தவேலைக்கான மின் துண்டிப்பு நேரங்கள்

**ஒலுவில் விசேட நிருபர்**

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் அவசர திருத்த வேலை காரணமாக மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை 09ம் திகதி புதன்கிழமை சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட தொழில்நுட்ப கல்லூரி பகுதி, அம்பாறை வீதி, உடங்க, சென்னல் கிராமம், 20ம் வீட்டுத்திட்டம், 40ம் வீட்டுத்திட்டம், இராமண் பள்ளிவாசல் ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும்.

11ம் திகதி வெள்ளிக்கிழமை 05ம் கொலணி பகுதியில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும்.

12ம் திகதி சனிக்கிழமை சின்னபாலமுனை, கோணவத்தை, காரைதீவு இருந்து சம்மாந்துறை வைத்திய சாலை ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும்.

13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தைக்காபள்ளி வீதி பகுதியில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும்.

17ம் திகதி வியாழக்கிழமை வீரச்சோலை, சொறிகல்முனை, ஆலிவன்னியார் வீதி, வீரமுனை, 6 ம் கொலணி, உடங்க ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும். 18ம் திகதி வெள்ளிக்கிழமை தரவைகோவில், கடற்கரை பள்ளி, அம்மன்கோவில், பீச் வீதி, உடையார் வீதி, வீ.வீ வீதி, இஸ்லாமபாத் வீட்டுத்திட்டம், கிறீன் பீல்ட் தரவைகோவில் வீதி, பிரதான வீதி, சந்தை வீதி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும். 19ம் திகதி சனிக்கிழமை சின்னபாலமுனை, கோணவத்தை மற்றும் தியட்டர் வீதி 1,2,3 ம் குறுக்கு, பீச் வீதி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும். 22ம் திகதி செவ்வாய்க்கிழமை 3வது வீதி, 7ம் வீதி, 13ம் வீதி, கல்லரைச்சல் ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.







மட்டக்களப்பு வவுணதீவு மக்களின் நலன் கருதி வவுணதீவில் மக்கள் வங்கி கிளை நேற்று காலை 8.30 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.மட்டக்களப்பு மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் சிசிர குமார தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மக்கள் வங்கி பிரதிப் பொது முகாமையாளர் பி. எம். பிரேம்நாத் பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார். மட்டக்களப்பு மக்கள் வங்கி நகர் கிளை முகாமையாளர் எம். ஆர்.பவானந்தராஜா மற்றும் வவுணதீவு மக்கள் வங்கி கிளை நிலையத்தின் முகாமையாளர் உட்பட திணைக்கள உயர் அதிகாரிகள் மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். படங்கள் ஆரையம்பதி தினகரன் நிருபர்

## மருதமுனையில் கேஸ் அடுப்பு வெடிப்பு

**பெரியநீலாவணை விசேட நிருபர்**



அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் கேஸ் அடுப்பு ஒன்று வெடித்து சிதறிய சம்பவம் (05) பதிவாகியது.

மருதமுனை பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இமாம் கஸ்ஸாலி வீதியில் வீடு ஒன்றில் சமையல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, குறித்த வீட்டின் கேஸ் அடுப்பு வெடித்து சிதறியுள்ளது. எனினும் சமையலில் ஈடுபட்டிருந்த நபருக்கோ அல்லது வேறு எவருக்கும் எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை. சம்பவம் குறித்து வீட்டு உரிமையாளர் இவ்வாறு தனது கருத்துக்களை வெளியிட்டார். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாணல் கலை இலக்கிய வட்டத்தின் மகளிர் தின கௌரவிப்பு

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் ஆற்றல் உள்ள பெண்களின் அமைப்பு ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வும் மண்ணுக்கு மகுடம் சூட்டிய பெண்கள் கௌரவிப்பும் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் அமைப்பின் தலைவி அப்துல் ரவூப் பாத்திமா சூபா தலைமையில் நேற்று (06) நடைபெற்றது. நாடும் தேசமும் உலகமும் அவளே எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்திருந்த இந்த சர்வதேச மகளிர் தின நிகழ்வில் பெண்களின் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தனர். கவியரங்கு, வில்லுப்பாட்டு என்பன பார்வையாளர்களினால் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. நிகழ்வில் மருதமுனை பிரதேசத்தின் முதல் கலாநிதி இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகரும் பால்நிலை சமநிலை ஒப்புரவு நிலையத்தின் பணிப்பாளருமான கலாநிதி முஹம்மது மஜீத் மஸ்றூபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றினார்.

இவர்களுடன் நாணல் கலை இலக்கிய வட்டத்தின் பிரதிநிதிகள், ஆலோசகர்கள், பெண் படைப்பாளிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். சிறப்பு அம்சமாக நீண்ட காலமாக நாட்டுக் கவிபாடி கலை இலக்கியத்துறையில் பலரது பாராட்டையும் பெற்று தற்போது வயது முதிர்ந்து சுகவீனமுற்றிருக்கும் ஜுவைரியா சஹாப்தீன் அதிதிகளினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.



# கிழக்கின் குரல்

## மூன்று சமூகங்களும் சமனாக வாழக்கூடிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் அதாஉல்லா

(ஒலுவில் விசேட, நிந்தவூர் குறூப் நிருபர்கள்)

நாட்டில் மூன்று சமூகங்களும் சமனாக வாழக் கூடிய அரசியல் யாப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

280 சமூக ஆளுமைகள் பற்றி ஈழமதி ஜப்பார் எழுதிய "மதி பாடும் நதிகள்" கவிதை நூல் வெளியீட்டு விழா அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், பல ஆண்டு காலமாக இருந்து வருகின்ற அம்பாறை மாவட்ட நிருவாக எல்லையை மாற்றியமைத்து, திகாமடுல்ல என பெயரை மாற்றுவதற்கு மக்களின் அபிப்பிராயம் கோரப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் திடீரென அம்பாறையை திகாமடுல்ல மாவட்டமாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையானது இன ரீதியான பாகுபாட்டை ஏற்படுத்தும்.

அம்பாறை மாவட்டத்தில் ஆண்டாண்டு காலமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். இம் மாவட்டத்தில் அண்மைக்காலமாக இன ரீதியான பாகுபாடுகள் காணப்படுவதால் சமூகங்களிடையில் இன விரிசல்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றது. இதனை எல்லோரும் பேசித் தீர்க்க வேண்டும்.

கடந்த காலங்களில் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ முஸ்லிம்களுக்கு பல உதவிகளை செய்து வந்துள்ளார். அதற்கு நன்றிக் கடனாகவே கடந்த தேர்தல் காலங்களில் அவருக்கு தேசிய காங்கிரஸ் தமது ஆதரவினை வழங்கி வந்தது.

எமது நாட்டின் வழங்களை சூறையாடுவதற்கு வெளிநாட்டு சக்திகள் முயல்கின்றன. இதனை நாம் ஒவ்வொருவரும் அவதானமாக செயற்பட வேண்டும். தொடர்ந்தும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களை நம்பியிராமல் எமது நாட்டில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி நாம் நமக்குத் தேவையான பால்மா மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்றார்.





பெரியகல்லாறு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பங்குனி உத்தர வருடாந்த கொடியேற்றம், வெள்ளிக்கிழமை (04) நடைபெற்ற போது, கொடிச் சீலை சாதகசிம்மம் சிவாகம சேகரர் பிரம்மஸ்ரீ நித்திய சிவானந்தக் குருக்களால் கொடியேற்றம் செய்து வைக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்: கல்லாறு தினகரன் நிருபர்)

## ஆரையம்பதியில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினம்

(மட்டக்களப்பு குறூப்பு,திய காத்தான் குடி தினகரன் நிருபர்கள்)

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு அதன் முதலாவது நிகழ்வு மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினால் ஆரையம்பதி சிறுவர் பூங்காவிற்கு அருகில் நடாத்தப்பட்டது.



இந் நிகழ்வானது மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி. ந.சத்தியானந்தியின் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (06) ஆரம்பமானதுடன், இதில் குடும்ப வன்முறை தொடர்பான வீதியோர நாடகம் சூரியா கலாசார குழுவினரால் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி.வி. லோகினி, கிராம சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஆரையம்பதி கிழக்கு மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அட்டாளைச்சேனை சுகாதார பிரிவில் கொரோனா தடுப்பூசி

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வாழும் 20 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கொரோனா தடுப்பூசி போடும் நடவடிக்கை அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலனின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இதற்கமைவாக பாலமுனை பிரதேசத்திலுள்ள பாலமுனை ஐந்து கிராம சேவகர் பிரிவுகளுக்குமான 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஞாயிற்றுக்கிழமை (6) பாலமுனை உதுமாபுர சுகாதார நிலையத்தில் இடம்பெற்றது. இதில் பாலமுனை பிரதேசத்துக்கான சிரேஸ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.பி.மிஹியார் தலைமையிலான சுகாதார உத்தியோகத்தர்கள் குழுவினரின் பங்குபற்றுதலுடன் இத்தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றன.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, தீகவாபி போன்ற பிரதேசங்களில் வாழுகின்ற 20 வயதுக்கு மேற்பட்ட முதலிரண்டு தடுப்பூசிகளை ஏற்றி மூன்று மாதம் கடந்தவர்களுக்கே இத்தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றன.எதிர்வரும் காலங்களில் கொரோனா தடுப்பூசி போடாதவர்கள் பொது இடங்களுக்கு சென்றால் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## காட்டு யானைகளால் தோட்ட பயிர்கள் சேதம்

கல்குடா தினகரன்

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புணாணை கிழக்கு கிராம அதிகாரி பிரிவிலுள்ள குகனேசபுரம் பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை (06) அதிகாலை காட்டு யானைகள் புகுந்து பெறுமதியான தென்னை மரங்கள், தோட்டப் பயிர்கள் என்பவற்றை சேதப்படுத்தியுள்ளன.

இப்பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதுடன், பெறுமதியான தென்னை, மா, பலா போன்ற மரங்களும் காய்கறிப் பயிர்களும், மரவள்ளி தோட்டமும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

வளர்ந்த தென்னைகள் மற்றும் தோட்டப்பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், சுற்றுவேலியும் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் இப் பிரதேசத்தில் வதியும் மக்கள் உயிரச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதுடன், பாரிய நஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இப் பிரதேசத்திற்குள் நுழையும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் தொடர்ச்சியாக இவ்வாறான அழிவுகளை தவிர்க்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இதுதொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் யானை வேலி அமைத்து தருவதுடன், எங்களது உயிர்களையும், பயிர்களையும் பாதுகாக்க உதவ வேண்டுமென பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## டெங்கு ஒழிப்பு சிரமதானம்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்



பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப் படவுள்ளதையிட்டு பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் அதிபர் செல்வராஜா தலைமையில் பாடசாலையில் மாபெரும சிரமதான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இச் சிரமதான நடவடிக்கையில் ஆசிரியர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர், சமுர்த்தி பயனாளிகள், என பலர் கலந்து கொண்டனர். இங்கு பாடசாலையின் உட்புற மற்றும் வெளிப்புற சூழல்கள் சுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மகளிர் தினத்தை முன்னிட்டு துறை சார்ந்த மகளிர் கௌரவிப்பு

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர் )



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளத்தின் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, துறை சார்ந்த மகளிரைக் கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (06) சம்மாந்துறை இஸ்லாமிய கற்கை பீடத்தில் நடைபெற்றது.

முன்னணியின் அம்பாறை மாவட்டத் தலைவி ஜீ.றிபா முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.ஐ.எம்.அமீர் பிரதம அதிதியாகவும், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளத்தின் பிரதம ஆலோசகர் எஸ்.எல்.ஆதம்பாவா, கலாநிதி எஸ்.எல். றியாஸ் கௌரவ அதிதிகளாகவும்,அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசிய தலைவர் எம்.ஐ.உதுமாலெப்பை, முன்னணியின் மாகாண பணிப்பாளர் ஏ.எல்.எம்.இஸ்மாயில், மாவட்ட தலைவர், மாவட்ட ஆலோசகர்கள் விசேட அதிதிகளாவும் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை, கல்முனை பிரதேசங்களைச் சேர்ந்த பதவி உயர்வு பெற்றவர்களான கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் திருமதி ஆர்.யூ.ஏ.ஜெலீல், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சம்மாந்துறை பிரயோக விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் கலாநிதி எம்.ஐ.சபீனா இம்தியாஸ் ஆகியோருக்கு எம்.ஐ.எம்.அமீரினால் நிர்வாகத்தின் ஆளுமை, கல்விக்கான ஆளுமை என்ற விசேட கௌரவங்கள் மகளிர் தினத்தை முன்னிட்டு வழங்கி வைக்கப்பட்டன. இதன் போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் யூனானி மருத்துவ பீடத்திற்கு இவ்வாண்டு தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனைச் சேர்ந்த எம்.ஆர். பத்திமா நஷ்காவிற்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வன்செயலால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நட்டஈடு

(திருக்கோவில் தினகரன் நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் பயங்கரவாத வன்செயல்களால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் மற்றும் சர்வமத வழிபாட்டுத் தலங்கள் என்பனவற்றுக்கான நட்டஈட்டு காசோலைகள் வழங்கி வெள்ளிக்கிழமை (04) வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் தலைமையில், திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் 27 தனிநபர்களுக்கும் மொத்தத் தொகையாக சுமார் 23 இலட்சம் ரூபாவும், ஒரு இந்து ஆலயம் மூன்று பௌத்த தலங்கள் உட்பட நான்கு மத வழிபாட்டு தலங்களுக்கு மொத்த தொகையாக 30 இலட்சம் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டு அதற்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நட்டஈட்டுக் காசோலைகளை வழங்கி வைத்திருந்ததுடன், நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் ,இழப்பீட்டுக்கான அலுவலக அதிகாரிகள் சர்வமத குருமார்கள், திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்த கொண்டனர்.

## அக்கரைப்பற்று மாநகர சபையில் அனுதாபம்

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

பொதுமக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதில், அக்கரைப்பற்று மாநகர சபை கூடிய கரிசனையோடு செயற்பட்டு வருகிறது என, அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் மாதாந்த பொதுச்சபை அமர்வு கடந்த (03) அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது, வெல்லவாய எல்லாவெல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற வேளை எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி மரணித்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்களான அப்துல் ஹசீன் ஹயான், றிபாத் அஹமத் ஆகியோருக்கும் மற்றும் அண்மையில் சுகயீனம் காரணமாக காலமான மாநகர சபை ஊழியர் முஹம்மத் றிஸ்வி ஆகியோருக்கும் மாநகர சபை அமர்வின் போது அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## பாடசாலைகளில் சிரமதானம்

(மூதூர் தினகரன் நிருபர்)

பாடசாலைகள் நேற்று திங்கள் கிழமை (07) ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு, கற்றலுக்கு மகிழ்ச்சியான சூழல், தொடர்ச்சியான வளத்தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் சுகாதார சூழல் உள்ளிட்ட பாதுகாப்பு கருதி (05, 06) ஆகிய தினங்களில் மூதூர் பிரதேச பாடசாலைகளில் பெரும்மளவிலான பாடசாலைகளில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், விளையாட்டுக் கழகங்களாக ஒன்றிணைந்து இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

## வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கல்குடா தினகரன் நிருபர்



கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், ஜேர்மனி ஸ்டுட்காட் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எம்.சியான், பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.தாசிம், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.எழிலவணம், மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 50 மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு ஜேர்மனி ஸ்டுட்காட் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் ஊடாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## ஏறாவூர் நகர சபை செயலாளர் கௌரவிப்பு

மட்டக்களப்பு விசேட நிருபர்



மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு உதவி பிரதேச செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் ஏறாவூர் நகர சபைச் செயலாளர் எம்.ஆர். ஷியாஹுல் ஹக்கீமை கௌரவிக்கும் நிகழ்வு ஏறாவூர் வாவிக்கரையோ கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்றது.

ஏறாவூர் நகர சபைத் தலைவர் எம்.எஸ். நழிம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஏறாவூர் பொலிஸ் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.கே.ஏ. ஜவாகீர், ஏறாவூர் நகர சபை புதிய செயலாளர் எச்.எம்.எம். ஹமீம் உட்பட ஏறாவூர் நகர சபை உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பதவி உயர்வு பெற்று இடமாற்றலாகிச் செல்லும் செயலாளரின் சேவைகளையும், அவரது திறமைகளையும் அதிதிகள் பலர் பாராட்டிப் பேசினர்.

இதன்போது இலங்கை நிருவாக சேவை அதிகாரியான ஏறாவூர் நகர சபைச் செயலாளர் ஷியாஹுல் ஹக் வாழ்த்தி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதோடு, அவருக்கு நினைவுப் படிகங்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

# "நாடு ,வீடு ,உலகம் அவள்" சர்வதேச மகளிர் தினம் இன்று தேசிய நிகழ்வு



"நாடு ,வீடு ,உலகம் அவள்" என்னும் தொனிப் பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று தொடக்கம் ஏப்ரல் 7ஆம் திகதிவரை பல நிகழ்வுகள் அகில இலங்கை ரீதியில் செயல்படுத்தப்படவுள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் அடிப்படை கல்வி, பாடசாலைகள் அடிப்படை வசதிகள் மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த த சில்வா தெரிவித்தார்.

இம்முறை சர்வதேச மகளிர் தின கொண்டாட்ட தேசிய நிகழ்வுகள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் நாட்டின் 600 பெண்களின் பங்களிப்புடன் கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். அதனுடன் இணைந்ததாக மார்ச் 8ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 7ஆம் திகதி வரை மாதம் முழுவதும் செயல்படுத்தப்படவுள்ள நிகழ்ச்சிகள் தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்காக அரச செய்தி திணைக்களம் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

பெண்களின் வாழ்வாதார அபிவிருத்தியை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இம்முறை மகளிர் தின கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக ஒரு நாளை மாத்திரம் ஒதுக்க முடியாது எனவும் 365 நாட்களும் அவர்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என கூறிய அமைச்சர் பெண்களின் எண்ணங்களை மாற்றுவதன் மூலம் தேவையான இலக்கை நோக்கி செல்ல முடியும் என அவர் தெரிவித்தார்.

இம்முறை சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களில் 25 பெண் தொழில் முனைவோர்களை பாராட்டும் நிகழ்வும் மற்றும் பெண் தொழில்முனைவோருக்கு e சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நிகழ்வும் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறும். பெண்களின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை சந்தையை திறந்து வைப்பதோடு 800 விற்பனை கூடங்கள் மூலம் நாடு பூராவும் உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களின் உற்பத்திப் பொருட்களை விற்பதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்தவின் கருத்துக்கமைய "அன்னையரே" என்னும் பேரில் அன்றைய தினம் மாலை தாய்மையின் பெருமையை கூறும் பாடல்களை இசைக்கும் நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது .முப்படைகளில் பணியில் ஈடுபட்டுள்ள 600 க்கும் அதிகமான பெண் அதிகாரிகள் அதில் பங்குபெறுகின்றனர்.

"நிச்சயமாக ஆண்களுக்கு மாத்திரம்"நிகழ்ச்சி மார்ச் 9ஆம் திகதி மாலை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது. பெண்களின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆண்களின் பொறுப்பு எனவும் குடும்பத்தை உருவாக்குவதற்காக இங்கு பெற்றுக் கொடுக்கப்படும் ஆலோசனைகள் அவர்களுக்கு மிகவும் பிரயோசனமானதாக அமையும்.

நாடு பூராவும் செயல்படுத்தப்படவுள்ள "தியனிய"(மகள்) வேலைத் திட்டத்தின் மூலம் பெண் பிள்ளைகளுக்கான சுகாதார தேவைகளை அறிந்து கொண்டு அவற்றை நிறைவேற்றி வளமான வாழ்வை மகிழ்ச்சியுடன் கழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 300 பாடசாலைகளில் இவ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு மேலும் 500 பாடசாலைகள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பெண்களுக்காக "Spare Time App" என்னும் மென்பொருள் செயலி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.அதன்மூலம் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்களுக்கு தீர்வு அளித்தல், வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளல்' பொருளாதார ரீதியாக பெண்களை பலப்படுத்தல் போன்ற பல சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அனைத்து மாகாணங்களையும் இணைத்ததாக மாதம் முழுவதும் இவ்வாறு பல வேலைத்திட்டங்கள் செயல்படுத்தப்பட வுள்ளன. இந்த வேலைத்திட்டங்களை ஒரு மாதத்திற்கு மாத்திரம் செயல்படுத்தாது வருடம் பூராவும் செயல்படுத்துவதே தனது நோக்கம் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஊடக கலந்துரையாடலில் கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சின் செயலாளர் குமாரி ஜயசேகர தமது அமைச்சு பெண்களுக்கு இரண்டு வழிகளில் சக்தியாக அமைந்துள்ளதாக தெரிவித்தார். இலங்கை மகளிர் பணியகம் மற்றும் பெண்கள் குழு பெண்களுக்கு தேவையான உதவிகளை பெற்றுக் கொடுக்கின்றது. விசேடமாக பெண்கள் குழு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பெண்கள் குறிகாட்டிகளுக்கான சட்ட வரைவுகளை தயார் செய்கின்றது. நீதிமன்ற நடவடிக்கைகளில் பெண்கள் முகம் கொடுக்கும் சிரமங்கள் மற்றும் பாதிப்புக்குள்ளாவதை குறைப்பதற்கு தேவையான சட்டவரைவுகள் தயாரிக்கப்படுகின்றன.பெண்களை பாதிக்கும் துன்புறுத்தல் மற்றும் மோதல்களுக்கு தீர்வு அளிப்பதற்கு அவசர உதவி சேவை இலக்கம் 1938 க்கு அழைப்பினை ஏற்படுத்தி உதவிகளை பெற்றுக் கொள்ளலாம் என இராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

# வரலாற்றுப் பிழையைத் திருத்த வேண்டும்

கொல்கத்தாவில் 1897ஆம் ஆண்டு பிளேக் நோய் பயங்கரமாகப் பரவிக்கொண்டிருந்தது. மக்களுக்கு இறைநெறியை போதித்து வந்த சுவாமி விவேகானந்தர், பல்வேறு மதத் தலைவர்கள் போல் 'மக்கள் கஷ்டப்படுவதற்குக் காரணம் அவர்களது தலைவிதியே' என்று திண்ணை வேதாந்தம் பேசவில்லை.

உடனே ஜபமாலை உருட்டிக் கொண்டிருந்த அவரது சீடர்களின் கரங்கள் துடைப்பத்துடன் தெருத் தெருவாகச் சுத்தம் செய்தன. பிளேக் வந்ததற்குச் சுத்தமின்மைதான் முக்கிய காரணம் என்பதால் அந்தப் பணியை சுவாமிஜி ஆரம்பித்தார். அடுத்து ஏழைகள் தங்குவதற்கும் உணவுக்கும் பெரும் ஏற்பாடு அவர் செய்ய வேண்டியிருந்தது.

சுவாமிஜி அதற்காகப் பலரிடம் நிதி

அன்றாட அலுவல்கள், அன்றாட புலம்பலாக மாறி மடங்கள், தேவாலயங்கள் வெறும் கட்டடங்கள் என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

இதுபோன்ற பெரும் பொறுப்பில் உள்ளவர்களுக்கு சுவாமி விவேகானந்தர் 125 ஆண்டுகளுக்கு முன்பே ராமேஸ்வரத்தில் உரையாற்றிய போது கூறியது மிகவும் முக்கியமானது: 'சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள், முதலில் அவரது பிள்ளைகளாகிய உயிர்கள் அனைத்திற்கும் சேவை செய்ய வேண்டும். கடவுளின் தொண்டர்களுக்குச் சேவை செய்பவர்களே அவரது மிகச் சிறந்த தொண்டர்கள் ஆவார்கள்'.

விவேகானந்தர் காட்டிய வீரியமான சமய நெறி.

வழிபாட்டு அமைப்புகளின் ஆணிவேரும் பக்க வேர்களும்: அன்பர்கள் அன்றாடம் ஆண்டவனின் பார்வையில் இருந்து காரியங்கள் ஆற்ற வேண்டும்; தன்னம்பிக்கையும் தெய்வ நம்பிக்கையும் கொண்டு தனக்கும் பிறருக்கும் பயன்படும் வாழ்க்கை பற்றிய அனுபவ அறிவை

அரசர்களிடம், மடாதிபதிகளிடம், பணக்காரர்களிடம், அரசியல்வாதிகளிடமும், எல்லா சமயத் தலைவர்களிடமும் கேட்டுக் கொண்டது இதுதான்: பாமர மக்களை அன்புட

கக்கேடு' என்று கூறுகிறார் சுவாமிஜி. 'தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று கூறி, ஆதிக்க ஜாதியினர், தாங்கள் வசிக்கும் தெருக்களில்கூட அவர்களை நடக்க அனுமதிப்பதில்லை. ஆனால் அவர்களே, மதம் மாறி, தங்கள் பெயரை ஆங்கி

கூறப்பட்ட நம் முன்னோர் சொன்னதை ஒரு தீர்க்கமான சமய ஆச்சாரியராக இருந்து அவற்றை மேலும் விரிவுபடுத்தினார். 'மாத்ரு தேவோ பவ' (அன்னையை தெய்வமாகக் கருது), 'பித்ரு தேவோ பவ' (தந்தையே தெய்வமாகக் கருது), 'ஆச்சார்ய தேவோ பவ' (ஆசிரியரை தெய்வமாகக் கருது), 'அதிதி தேவோ பவ' (விருந்தினரை தெய்வமாகக் கருது) என்பது இந்து சமயப் பண்பாடு. ஆனால் காலத்தின் தேவையால், சமுதாயத்தின் மற்றும் இந்து சமயத்தின் வளர்ச்சிக்காக மேற்கூறிய நான்கினை சுவாமிஜி மேலும் விரிவுபடுத்தினார்.

அன்னை, தந்தை, ஆச்சாரியர் மற்றும் விருந்தினர்களை தெய்வமாக

வேண்டினார். ஆனால் வேண்டிய நிதி வரவில்லை. சுவாமி விவேகானந்தர் சில மாதங்களுக்கு முன்பு மிகுந்த சிரமத்துடன் வாங்கியிருந்த ராமகிருஷ்ண மடத்தின் தலைமையகமான பேலூர் மடத்தை விற்கவும் எண்ணினார்.

'நாம் துறவிகள், ஒரு மரத்தடியில் கூட வாழ்ந்து விடலாம். ஆனால் மக்கள் துன்பப்படக் கூடாது என்று அந்தத் துறவறத்தாயின் தொண்டுள்ளம் துடித்தது. இப்படிப்பட்ட சமயக் குரவர்கள், மடாதிபதிகள், ஜீயர்கள், ஆதீனங்கள், சன்னியாசிகள் வாழ்ந்த புண்ணிய பூமி நம் பூமி.

ஆனால் இன்று பல மடங்களில், தேவாலயங்களில், பல்வேறு மத அமைப்புகளிடம் பல்லாயிரக்கணக்கான கோடி சொத்துக்கள் குவிந்து கிடக்கின்றன. அவர்களது நிர்வாகத்தின் கீழ் பல வழிபாட்டுத் தலங்கள், ஏக்கர் கணக்கில் நிலங்கள் மற்றும் வங்கியில் முதலீடுகள் போன்றவை கணக்கிட முடியாத அளவிற்கு இருக்கின்றன.

பொதுவாக, அப்படிப்பட்ட நிர்வாகத்தின் கவனமெல்லாம் அசையா சொத்துக்கள் மீதே இருப்பதால், அவர்களது இடங்களில் மண்டிக் கிடக்கும் சோம்பலையும் சுயநலத்தையும் அந்த நிர்வாகத்தால் அசைக்கக்கூட முடியவில்லை.

மடத்தின் சொத்துகளைப் பாதுகாப்பது தனது முதற்கடமை என்பார் அதன் நிர்வாகி. இந்தச் சிக்கலான பொறுப்பினைச் சுமப்பதால் பல மடாதிபதிகள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். தாங்கள் செய்ய வேண்டிய பிரதானமான தர்ம காரியங்களை மறந்து அவற்றைப் புறந்தள்ள வேண்டியிருக்கிறது.

மடம் என்பது என்ன? நூற்றாண்டுகளாக உள்ள சம்பிரதாயத்தை, பாரம்பரிய சமயச் சீலங்களைப் பாதுகாப்பது எப்படி? மடத்தின் ஆன்மீகப் பொக்கிஷங்களை எப்படி அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செல்வது போன்றவற்றைப் புரிந்து கொண்டால், சுவாமி விவேகானந்தர் கூறிய கருத்தின் ஆழம் புரியும்.

மடங்களின், வழிபாட்டுத் தலங்களின் சொத்துக்களைப் பாதுகாப்பது மட்டும் நிர்வாகமல்ல. அதைவிட முக்கியமான, புனித பாரம்பரியத்தைப் பராமரிப்பதும் மடத்தின் நிர்வாகம் ஆகும்.

தர்ம நிர்வாகம்: பக்தர்கள் தாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய தர்மத்தைப் பற்றிய பிரசாரத்தை, பக்தர்கள் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும் வகையில் மடத்தின் நிர்வாகம் தொடர்ச்சியாகச் சொல்லிக் கொண்டிருப்பதுதான் தர்ம நிர்வாகம்.

தார்மிகம் மற்றும் இறைவனை முன்னிலைப்படுத்திய வாழ்க்கையைப் பற்றிப் பக்தர்களுக்கு உபதேசிக்காமல், சமயச் செய்திகளை மட்டும் அவர்களிடத்தில் அலசிக் கொண்டிருப்பதில் அதிக பலனில்லை. தத்துவங்களைப் பற்றி எடுத்துச் சொல்லாமல் சடங்குகளைப் பிரதானப் படுத்துவதும் பக்தர்களுக்கு ஆற்றும் சிறந்த தொண்டாக இருக்க முடியாது.

உணர்வுள்ள சமயச்சடங்கு, அருளாளர்கள் காட்டிய அந்தந்த சமயப் பாரம்பரியத் தத்துவங்கள், சிறந்த பக்தர்கள் காட்டிய பக்திநெறி, மிக முக்கியமாக, கோவிலுக்கு வெளியே நடத்தப்படும் மானுட சேவை இவை அனைத்தும் சேர்ந்தால்தான் சமய வாழ்க்கை முழுமையாகும். இது மடத்திற்கு வரும் அன்பர்களுக்கு குருமார்கள் தொடர்ந்து வழங்க வேண்டும். சமய நெறிகளை மறக்காத சமுதாயப் பணியும், சமுதாய வளர்ச்சியை முன் நிறுத்தும் சமயப் பணியும் மக்களுக்குத் தொடர்ந்து வழங்குவதுதான் சிறந்த மடத்து நிர்வாகம்.



மடத்துத் தலைவர்களிடத்தில் தொய்வு இருக்கக்கூடாத இந்த முயற்சியில் தான் மடங்களின், வழிபாட்டுத் தலங்களின் ஆணிவேர் உள்ளது. அந்த வேர் சீராக வளர்ந்தால், மடத்தின் நிர்வாகத்திற்கு ஒரு பிரச்சினை என்றால் அந்தப் பக்தர்களே நிர்வாகத்திற்கு விசுவாசமாக, அரணாக விளங்கி, மடத்தின் பக்க வேர்களாக மாறுவார்கள்.

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் கொல்கத்தாவில் ரயிலில் பயணம் செய்தார். அப்போது பயறு விற்று வந்தார் ஒருவர். அவரிடம் ஓர் அணாவிற்கு அல்ல, ஒரு ரூபாய்க்கே பயறு வாங்கி அந்தச் சிறு வியாபாரியின் வியாபாரத்தை விவேகானந்தர் பெருக்கினார். எல்லா மக்களும் குறிப்பாக, அடித்தட்டு மக்கள் முன்னேற வேண்டும் என்பது விவேகானந்தரின் இதயத்துடிப்பின் புனித ஒலி ஆகும்.

அப்படிப்பட்ட சுவாமிஜி, கண்ணீரோடு அன்றைய (இன்றையவர்களிடம்கூட) ஆட்சியாளர்களிடம்,

னும் ஆதரவுடனும் அரவணையுங்கள். மனிதநேயத்துடன் அவர்களை அணுகுங்கள். தரித்திரத்தை அவர்களிடமிருந்து நீக்குங்கள். அவர்களுக்குக் கல்வி கொடுங்கள். ஏனெனில் அவர்கள் நாராயணர்கள்தெய்வங்கள் தரித்திர நாராயணர்கள்.

புழுவாக நெளிந்த பாமரர்களைப் பரமனின் அம்சமாகப் பார்க்கக் கற்றுத் தந்தார் சுவாமிஜி. ஏழைகளை ஒதுக்கும் இழிகுணத்தை 'வெட்

லப் பெயராக மாற்றிக் கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்.

சொந்தக் குழந்தைகளைப் பட்டினியில் சாகுமாறு விட்டு விடுகிறார்கள். ஆனால் அவர்கள் மதம் மாறி விட்டார்களானால், இவர்களே சாப்பாடு போடுகிறார்கள். என்ன வெட்கக்கேடு' என்று சுவாமி விவேகானந்தர் 'இந்தியாவின் எதிர்காலம்' என்ற தலைப்பில் சென்னையில் ஆற்றிய உரையில் கண்டித்திருந்தார்.

அந்த நல்ல பாமரர்கள் ஒதுக்கப்பட்டதால் ஒரு காலகட்டத்தில் சொந்த பாரம்பரியத்திலும், பண்பாட்டிலும், சொந்த மதத்திலும், சொந்த மக்களிடமும் பெருமைப்பட்ட அவர்கள், காலப்போக்கில் முரண்பட ஆரம்பித்தார்கள்; மதம் மாறினார்கள்.

தங்களது பண்பாட்டில் பெருமிதம் அடைந்தவர்கள், மனம் மாறி, மதம் மாறி தங்களது பாரம்பரியத்தையும், கலாசாரத்தையும் எதிர்க்கிறார்கள்; ஏளனம் செய்கிறார்கள்; ஆதங்கத்துடன் வெறுக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். வேற்று மத வியாபாரிகள் இவர்களுக்குத் தூபமிட்டு ஆட்டிப் படைக்கிறார்கள். இவர்களும் தாங்கள் புது வலையில் சிக்கி இருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்வதில்லை.

நான்கினை ஆறாக்கினார்: இந்து சமயத்திற்கு ஆபத்தாகியுள்ள இந்த அவல நிலை வரும் என்று 100 வருடங்களுக்கு முன்பே தெரிந்த சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தில் வழிபட வேண்டும் என்பதோடு, 'தரித்ர தேவோ பவ' (ஏழைகளை தெய்வமாகக் கருது), 'மூர்க்க தேவோ பவ' (முரடனை தெய்வமாகக் கருது) என்று மேலும் இரண்டையும் சேர்த்தார் விவேகானந்தர்.

இதன் பொருள் என்ன? ஏழைகளையும் படிப்பறிவற்றவர்களையும் கவனிக்காவிட்டால், ஆதரவு காட்டாவிட்டால், அவர்களுக்குத் தங்கள் பண்பாட்டிலும் சமயத்திலும் சரியான பயிற்சியும் ஞானமும் தராவிட்டால் அவர்கள் மூர்க்கர்கள் முரடர்கள் ஆகி விடுவார்கள்.

காலத்தின் தேவைக்கேற்ற இந்த உபதேசத்தை மகாகவி பாரதியார் உள்வாங்கியதால்தான் 'வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்; பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும்' என்று அவரால் முழங்க முடிந்தது!

நமது மடங்களும் ஆன்மிகத் தலைவர்களும் 'ஏழைகளைப் புறக்கணிக்கக்கூடாது' என்ற ஒன்றை மட்டும் கடைப்பிடித்திருந்தால், இன்று மத வெறுப்புகளும், பரஸ்பர அவ நம்பிக்கைகளும், சாதிகள் சார்ந்த காழ்ப் புணர்ச்சிகளும் நமது மண்ணில் பல பிளவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அவலம் ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

இந்த வரலாற்று உண்மையை நமக்கு சுவாமிஜி 125 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் உரைத்த சொற்பொழிவுகள் மூலமாக எடுத்துரைத்தார்.

அந்த வரலாற்றுப் பிழையை நமது சமுதாயம் புரிந்துகொண்டு விரைவில் பிழைதிருத்தம் செய்து கொள்ளுமா?

# ஸ்ரீநகரில் பயங்கரவாத தாக்குதல்: ஒருவர் பலி: 24 பேர் காயம்

ஸ்ரீநகரில் பாதுகாப்புப் படையினர் மீது பயங்கரவாதிகள் ஞாயிற்றுக்கிழமை கையெறி குண்டை வீசி தாக்குதல் நடத்தியதில், ஒருவர் உயிரிழந்தார்.

காவலர் உள்பட 24 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீநகரின் ஹரி சிங் தெருவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினரை குறிவைத்து ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் பயங்கரவாதிகள் கையெறி குண்டை வீசினர்.

இதில் ஸ்ரீநகரின் நவ்ஹட்டா பகுதியைச் சேர்ந்த முகமது அஸ்லம் மக்தூமி (70) என்பவர் பலியானார். மேலும், ஒரு காவலர் உட்பட 24 பேர் காயமடைந்ததாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். காயமடைந்த அனைவரும் ஸ்ரீமஹாராஜ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதைத்தொடர்ந்து அப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டு, பயங்கரவாதிகளை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### தலைவர்கள் கண்டனம்

இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த முன்னாள் முதல்வா் ஒமர் அப்துல்லா, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக தனது ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல, முன்னாள் முதல்வர் மெஹபூபா முஃப்தி ட்விட்டர் பதிவில், ''ஜம்மு காஷ்மீர் மக்கள் தங்கள் உயிரையே விலையாக கொடுக்க நேரிடுகிறது. துரதிருஷ்டவசமாக, இந்த சண்டையை முடிவுக்கு கொண்டு வர அல்லது ரத்தம் சிந்துவதை நிறுத்த பாகிஸ்தானும் சரி, இந்தியாவும் சரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை'' என்று கூறியுள்ளார். இதுதவிர மக்கள் மாநாட்டுக் கட்சித் தலைவா் சஜத் லோன், அப்னி கட்சித் தலைவர் அல்தஃப் புஹாரி, ஜம்மு காஷ்மீர் பாஜக செய்தித்தொடர்பாளர் அல்தஃப் தாக்குர் ஆகியோர் இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# அறிவித்தல்

## கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

**2007, 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனிகளை கூட்டிணைப்பதற்கான அச்சட்டத்தின் 05(01)(இ) அத்தியாயத்தின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.**

இந்த பத்திரிகை அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்படுவதானது, 2021 டிசம்பர் மாதம் 01ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் ஆவணங்கள் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

| இல | பதிவிலக்கம் | கம்பனியின் பெயர் | விலாசம் | திகதி |
|---|---|---|---|---|
| 1 | GL00249348 | டீவ் பெர்ஸ்ட் எஸ்எல் (கெரண்டீ) லிமிடெட் | 8 A 1/1, விஹாரா வீதி, கல்கிஸ்ஸ | 01/12/2021 |
| 2 | GL00249365 | தேல்புரோ (கெரண்டீ) லிமிடெட் | 16, மந்திரி பிளேஸ், கொழும்பு 5 | 01/12/2021 |
| 3 | PV00249222 | கண்டி கெலரி (பீவீடீ) லிமிடெட் | 274, பிரதான வீதி, கிண்ணியா-03, திருகோணமலை | 01/12/2021 |
| 4 | PV00249223 | ஆர்ட்சன்ஸ் ஒப் ஹொஸ்பிட்டாலிட்டி (பீவீடீ) லிமிடெட் | 3/50 கண்டாவல மாவத்தை, இரத்மலானை | 01/12/2021 |
| 5 | PV00249224 | யான் லேப்ஸ் (பீவீடீ) லிமிடெட் | இல. 3/12, 3 வது ஒழுங்கை, அத்துருகிரிய வீதி, மலபல்ல, கொட்டாவ | 01/12/2021 |
| 6 | PV00249225 | பேசிக் பிளேவர்ஸ் (பிரைவட்) லிமிடெட் | இல. 112-A, லயன் சிட்டி, சீதுவ | 01/12/2021 |
| 7 | PV00249226 | ஸ்பேசஸ் லிவிங் (பீவீடீ) லிமிடெட் | இல. 58, ஜனதா மாவத்தை, டெம்ப்ளர்ஸ் வீதி, கல்கிஸ்ஸ | 01/12/2021 |
| 8 | PV00249227 | எனிமோர் வெடிங்ஸ் (பீவீடீ) லிமிடெட் | 368/10/C/1 ரதென்வத்த வீதி, கொட்டிகாவத்த | 01/12/2021 |
